26வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com






நதி 26 பாலம் 14 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JULY 15, 2016

# இன்னும்பல செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்!

இலங்கை அரசாங்கம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் இன்னும்பல செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என ஐக்கியநாடுகளின் மனித உரிமை மாநாட்டில் மேற்குலக நாடுகள் வலியுறுத்தின.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 32ஆவது மாநாடு 2016 யூன் 13 இல் இருந்து 2016 யூலை 1ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இந்த மாநாட்டில் மனித உரிமைகள் சபையின் உயர் ஆணையாளர் Zeid Raad Al Hussein இலங்கை அரசின் மனித உரிமைகள் தொடர்பாக கடந்த முறை (2015 ஒக்ரோபர்) நிறைவேற்றிய தீர்மானத்தின்படி தற்போதைய நிலவரம் தொடர்பாக ஒரு வாய்மூல அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதைத்தொடர்ந்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீராவும் ஓர் அறிக்கையை வாசித்தார். இவற்றின் பின்னர் மேற்குலக நாடுகள் சில கருத்துத் தெரிவிக்கையில் மேலே கூறியவாறு இலங்கை அரசாங்கம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விடயத்தில் இன்னும் பல செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தன.

மனித உரிமைகள் மாநாட்டில் Al Hussein உரையாற்ற சிறிது நாட்களுக்கு முன்னர் இலங்கை அரசாங்கம் பாதுகாப்புப் படைகள்வசம் இருந்த 700 ஏக்கர் காணியை அதன் உரிமையாளர்களிடம் திருப்பிக் கையளித்ததுடன் காங்கேசன்துறைப் புகையிரத நிலையத்தையும் பாதுகாப்புப் படைகள்வசம் இருந்து விடுவித்தது. இதில் 200 ஏக்கர் தெல்லிப்பளையை சூழ உள்ள பகுதிகளிலும் மீதி 500 ஏக்கர் கிளிநொச்சியிலும் பாதுகாப்புப் படைகள் வசம் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.



**யூரோ கோப்பை கால்பந்துத் தொடரில் போர்த்துக்கல் அணி சாம்பியன் பட்டத்தை வென்றது**

மனித உரிமைகள் சபையின் உயர் ஆணையாளர் Al Hussein தனது உரையில் வடகிழக்கு மாகாணங்களில் இன்னமும் அதீத இராணுவம் தங்கியுள்ளது எனவும் இராணுவ வசம் உள்ள காணிகளை அரசு திருப்பிக் கையளிப்பதில் தாமதம் காட்டுகிறது என்றும் தெரிவித்தார். அவர், அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்ப உறுதியான நடவடிக்கைகளை போதியளவும் விரைவாகவும் எடுக்கவில்லை என்றார்.

Al Hussein கடந்த பெப்ரவரியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் அவரது வாய்மூல அறிக்கையில் நேரில் கண்ட, கேட்ட பல விடயங்கள் இருந்தன. அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கை அரசாங்கம் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள பல வழக்குகளை விரைவாக நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு நியாயமான தீர்ப்புகள் வழங்குவதன் மூலம் பொதுமக்களினதும் சர்வதேசத்தினதும் நம்பிக்கையைப் பெறவேண்டும் என்றார். மனித உரிமைகள் சபை முன்மொழிந்த தீர்மானத்தில் உள்ள பொறுப்புக்கூறும் பொறிமுறையில் சர்வதேசம் பங்கு பெறுதல் மிகவும் முக்கியமானது என்றார்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...
















இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022



# Homes, Condos, Business, Land, Farms, Rural Homes...!

Scarborough/Kingston Rd




4 yrs 2100 sft, 4 bm 3 wsrm semi detach

Warden n St clair



3 bm/ 3 wsrm minutes to subway




Newer Monarch Condo rented 1800/- investment, South/West Corner Suite With Unobstructed City View. Excellent Layout 876 Sq. Ft.+ 55 Sq. Balcony, Hardwood; Fairview Mall & Subway; Minutes To Hwy 404&401. Concierge, Large Exercise Room, Indoor Swimming Pool, Guest Room, Steam Room, Bbq Deck Fr Entertaining, Designer Decorated Special Occasion/ Party Room With Server Y, Bar Area, Seating Lounge , Flat Scream Tv , Billiard Table

Markham /castlemore



3 bm 4 wsrm 2900 sqft $1149k

Kawartha Lakes ontario




611+ Acres In 3 Separate Par-

Eglinton/mccowan



3 bm/ 3 wsrm minutes to subway

Near Simcoe lake



3260 Sqf Ft Apb On A 50 Foot Lot.
4 bm 4 wm new home

## 0.5% Listing commission

## Pat Pushpakanthan

Real Estate Broker **Hall of Famer**

Our MLS listing include:

- Free Professional Photography
- Free Professional virtual tour
- Free custom website of your home
- Free Home Staging
- Free Feature Sheets
- Free UTube Video
- Free Online Marketing , Open house and more..

**416-894-1187**

**PAT WILL BEAT ANY DEAL*!!**

*To buy Home, New Condos, commercial, Farms, Lands..*

*Call Me For Free service!*




Century 21 BROKERAGE AFFILIATE REALTY INC
OFF: 416-290 1200

poomi2025@gmail.com

Profit From 15 years of Real estate Success

*From , valid only upto june 15/16, *Not intended to solicit existing buyers and sellers, under contract

Eglinton/ Midland




Hardwood Floor 3 bm/ 2wsrm


County Road 47 Rd Ramara on
$155 k 99 acres



On Paved Road Near Brechin And Lake Simcoe ,Vacant Land

Kingston Rd/ West Of Midland

Store With Apt/ Restaurant



Great Opportunity For Investment Property Or Own To Operate Your Restaurant



## FOR ALL YOUR REAL ESTATE & INVESTMENT NEEDS...

கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது

**SALES REPS. WELCOME....**

**Tel: 416-321-6969**



HOMELIFE HIGHER STANDARDS

**Raja Mahendran,P.Eng.**
**(Broker/ Owner)**

**HomeLife/GTA Realty Inc.Brokerage. Inc.** Brokerage
GTA SQUARE 5215 Finch Ave. East. Unit #203 Toronto ON. M1S 0C2
Independently Owned & Operated



## Friends MATRIMONY



திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...

சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்

- ✓ 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
- ✓ மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
- ✓ அல்லது தொலைபேசி, தபால், email லூடாக பதிவு செய்யலாம்

**info@friendsmatrimony.com**

**www.friendsmatrimony.com**

Choose Your Life Partnar Here

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m

| Sri Lanka | Canada |
| --- | --- |
| Ph: 94-112-363663 | info: 647-709-1536 |
| No-11- 2/1, 33rd lane, | GTA Square |
| Wellawatta, | 5215 Finch Ave. E. Unit 257 |

# இன்னும்பல...

## 01ஆம் பக்கத்தொடர்ச்சி

Al Hussein விசாரணைகளில் சர்வதேசம் பங்குபற்றுவதால் விசாரணைக்கு ஒரு நம்பகத்தன்மையையும், சுதந்திரமாக பாகுபாடில்லாமல் நடைபெற்றது என ஒரு உத்தரவாதத்தையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கும் என்றார். இலங்கை அரசு மனித உரிமைகள் விடயத்தில் எடுத்துவரும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை வரவேற்று உறுதிப்படுத்திய Al Hussein ஓர் அரசாங்கம் ஒரேமுறையில் அரசியலமைப்பு சீர்திருத்தம், பொருளாதார மீட்சி, பாதுகாப்புத்துறை சீர்திருத்தம் என்பவற்றைக் கையாள்வதில் ஏற்படும் கஷ்டத்தைத் தான் உணரும் வேளையில் பாதிக்கப்பட்டவர்களது பொறுமையைச் சோதிக்காதவாறு அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும் விதத்தில் அவ்விடயத்திலும் அரசு நிரந்தரமான, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மனித உரிமைகள் சபையின் உயர் ஆணையாளரின் பேச்சின் பின்னர் உரையாற்றிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இலங்கை அரசாங்கம் பொதுமக்களிடம் இருந்து பெற்ற காணிகளை 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் திருப்பியளிக்க வேண்டும் என்று இராணுவத்திற்கு ஆணித்தரமாக உத்தரவிடப்பட்டுள்ளது என்றார். அரசாங்கம் தேசிய அபிவிருத்தி நோக்கங்களுக்காக வைத்திருக்கும் தனியாருக்குச் சொந்தமான காணிகளுக்கு முழுமையான நட்டஈடு காணி சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படும் என்றார்.

'காணாமல் போனோர் அலுவலகம்' தொடர்பான சட்டவரைபை அமைச்சரவை அங்கீகரித்தது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் ஒரு மைக்கல் என தெரிவித்த அமைச்சர், இது தொடர்பாக சட்டமூலம் நாடாளுமன்றத்தில் இந்த யூலை மாதத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களுக்கு நிரந்தர தீர்வு ஒன்று வழங்கும் திட்டம் தற்போது ஒரு குழுவினால் ஆராயப்பட்டு வருகிறது. அது விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். தற்போது நடைமுறையில் உள்ள எல்லோராலும் விமர்ச்சிக்கப்படுகின்ற 'பயங்கரவாதத் தடைச்சட்டம்' ஒரு புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தால் மாற்றப்படும்.

அரசாங்கம் சித்திரவதைக்கு பூச்சிய சகிப்புத் தன்மையை (Zero tolerance) தனது கொள்கையாகக் கொண்டிருந்தாலும் சில வேளைகளில் சில இடங்களில் சித்திரவதைகள் நடைபெறுகின்றன என ஒத்துக்கொண்ட அமைச்சர் இவ்வாறான சித்திரவதைகள் நடைபெறும் சம்பவங்கள் நாட்டில் மிகவும் குறைந்துள்ளது நிச்சயம் என்றார்.

பொறுப்புக்கூறல் பொறிமுறை விசாரணைகளில் சர்வதேசம் பங்குபற்றுவது பற்றிக் கூறிய அமைச்சர் இது தொடர்பாக நிலவிவரும் இரண்டுபட்ட கருத்துக்கள் ஓர் ஆரோக்கியமான ஜனநாயக மற்றும் ஆலோசனை செயல்முறையை வெளிப்படுத்துகின்றன என்றார். ஆனால் இவ் விசாரணை பற்றிய தீர்மானம் இறுதியாக எடுக்கப்படும்போது அது ஒரு நியாயமான விசாரணையாகவும், எல்லோராலும் ஏற்றுக்




கொள்ளப்படக்கூடிய விசாரணையாகவும் அதுவும் சிறப்பாக பாதிக்கப்பட்டவர்களால் ஏற்றுக்கொள்ளபடக்கூடிய விசாரணையாகவும் இருக்கும் என்றார். அமைச்சர் தனது உரையின் முடிவில் எமக்கு முன்னுள்ள பாதை நிச்சயமாக சவால்கள் நிறைந்ததாகவுள்ளது. ஆனால் அதில் நாங்கள் திடமாகவும் உறுதியாகவும் பயணிக்கின்றோம். அது ஒரு சமரசமான தீர்வை நோக்கிச் செல்கிறது என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்றார். இறுதியில் மேற்கத்தைய நாடுகள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் முன்னேற்றகரமான திட்டங்களை வரவேற்றதுடன் இன்னும்பல செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தின.

கடந்தகால நடவடிக்கைகளை கையாளுவதில் ஒரு விரிவான அணுகு முறையை செயற்படுத்தி அரசநிறுவனங்களில் மக்களின் நம்பிக்கையை மீளப்பெறுவேண்டும் எனவும் எல்லா மக்களுக்குமான ஓர் அரசியல் தீர்வை அரசு கொண்டுவர வேண்டும் எனவும் பிரிட்டன் கூறியது.

இலங்கை அரசு நம்பகமான நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்திற்கான வழிமுறைகளை அமைக்கத் தொடர்ந்தும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று அமெரிக்கா கூறியது.

இலங்கை எடுத்து வரும் திட்டங்களை வரவேற்றதுடன் இலங்கை அரசு இன்னமும் ஒரு நீண்டபாதையின் ஆரம்பத்தில் தான் நிற்கிறது. இலங்கை அரசின் முயற்சிகள் 2015 ஒக்ரோபரில் எடுத்த தீர்மானத்திற்கு ஏற்ப எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக அமைய வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறியது.

இலங்கை அரசின் முயற்சிகளுக்கு இலங்கையில் அரசியல் எதிர்ப்புகள் இருப்பதைச் சுட்டிக்காட்டி இலங்கை அரசின் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் நாட்டின் இன மற்றும் கலாசார பன்முகத் தன்மையை ஒத்துக்கொள்ளுகிற நல்லிணக்கத்தை ஏற்படுத்த கூடியதாக அமைய

தொடர்ச்சி 10ஆம் பக்கம்



# Another Project By TRIDEL

# "Via Bloor"

## At Bloor & Parliament





# For Early Reservation and Special Prices**

**Please Call: 416 321 6969**

TRIDEL
BUILT FOR LIFE

**HomeLife/GTA Realty Inc.,** Brokerage*

GTA SQUARE 5215 Finch Ave. East. Unit #203 Toronto ON. M1S 0C2

HOMELIFE
HIGHER STANDARDS

** Some Conditions will Apply


* Independently Owned & Operated

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க,
வீடு வாங்க, விற்க

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

| BEST RATES FOR "AAA" CLIENTS | |
|---|---|
| 5 Yrs Variable : | Call Us |
| 2 Yrs Fixed Rate : | 2.09%* *OAC |
| 5 Yrs Fixed Rate : | 2.39 % * |

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00**




உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit
மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி
எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION

எமது முகவரி

**1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)**



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

And,,
*For All Your Real Estate Services*

# சர்வதேச நீதிபதிகளைப் புறக்கணிக்கும் அரசாங்கம் மாற்றாக என்ன திட்டத்தை முன்வைக்கப் போகின்றது?

மைத்திரி-ரணில் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர், அவர்கள் சர்வதேச நல்லுறவைப் பலப்படுத்தும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றதனை அவதானிக்க முடிகின்றது. இதன்மூலம் இலங்கை மீது முன்னர் விதிக்கப்பட்டிருந்த சர்வதேச தடைகள் சில தளர்வடைந்துள்ளதும் தெரிந்த விடயங்களே.

இவ்வகையில், கடந்த மாத இறுதியில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரிலும் இலங்கைக்கு ஒரு சுமுகமான நிலைமை காணப்படலாம் என இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால், அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. குறித்த கூட்டத்தொடர் இலங்கைக்கு தோல்விகரமானது என்று கூறக்கூடிய அளவிற்கு அமைந்து விட்டது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் செயித் அல் - ஹுசைன் இலங்கையின் சமகால நகர்வுகள் தொடர்பில் ஆழமான அவதானிப்பை மேற்கொண்டு வந்துள்ளார் என்பதை அவரது கருத்துக்கள் வெளிப்படுத்தின. பொறுப்புக் கூறல் விடயத்தில் இலங்கை இன்னும் சரியாக செயற்படவில்லை என்பதை அவர் தனது அறிக்கையினூடாக தெளிவான முறையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

- விகிர்தன் -

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் படையினரின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்பதையும், போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை நீதியின் முன்னிறுத்த வேண்டும் என்பதையும், அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிப் போரின் போது, தடைசெய்யப்பட்ட கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டமை குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புடன் விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கைதுகள், சித்திரவதை, பாலியல் வன்முறைகள், படையினரின் கண்காணிப்புகள், அச்சுறுத்தல்கள் குறித்து தொடரும் குற்றச்சாட்டுக்களுக்கு உடனடியாகத் தீர்வைக் காண வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவை எல்லாவற்றிற்கும் அப்பால், போர்க் குற்ற விசாரணை தொடர்பில் சர்வதே நீதித்துறையின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார். இக்கூட்டத் தொடரில் பங்கேற்ற அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளின் பிரதிநிதிகளும், சில அமைப்புக்களின்



பிரதிநிதிகளும் கூட சர்வதேச பங்கேற்றலை ஆதரித்தே கருத்துக்களை வெளியிட்டனர். நியூசிலாந்து நாட்டின் பிரதிநிதி உரையாற்றுகையில், இலங்கையின் பொறுப்புக் கூறல் செயற்பாட்டில் சர்வதேச நாடுகளின் நீதிபதிகளின் பங்களிப்பு மிகவும் அவசியமானது என்பதை வலியுறுத்துகின்றோம் என்றார்.

அனைத்து விதமான அநீதிகளுக்கும் எதிரான அமைப்பின் பிரதிநிதி உரையாற்றுகையில், உள்ளக விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச பங்களிப்பு என்பது அவசியமானது எனவும், சர்வதேச பங்களிப்பானது பிரேரணை அமலாக்கத்தை வெற்றியடைச் செய்யும் என்றும் தெரிவித்துள்ளார். இதுவே இன்று இலங்கை அரசாங்கத்திற்கு மிகுந்த சிக்கலை ஏற்படுத்தும் விடயமாக மாறியுள்ளது. இது சம்பந்தமாக ஒரு சமாளிப்புக் கருத்தை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்து வந்தாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையில் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமளிக்கப் போவதில்லை என்பதை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. கூட்டத்தொடருக்கு முன்னதாகவே பல்வேறு சந்தர்ப்பங்களில் சர்வதேச நீதிபதிகளின் பிரசன்னம் தேவையில்லை உள்நாட்டு நீதி விசாரணையே போதுமானது என்று அவர் கூறிவந்த போதிலும் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரின் பின்னர் இக்கருத்தை அவர் இன்னும் அழுத்தமாகத் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர், சமய நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையின் உள்நாட்டு நிர்வாகத்திலோ அல்லது நீதித்துறையின் செயற்பாடுகளிலோ வெளிநாட்டு நீதிபதிகள் அல்லது சர்வதேச நீதித்துறை சார்ந்தவர்கள் தலையிடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை எனத் தெரிவித்திருக்கின்றார். தான் ஜனாதிபதியாக இருக்கும்வரை இதற்கு இடமளிக்கப்போவதில்லை என அவர் உறுதிபடக் கூறியுள்ளார்.

சர்வதேச நீதித்துறையின் பங்களிப்பை ஜனாதிபதி நிராகரிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்த நிலையில், அக்கூற்றை நிராகரிக்கும் வகையில் ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார். வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டுவருவது மற்றும் வெளிநாட்டு இராணுவ நீதிமன்றங்கள் குறித்து பல்வேறு தரப்பினரும் பல்வேறு இடங்களில் என்ன கருத்தைத் தெரிவித்தாலும் தான் அதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்றும், இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை போன்றவற்றிற்கு சவால் விடுக்கும் வகையில் எந்தவித தேசிய மற்றும் சர்வதேச நடவடிக்கைகளுக்குத் தான் அனுமதியளிக்கப்போவதில்லை என்றும் ஜனாதிபதி மைத்திரி கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆகவே, சர்வதேச நீதித்துறையின் அவசியம் தொடர்பில் ஐ.நா ஆணையாளர் தெரிவித்த கருத்துக்களை முற்றுமுழுதாக இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது என்பதையே ஜனாதிபதியின் இந்தக் கருத்துப் புலப்படுத்தியுள்ளது.


இதேவேளை, ஜெனீவா கூட்டத் தொடரில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்த கருத்துக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் வரவேற்றுள்ளதோடு, பாராட்டியும் உள்ளன.

முக்கியமாக, இராணுவத்தினர் சட்டவிரோதமான முறையில் கைப்பற்றியுள்ள தனியார் காணிகளை விடுவிப்பதில் காணப்படும் தாமதம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வருகின்றமை, அதனை நீக்குவதற்கு அரசாங்கம் தவறியுள்ளமை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள நபர்களை விடுவிப்பது தொடர்பாக வழங்கிய வாக்குறுதியினை நிறைவேற்றாமை மற்றும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொது மக்கள் தொடர்ச்சியாக கண்காணிப்புக்கு உட்படுத்தப்படல் மற்றும் அவர்கள் துன்புறுத்தல்களுக்கு ஆளாதல் என்பவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணையில் சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு கட்டாயம் இருக்க வேண்டும் என்பதை உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் விரைவில் தெரிவிக்கவுள்ளதாக, தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பு கட்டாயம் இருக்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருகின்றது. இந்த நிலைப்பாட்டில் கூட்டமைப்பு உறுதியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், சர்வதேச தலையீடு என்பதையே ஒட்டுமொத்தமாக நிராகரித்துள்ள இலங்கை அரசாங்கம் ஐ.நா மனித உரிமைகள்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.

2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரைக் கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜுலை 2016)

3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)

4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்ரில் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப் பார்த்து வருகிறோம்.

2016 நொவம்பர் 8இல் நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருக்கும் இரு பிரதான கட்சிகளான ஜனநாயகக் கட்சிக்கும் குடியரசுக்கட்சிக்குமான ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு அமெரக்காவின் 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களிலும் நடந்து முடிவடைந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட வேட்புமனுவைத் தாக்கல் செய்த 1,756 பேரில் ஆக 27 பேரே $200,000 இற்கு மேல் தமது சொந்தப்பணத்தை செலவழித்து பிரசாரங்கள் செய்தனர். இவர்களில் தற்போது மீதமுள்ளவர்கள் 4 பேர். அவர்கள் ஜனநாயகக்கட்சியின் சார்பில் Hilary Clinton, குடியரசுக்கட்சியின் சார்பில் Donald Trump, Libertarian கட்சியின் சார்பில் Gary Johnson, பசுமைக்கட்சியின் சார்பில் Jill Stein ஆவார்கள். ஏனையவர்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளார்கள் அல்லது தாமாகவே விலகி விட்டனர்.

இவர்களில் பசுமைக்கட்சியினதும், Libertarian கட்சியினதும் வேட்பாளர்கள் ஏற்கனவே அக்கட்சிகளால் உறுதிசெய்யப்பட்டுள்ளார்கள். குடியரசுக்கட்சியின் வேட்பாளர் குடியரசுக்கட்சியின் தேசிய மாநாட்டில் 2016 யூலை 18இல் உறுதிசெய்யப்படுவார்.



ஏற்கனவே Donald Trump தான் அதிக பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றதால் தான் குடியரசுக்கட்சியின் உத்தியோகபூர்வமான ஜனாதிபதி வேட்பாளர் எனக் கூறிக்கொண்டு தனது உபஜனாதிபதியை தெரிவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

Donald Trump யாரை உபஜனாதிபதி வேட்பாளராக கட்சி மாநாட்டில் அறிமுகப்படுத்துவார் எனத் தமது ஊகங்களை ஊடகங்கள் வெளியிட்ட வண்ணமாக உள்ளன. ஊடகங்களின் கருத்துப்படி உபஜனாதிபதியாக Donald Trump தெரிவு செய்யக்கூடியவர்களில் முன்னணியில் இருப்பவர் Mike Pence ஆவார். இவர் இன்டியானா மாநில ஆளுனர் ஆக உள்ளார். இவரைத் தவிர ஊடகங்கள் Paul Ryan மற்றும் Ted Cruz ஆகியோரையும் உபஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாம் எனக் கூறுகின்றன. Paul Ryan தற்போது அமெரிக்க நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சபையில் சபாநாயகராக இருக்கிறார். Ted Cruz ரெக்ஸாஸ் மாநில செனட்டரும் Donald Trump உடன் குடியரசுக்கட்சி வேட்பாளராக வரப் போட்டியிட்டு இரண்டாம் இடத்துக்கு வந்தவரும் ஆவார்.

ஜனநாயகக்கட்சியின் வேட்பாளர் ஜனநாயகக்கட்சியின் தேசிய மாநாட்டில் 2016 யூலை 25இல் உறுதிசெய்யப்படுவார். இதுவரை காலமும் Hillary Clinton இற்கு எதிராக ஜனநாயகக் கட்சியில் போட்டியிட்டு எவரும் எதிர்பார்க்காதபடி 1,894 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்ற Bernie Sanderes 2016 யூலை 12இல் New Hampshire இல் நடைபெற்ற Hillary இற்கு ஆதரவான ஊர்வலத்தில் தனது ஆதரவை Hillary இற்கு தெரிவித்துள்ளார்.

Bernie அங்கு உரையாற்றுகையில் தான் இங்குவந்தது தனது பூரண ஆதரவை எந்தவித ஐயத்துக்கும் இடமில்லாமல் Hillary க்கு கொடுக்கிறேன் என்று தெரிவிப்பதற்காக என்று கூறினார். இந்த ஜனாதிபதித் தேர்தல் Hillary Clinton அல்லது Donald Trump அல்லது Bernie Sanders பற்றியது அல்ல. இது அமெரிக்க மக்கள் தங்களுக்கு முன்னுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது பற்றிய தேர்தல். தனக்கு அமெரிக்க மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடியவராக எந்தவித ஐயப்பாடுகளும் இல்லாமல் தெரிபர் Hillary Clinton தான் என்றார்.


Hillary Clinton தான் ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் எனவும் Hillary Clinton தான் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி எனவும் Bernie Sanderes மக்களின் பலத்த கரகோஷத்திற்கு மத்தியில் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் Donald Trump மெக்சிகோ மக்களையும், இஸ்லாமிய மக்களையும், பெண்களையும், ஆபிரிக்க அமெரிக்கர்களையும் மற்றும் முன்னாள் போர் வீரர்களையும் மதிக்காமல் மரியாதைக் குறைவாகப் பேசுகையில் Hillary Clinton அமெரிக்க மக்களின் பன்முகத்தன்மையை அறிந்து அதற்கு மதிப்பளிப்பது அவரினுடைய மிகப்பெரிய பலம் என்றார்.

Bernie Sanderes இன் Hillary இற்கு ஆதரவான இந்தப்பேச்சை அடுத்து ஊடகங்கள் நடத்திய கருத்துக்கணிப்பின் படி Bernie இன் ஆதரவாளர்களில் 85%மானோர் Hillary இற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் மீதி 15%மானோர் பசுமைக்கட்சி வேட்பாளர் Jill Stein இற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் Hillary தனது உபஜனாதிபதி வேட்பாளராக இளைப்பாறிய கடற்படைத் தளபதி James Stavridls வை தெரிவு செய்வார் என ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன.


சிவ ஞானநாயகன்

vlambaram@sympatico.ca


கனேடியச் செய்திகளுக்கான முதன்மைத் தளம்

தமிழ்வணக்கம்.கொம்

www.tamilvanakkam.com








- ஆதித்தன் -

# இந்திய மீனவர்களின் எல்லை மீறலுக்குத் தீர்வு இல்லையா?

இலங்கையின் வடமாகாண கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன் பிடிப்பதும், இலங்கை கடற்படையினரால் அவர்கள் கைது செய்யப்படுவதும் இடைவிடாது, தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒன்றாகும். கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையிலேயே கூட இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் நடைபெறுகின்றன. அவர்கள் தாங்கள் அத்துமீறவில்லை என்றும் தங்களின் பகுதிகளுக்குள் வந்து இலங்கைக் கடற்படையினர் கைது செய்கின்றார்கள் என்றும் கூறி வருகின்றனர். தமிழக அரசியல்வாதிகளும் தமிழக ஊடகங்களும் இதனையே கூறுகின்றன. ஆனால், உண்மை அவ்வாறில்லை. இந்திய மீனவர்கள் தெரிந்து கொண்டே எல்லை மீறி வருகின்றார்கள். இலங்கையில் தடைசெய்யப்பட்ட முறைகளைக் கொண்டு மீன்பிடிக்கின்றார்கள். இது வடக்கின் மீனவர்களை பெரிதும் பாதித்து வருகின்றது. இப்போது, அவர்கள் எல்லை கடந்து மீன்பிடிப்பதற்கான அனுமதியை இலங்கை அரசாங்கத்திடம் கோரி வருகின்றனர். இது தொடர்பில் இலங்கை அரசாங்கமும் சில நடைமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது குறித்து நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்கும் போது, மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவுடன் போரிட முடியாது என்றும், இவ்வருடத்திற்குள் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் வடக்கின் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு வலயமொன்றை ஏற்படுத்துவது அல்லது குறிப்பிட்ட தினங்களில் மட்டும் வந்து மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கச்சதீவு உடன்படிக்கையின் அடிப்படையில் இந்திய மீனவர்களின் சில உரிமைகளை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ள பிரதமர் சில மாற்றுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவே கருத்து வெளியிட்டுள்ளார்.



நாடாளுமன்றத்தில், உறுப்பினர்களால் இவ்விடயம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த பிரதமர், இலங்கையின் வடக்கு, கிழக்குக் கடற்பரப்பில் இழுவைப் படகு முறையின் மூலம் இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கைக் கடற்படையின் காவல் ரோந்து படகுகள் மற்றும் ராடர் தொகுதியின் மூலம் பெறப்பட்ட புள்ளிவிபரங்களின் பிரகாரம் மாதமொன்றிற்கு சுமார் ஆயிரம் படகுகள் இந்த நடவடிக்கைகளுக்காக இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கின்றன என்று குறிப்பிட்டார். இவ்விதமான மீன்பிடி முறைகளை கைவிடும்படி இந்திய மீனவர்களுடன் பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆகவே, இவ்வாறான நிபந்தனைகளை இந்திய மீனவர்கள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் சில வரையறையுடன் கூடிய அனுமதி இந்திய மீனவர்களுக்கு வழங்கப் படலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இது குறித்து வட மகாண மீனவர்கள் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளனர். இதனால் போராட்டங்களை முன்னெடுக்க வுள்ளதாகவும் வடமாகாண மீனவர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கை – இந்திய மீனவர்களது 4ஆம் கட்ட பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு முன்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை தாங்கள் சந்திக்க வேண்டும் என்றும் வடபகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கான அனுமதி வழங்குவது தொடர்பிலான விடயம் உள்ளிட்ட, வடபகுதி மீனவர்கள் முகம் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக இவ்விருவருடன் பேச்சு வார்த்தை நடத்த விரும்புவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, தங்களுக்கு மாற்றுத் தீர்வு ஒன்று முன்வைக்கப்படுமானால் இலங்கை அதிகாரிகளுடன் உடனடி பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாராகவுள்ளதாக இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், எந்தவொரு தீர்மானத்தையும் எடுப்பதற்கு முன்னதாக வடமாகாண மீனவர்களிடம் கலந்துரையாடி அவர்களின் சம்மதத்தைப் பெற வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு உள்ளது.

போரின் பின்னர், வடமாகாணத்தில் வாழும் மக்களின் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகளில் வட பகுதி மீனவர்கள் பிரச்சினையும் முக்கியமானது. இதற்கு வடக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ அல்லது வடமாகாண சபையோ அதிகளவு சிரத்தையெடுத்து செயற்படுவதாக தெரியவில்லை. வடக்கின் இராணுவப் பிரசன்னத்தை கட்டுப்படுத்துவது, படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படுவது போன்ற பிரச்சினைகளுக்கு தொடர்ந்து குரல் கொடுத்து வருவது போன்று மீனவர் பிரச்சினைக்கும் குரல் கொடுக்க வேண்டும். ஆனால் அக்குரல் உரத்து ஒலிப்பதாகத் தெரியவில்லை.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுப்பது குறித்தும், இதனால் வடமாகாண மீனவர்கள் பாதிக்கப்படுகின்றமை குறித்தும் இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதை விடவும் தமிழக - இந்திய அரசாங்கங்களுடன் பேச்சுக்களை நடத்துவதே அவசியமானது. இதனை வடக்கிலுள்ள தமிழ் பிரதிநிதிகள் ஏன் நேரடியாக மேற்கொள்ள முடியாது? தமிழக மீனர்கள் கைது செய்யப்படுவது தொடர்பாகவும், அவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிப்பது தொடர்பாகவும் தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதங்களை எழுதி வருகின்றார். இவ்வாறு கடிதங்களையாவது தமிழக - இந்திய அரசாங்கங்களுக்கு ஏன் தமிழ் பிரதிநிதிகள் எழுதவில்லை என்ற கேள்விகளும் எழுகின்றன.

மடிவலை இழுவைப் படகு முறையை முற்றிலும் தடை செய்யும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் கொண்டு வரப்பட்ட பிரேரணையானது நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை விடுப்பதற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சரினால் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது இந்திய மீனவர்களின் மீன்பிடி முறையை கட்டுப்படுத்துமேயல்லாது அவர்கள் எல்லை மீறி மீன் பிடிப்பதை கட்டுப்படுத்தப் போவதில்லை.

வடக்கு மக்களின் நிர்வாகத்தை நடத்துகின்ற மையமாகவுள்ள வட மாகாணசபை தமிழகம் மற்றும் இந்திய அரசாங்கங்களுடன் பேச்சு நடத்துவதற்கு முன்வர வேண்டும். அதற்கான குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். வடமாகாணசபை உறுப்பினர்கள், வடக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளடங்கியதாக இக்குழு அமைக்கப்பட்டு இந்தியத் தரப்புடன் பேச்சுக்களை நடத்தி, பிரச்சினைகளை விளக்கி ஒரு முடிவிற்கு வருவதே சிறந்தது.

போர் நடைபெற்ற காலங்களில் அதிகம் பாதிக்கப்பட்ட தொழில்துறையினராக வடக்கின் தமிழ் மீனவர்கள் இருந்தமை அனைவரும் அறிந்ததே. போரின் பின்னர் அவர்களுக்கான தொழில்துறையை அபிவிருத்தி செய்வதோடு அவர்களுக்கான தடைகள் - சிக்கல்களையும் களைய வேண்டியது தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளின் கடமையாகும். வடக்கில் வாழும் மக்களது பிரதான தொழில்கள் விவசாயமும், கடற்தொழிலுமேயாகும். முன்னரைப் போல, விவசாயம் வடக்கில் நடைமுறையில் இல்லை. நெல், உபஉணவுப் பயிர்ச் செய்கை, தோட்டச் செய்கை என்பன பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளன. வடக்கின் அரிசித் தேவையை பூர்த்தி செய்யும் நெல் உற்பத்திக் களஞ்சியமாக வடக்கிலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் திகழ்ந்தன. குறிப்பாக கிளிநொச்சியின் நெற்செய்கையானது கிளிநொச்சியின் அரிசித் தேவையையும் பூர்த்தி செய்து, யாழ்.மாவட்டத்திற்கும் அரிசியை வழங்கும் வகையில் இருந்தது. வெங்காயம், மரக்கறி போன்றவவையும் உள்ளூரிலேயே உற்பத்தி செய்யப்பட்டு நிறைவைக் காணக் கூடியதாக இருந்தது. தற்போது அவ்வாறான நிலை இல்லை. அரசி உட்பட மரக்கறி வகைகளும் தென்னிலங்கையிலிருந்தே வடக்கிற்கு வருகின்றன. விவசாயிகள், தோட்டச் செய்கையாளர்கள் தங்கள் தொழில்களை விட்டுவிட்டு வேறு தொழில் துறையை நாடிவிட்டனர். இதனால் விவசாயம் வடக்கில் பின்னடைவையே கண்டுள்ளது.

ஆனால், கடற்றொழில் அவ்வாறானதல்ல. அதில் பல்வேறு பிரச்சினைகள், தடைகள் ஏற்பட்டாலும் அத்தொழிலிலிருந்து கடற்றொழிலாளர்கள் விடுபடவில்லை. விடுபடவும் முடியாது. வட மாகாணத்தின் கடல் மிகுந்த வளம் நிறைந்ததாகும். எனவே, வடக்கின் கடற்றொழிலை வளப்படுத்தி, நவீனப்படுத்தி, மீனவர்களுக்குள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது வடக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் பொறுப்பும் கடமையும் ஆகும். இந்திய மீனவர்களின் அத்துமீறல் என்பதே இன்று வடக்கு மீனவர்கள் எதிர்கொண்டுள்ள பிரதான பிரச்சினையாகவுள்ளது. இதற்கு தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதில் அவர்கள் துரிதமாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்பட முன்வரவேண்டும்.

விளம்பரம்™
VLAMBARAM

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| பத்திரிகை ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| பத்திரிகை முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | செல்வி ரஞ்சன்<br>தாரணி இந்திரராஜ் |
| பதிப்பு: | Canyon Press Inc. |

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் ப்பிளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# அவலங்களைப் போக்கும் ஆன்மிக வாழ்வு

மனித வாழ்க்கையை ஒரு பொதுநிலையில் இரண்டாகப் பிரித்துப் பேசுவது வழக்கம். ஒன்று உலகியல் வாழ்க்கை, மற்றையது ஆன்மிக வாழ்க்கை. உலகியல் வாழ்க்கை ஐம்புலன்களின் ஆட்சிக்குட்பட்டது. அதனால் பந்தபாசங்களாற் கட்டுப்பட்டது. ஆன்மிக வாழ்வு ஐம்புலன்களை அடக்கிய வாழ்வு. அதனால் அது பக்குவத்துடன் நடத்தப்பெறுவது. ஆன்மிக வாழ்வை நன்கு விளங்கிக் கொள்வதற்கு முதலிலே ஆன்மிகம் என்றால் என்ன என்று அறிந்துகொள்வது நல்லது.

ஆன்மிகம் என்றால் என்ன?

ஆன்மிகம் என்றதுமே அது சமயத்தோடு தொடர்புடையது, கடவுள் வழிபாட்டுக்கு முதன்மை அளிப்பது, வேத ஆகம விதிகளை நடைமுறைப்படுத்துவது, கோயிலிற் பூசைகளையும் விழாக்களையும் செய்வது, ஒழுக்கத்தை வலியுறுத்துவது என்றெல்லாம் நினைப்பதும் பேசுவதும் வழக்கமாகிவிட்டது. அவ்விதம் நினைப்பவர் முக்கியமான ஒன்றைப் பொதுவாகக் கருத்திலே கொள்வதில்லை - ஆன்மிகம் என்பது தங்களைப்பற்றியது என்று எண்ணத் தவறிவிடுகின்றனர்.

ஆன்மா என்றால் உயிர். பசு என்று சைவசித்தாந்தம் பேசும். பசுக்கள் பலவகையாயினும் ஆன்மிகத்தில் தங்கள் உயிர்களைப்பற்றிச் சிந்தித்து அதற்கு ஈடேற்றந் தரமுயல்பவர் மக்களேயாவர். அதனாலேயே,

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாந் தொழும்(1)

என்றார் வள்ளுவர் பெருமான். 'தன்னுயிர் தானறப் பெறுதல்' என்பது தன்னைத்தான் முழுமையாக அறிதல். முழுமையாக அறிதல் என்றால் என்ன?

குறைகளை மட்டுமன்றி நிறைகளையும் அறிதலே முழுமையாக அறிதல் என்பது. இது சுயவிசாரணை பற்றியது. நாம் எங்களைப்பற்றி ஆராய்தல் வேண்டும்.

நான் ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர்?
என்னை யார் அறிவார்(2)

என்று கேட்கின்றார் மணிவாசகப் பெருமான். இது ஒரு நல்ல ஆய்வு முறை. எங்களைப் பற்றி முழுமையாக அறிவதற்கு இவ்விதம் கேள்விகள் கேட்கவேண்டும். ஆனால் நாம் எங்களைப்பற்றி ஆராய்வது பொதுவாகக் குறைவு. மற்றவர்களைப்பற்றித் துருவித் துருவி ஆராய்வோம். அதுவும் அவர்களின் குறைகளையே அதிகம் பேசுவோம். அதனையும் சோடித்து இல்லாததையும் பொல்லாததையும் வைத்துப் பேசுவோம்.

ஆனால் எங்களைப் பற்றிப் பேசும்பொழுது நிறைவைத்தான் பேசுவோம், குறைகளைப் பற்றிப் பேசவே மாட்டோம். எம்மிடம் குறைகள் கண்டாலும் அல்லது நாம் ஏதும் தவறுகள் செய்தாலும் அவற்றுக்கும் பிறர்தாம் காரணம் என்று சொல்லி அவர்களைத் தூற்றுவோம். ஏனென்றால் நாங்கள் செய்வதெல்லாம் சரி, மற்றவர்கள் செய்வது சரியில்லை - இப்படி ஒரு மனப்பான்மை, ஆணவத்தின் விசித்திரம். இது எங்களைப்பற்றி முழுமையாக அறியாததால் ஏற்படக்கூடிய விளைவு.

தான் அறுதல் - நான் என்னும் முனைப்புக் கெடுதல். பசுக்கள் இயல்பாகவே மலபந்தம் உடையன. மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். மும்மலங்களில் ஆணவம் இருளிலும் கொடியது எனப்படுகின்றது. ஏனெனில் இருள் தன்னைக் காட்டும், பிறபொருள்களை மறைக்கும். ஆனால் ஆணவம் தன்னையும் காட்டாது பிறவற்றையும் அறியவிடாது. ஆணவத்தின் முனைப்புக் கெடுதலே தான் அறுதலாகும். இக்கெடுதி 'எல்லாம் இறைவன் செயல்' என்ற உண்மை நிலைக்கு உயிரை உயர்த்தும். அந்த உயிரை ஏனைய உயிர்கள் எல்லாம் தொழுமாம்.

எனவே ஆன்மிகம் என்பது தன்னைத்தான் அறிதல். தனது நடத்தையில் உள்ள குறைநிறைகளை மதிப்பிடுதல். வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு இவ்வித மதிப்பீடு மிக இன்றியமையாதது.

திருவருளால் அறிதல்

தான் அறுந்து தன்னைத்தான் அறிந்துகொள்வதற்குத் திருவருள் கைகூடுதல் வேண்டும். ஒருமுறை கொழும்புத்துறை சிவயோக சுவாமிகளை அவரது குரு செல்லப்பா சுவாமிகள் 'யாரடா நீ' என்று கேட்டார். சாதாரணமாக இத்தகைய கேள்வி ஒருவருக்குக் கோபத்தை உண்டு பண்ணக்கூடியது, அடிபிடியிலும் முடியக்கூடியது. யோகர்சுவாமிகள் பக்குவம் பெற்ற ஆன்மாவாதலால்,

என்னையெனக் கறிவித்தான் எங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள்குரு நாதன்
அன்னைபிதா குருவானான் எங்கள்குரு நாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள்குரு நாதன்(3)

என்று பாடினார். தன்னைத்தான் அறிதலும் இறையருளால் வரவேண்டியது என்பதைச் சொல்லாமற் சொல்லுகின்றார்.

எல்லாம் இறைவன் செயல் என்று வெறுமனே வாயாற் சொல்லுவதற்கும் தானறப் பெற்ற ஞான நிலையிலே சொல்வதற்கும் வேறுபாடு அதிகம். ஞானநிலை இறை அருளோடு கூடியது. குருவின்றி ஞானம் இல்லை. ஞானம் என்பது பதிஞானம். அவனின்றி அணுவும் அசையாது என்கின்ற ஞானம். அவனை அறிந்து அவனுடன் வாழ்கின்ற வாழ்வே ஆன்மிக வாழ்க்கை. அவனை அறிவதற்கு ஆகாயத்தைப் பார்க்க வேண்டியதில்லை, கோயில் குளங்களுக்கும் அலைய வேண்டியதில்லை.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே (4)

என்ற அப்பர் பெருமான் கருத்துக் கவனிக்கத்தக்கது. இக்கருத்தே இக்காலத்தில் வலுப்பெற்று வருகின்றது. மரபுரீதியாக ஆன்மிகத்தை ஆலயங்களே வளர்த்து வந்தன. இக்காலத்தில் ஆலயம் என்கின்ற நிறுவனத்துக்கு அப்பால் ஆன்மிகத்தை வளர்க்கும் அமைப்புகள் பல தோன்றியுள்ளன. சாயிபாபா பத்தர்கள், பிரம்மகுமாரிகள், அம்மா பகவான் அடியார்கள், மேல்மருவத்தூர் பங்காரு அடிகளின் அடியார்கள் உலகெங்கணும் உள்ளனர். அவர்கள் வீட்டுப் பிரார்த்தனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள் மூலம் ஆன்மிகத்தை வளர்த்து வருகின்றார்கள். ஆலயங்களுக்கு அவர்கள் செல்வது குறைவு.

உடம்பினுள்ளே உறுபொருள்

இறைவன் எங்கும் இருக்கின்றான், எமக்குள்ளேயும் இருக்கின்றான். எமக்குள்ளே இருக்கும் இறைவனைக் கண்டறிதலும் அவனுடன் உறவாடி மகிழ்தலும் ஆன்மிகச் செல்வரின் வாழ்க்கையாகும்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே(5)

என்றார் திருமூல நாயனார். உள்ளே இருக்கும் உறுபொருளை அறிதலே தன்னைத்தான் அறிதலின் உச்சக்கட்டம்.

உறுபொருளை உள்ளே கண்டுவிட்டதால்



கவிஞர் வி. கந்தவனம்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

BAKERY EQUIPMENTS FOR SALE



ELECTRIC PROFFER MACHINE



WELBILT VARIMIXER
80 QUART DOUGH MIXER
3 PHASE



ROYAL CONVENTION OVEN
GAS OPERATED

STORE COOLER SHOWCASES
ALSO AVILABLE FOR SALE

CONTACT : RAJ 416-737-7691
email: rajoy4@yahoo.ca

# இன்னும்பல...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

வேண்டும் என்று நோர்வே கூறியதுடன் இலங்கை அரசு தனது செயற்திட்டத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்கக் கூடியவாறு கடினமாக உழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

அரசியல், சட்ட மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை செய்ய இலங்கை அரசு ஓர் ஒருங்கிணைந்த திட்டமிட்ட அணுகு முறையைச் செயற்படுத்த வேண்டும் என்று கனடா கூறியது.

அனைத்துத் தரப்பிலும் பாதிக்கப்பட்டவர் கள் நீண்டகாலமாக காத்திருக்கிறார்கள். இலங்கை அரசியல் தலைமை நம்பகத் தன்மை உடைய தீர்வுகளை முன்வைத்து விரைவில் இவற்றைத் தீர்க்க வேண்டும் என்று ஜேர்மனி கூறியது.

மனித உரிமைகள் பாதுகாப்பில் இலங்கை எடுக்கும் வலுவான நேர்மறையான




அர்ப்பணிப்பை பாக்கிஸ்தான் வரவேற்றது. இந்தியா இந்த மாநாட்டில்எதுவிதமான கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை.

# சர்வதேச...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆணையகமோ, சர்வதேச நாடுகளோ திருப்தியடையும் வகையில் என்ன மாற்றுத் திட்டத்தை முன்வைக்கப் போகின்றதென் பதே தற்போது எழுந்துள்ள கேள்வியாகும். இதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், வெளி விவகார அமைச்சர் என மூவரும் மாறுபட்ட நிலைப்பாட்டில் உள்ளமை தொடர்பில் பல்வேறுபட்ட விமர்சனங்களும் அரசியல் நோக்கர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. இவர்கள் மூவரும் ஒருமித்த தீர்மானத் திற்கு வராவிடின் சர்வதேச நாடுகளிடையே இலங்கை தொடர்பில் குழப்ப நிலையே ஏற்படும் என ஆய்வாளர்களால் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டில் தாங்கள் சர்வதேசத்தின் பங்களிப்பை இன்னமும் நிராகரிக்க வில்லை. ஜனாதிபதி மற்றும் பிரதமர் தெரிவிப்பது அவர்களின் தனிப்பட்ட கருத்துகளாகும் என்று கூறுகின்றார். ஆனால், கூடிய விரை வில் ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் இந்த மூவரும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். இல்லா விடின் திரிவுபடுத்தப்பட்ட கருத்துகள் சர்வதேச நாடுகளிடையே இலங்கை தொடர்பில் பாரிய குழப்ப நிலையைத் தோற்றுவிக்கும் என நடுநிலையாளர்கள் கூறுகின்றனர்.

இலங்கையின் புதிய நல்லாட்சி அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியே ஆக வேண்டும். இதிலிருந்து தப்பித்தல் சாத்தியமில்லை என்பதே யதார்த்தமாகும்.

# யூரோ கோப்பை கால்பந்துத் தொடரில் போர்த்துக்கல் அணி சாம்பியன் பட்டத்தை வென்றது

## விளையாட்டுத் தகவல்கள்

யூரோ கோப்பை கால்பந்து தொடரின் இறுதிப்போட்டியில் பிரான்ஸ் அணியை தோற்கடித்து போர்த்துக்கல் சாம்பியன் பட்டத்தை வென்று வரலாறு சாதனை படைத்தது. ஐரோப்பிய அணிகள் மட்டும் பங்கேற்கும் 15ஆவது யூரோ கோப்பை கால்பந்து தொடர் பிரான்சில் நடைபெற்றது. மொத்தம் பங்கேற்ற 24 அணிகளில் ஸ்பெயின், ஜெர்மன் உள்ளிட்ட 22 அணிகள் வெளியேறின. இறுதிப் போட்டிக்கு உலக தரவரிசையில் 8ஆவது இடத்திலிருக்கும் ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணி, 17ஆவது இடத்திலிருக்கும் பிரான்ஸ் அணியை சந்தித்தது.

யூரோ கோப்பை கால்பந்து போட்டியின் இறுதிப்போட்டியில் பிரான்ஸ் மற்றும் போர்த்துக்கல் அணிகள் போட்டியிட்டன. தனது சொந்த மண்ணில் விளையாடிய பிரான்ஸ், ஆரம்பம் முதலே தாக்குதல் பாணியில் ஈடுபட்டது. முதல் முறையாகக் கோப்பையை கைப்பற்ற போர்த்துக்கல் வீரர்கள் ஆடுகளத்தில் தீவிரமாகப் போராடியதை சற்றும் குறைத்து மதிப்பிட முடியாது. கூடுதல் நேரத்தில் 109ஆவது நிமிடத்தில் ரொனால்டோவுக்கு மாற்று வீரராகக் களமிறங்கிய ஆன்டனியோ ஈடர் அசத்தலாக கோல் அடித்து அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தார்.

சொந்த மண்ணில் உள்ளூர் ரசிகர்கள் முன்னிலையில் விளையாடிய பிரான்ஸ் அணி தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்திலேயே போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ காயம் காரணமாக மைதானத்திலிருந்து கண்ணீர் விட்டபடியே வெளியேறினார். ரொனால்டோ வெளியேறியதால் அந்நாட்டு ரசிகர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். ரொனால்டோ இல்லாமல் போர்த்துக்கல் அணி எந்தளவு தூரம் கோப்பையை வெல்லும் வாய்ப்பை தக்கவைத்திருக்கும் எனும் கேள்வி அனை-வரின் மனதிலும் எழுந்தது.



இரு அணிகளும் அடிக்கடி எதிரணியின் கோல் போஸ்ட்டை முற்றுகையிட ஆட்டத்தில் அனல் பறந்தது. ஆனால் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்த முயற்சி பலனளிக்காததால் முதல் பாதி ஆட்டம் கோலின்றி சமநிலை வகித்தது. இரண்டாவது பாதி ஆட்டத்திலும் இரு அணி வீரர்களும் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை மாறி மாறி வீணாக்கினர். இரு அணிக் கோல் கீப்பர்களும் எதிரணியின் கோல் அடிக்கும் முயற்சியைத் தொடர்ந்து தடுத்தனர். ஆட்டத்தின் இறுதியான 90ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் கிக்னாக் ஆறடி தொலைவிலிருந்து அடித்த பந்து கோல் போஸ்ட்டில் பட்டு வெளியேற பிரான்ஸ் ரசிகர்கள் அமைதியாக ஆட்டத்தை ரசித்தனர். ஆட்ட நேர முடிவில் இரு அணியும் கோல் அடிக்காததால் ஆட்டம் கூடுதல் நேரத்துக்குச் சென்றது. கூடுதல் நேரத்தில் 109ஆவது நிமிடத்தில் ரொன-ால்டோவுக்கு மாற்று வீரராக களமிறங்கிய ஆன்டனியோ ஈடர் அசத்தலாக கோல் அடிக்க பிரான்ஸ் அணி வீரர்கள் திகைப்பில் ஆழ்ந்தனர்.

கடைசிவரை பிரான்ஸ் அணியால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் போர்த்துக்கல் அணி முதன் முறையாக யூரோ கோப்பையை கைப்பற்றி புதிய வரலாற்றைப் படைத்தது. இதன்மூலம் யூரோ தொடர் மகுடத்தைச் சூட்டிக் கொண்டது போர்த்துக்கல் அணி. இறுதிப் போட்டி தன்னால் வெற்றி பெறவில்லை என்ற போதும் கிறிஸ்டியானோ ரொனால்டோ மிகவும் உணர்ச்சிவசத்துடன் வெற்றியைக் கொண்டாடினார். விளையாட முடியாமல் கண்ணீருடன் மைதானத்தை விட்டு வெளியேறிய அவர் வெற்றிக் கோப்பையை கையில் வாங்கிய அந்த தருணத்திலும் கண்ணீர் வடித்தார். இம்முறை அது ஆனந்தக்கண்ணீர். யூரோ கோப்பையை ஆசையுடன் முத்தமிட்டார். காரணம், அவர் ஒரு புதிய வரலாறை உருவாக்கியுள்ளார் என்பதை போர்த்துக்கல் ரசிகர்களால் மறக்க முடியாது.

19 வயதில் முதன்முறையாக யூரோ தொடரில் களமிறங்கிய ரொனால்டோ இதுவரை நான்கு முறை யூரோ கால்பந்து போட்டிகளில் போர்த்துக்கல் அணிக்காக விளையாடி அதிகம் கோல் அடித்த வீரர் எனும் பெருமையை பெற்றிருந்தார். தற்போது 31 வயதாகும் அவர் தனது வழிநடத்தலின் கீழ் போர்த்துக்கல் அணியை இறுதிப் போட்டிவரை கொண்டு வந்து கோப்பையை வெல்லத் தானும் பின்னணியாக இருந்துள்ளார்.

யூரோ கால்பந்து கோப்பையை தங்கள் நாட்டு அணி வென்றதை போர்த்துக்கல் ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர். பிரான்ஸ் தனது சொந்த மண்ணில் ஒரு போட்டியில் தோற்றிருக்கிறது. அதுவும் யூரோ இறுதிப் போட்டி என்பதுதான் அவர்களுக்கு சோகமாகிப் போனது.

AZ DRIVERS WANTED - ASAP

- Dedicated Run
- Newer trucks - Volvo
- GTA city drivers $20.00 / HR
- Paid every weekly
- .50 Single / .55 team

Minimum 2-3 Years Driving Experience
Owner operator wanted / paid weekly

Contact: 416-737-5728 Email:info@nylogistics.ca

# அடமானம் பெறுவதில் மேலும் இறுக்கம்

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் 467**

2008ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு கட்டுக்கடங்காத, விலை ஏற்றத்தை ஒடுக்குவதற்குப் புதிது புதிதான பல உத்திகளைக் கையாண்டு வருகின்றது. இதுவரை எதுவித பலனும் கிடைத்ததாகத் தெரியவில்லை. குறிப்பாக ரொறொன்ரோ, வன்கூவர் பகுதியில் விலையின் அதிகரிப்பு குறைவதாகத் தெரியவில்லை. இந்த மாதத்தின் (யூலை 2016) ஆரம்பத்தில் வெளிவந்த ஆதன அறிக்கையில் 2015 ஆம் ஆண்டு யூனிற்கும் 2016ஆம் ஆண்டு யூனிற்குமிடையிலான விலை அதிகரிப்பு 20% ஆகக் காணப்படுகின்றது.

கடந்த பல வருடங்களாகத் தனி வீடுகள், இரு சேர்ந்த வீடுகள், பல சேர்ந்த வீடுகள் மட்டுமே விலை அதிகரிப்பு அதிகமாகக் காணப்பட்டது. இப்பொழுது நிலைமை மாறுவதனைக் காணலாம். அதாவது அடுக்கு மாடி மனைகளிலும் இந்த நிலைமை ஆரம்பித்துள்ளது. அடுக்குமனை வீடுகளிலும் ஒன்றிற்கு மேற்பட்ட வாங்குபவர்கள் போட்டி போடுவதனைக் (Multiple offers) காணலாம். மத்திய அரசு, இந்த விலை ஏற்றத்தை தடுப்பதற்காக இந்த வருட ஆரம்பத்தில் $500,000 இற்கு மேலதிகமான விலையுள்ள ஆதனத்தை வாங்கும் போது ஆரம்ப முதலீட்டை (Downpayment) 2 மடங்காக உயர்த்தி யது. அதாவது 10% ஆரம்ப முதலீடு செய்ய வேண்டியுள்ளது.

இப்பொழுது வெளிநாட்டவர்கள் வாங்குவது கணக்கில் எடுக்கப்படுகின்றது. இவர்களி னால் தான் விலை அதிகரிப்பு மிக அதிகமாக உள்ளதாகப் பொதுமக்களால் குற்றம் சாட்டப்படுகின்றது. அண்மையில் தெரிவிக்கப்பட்ட, அறிக்கையில், வன்கூவ ரில் யூன் 2016இல் 3 கிழமைகளில், பதிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களில் 5% மட்டுமே வெளிநாட்டவர்களாகத் தெரிய வருகின்றது. இந்த 5% ஆனவர்களில் 80% இற்கு மேற்பட்டவர்கள் சீன நாட்டைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றது. மூன்று கிழமை தரவு போதியதாகக் கொள்ள முடியாது.



வன்கூவரில் வெளிநாட்டவர்கள் வாங்கும் போது, குறைந்தது 50% ஆரம்பமுதலீடு செய்யப்படல் வேண்டுமென நிதி நிறுவனங்கள் கட்டுப்பாடு விதித்துள்ளது. இந்தப் பெறுமதி முன்பு 35% ஆகவே காணப்பட்டது. அத்துடன் OSFI என அழைக்கப்படும் Office of Superintendent of Financial Institution, நிதி நிறுவனங்களிற்கு புதிய கோட்பாட்டைத் தெரிவித்துள்ளது. அதாவது அடமானக் கடன் வழங்கும்போது, மிகவும் இறுக்கமாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். ஒருவர் தொழில் புரியும் நிலைமையைத் தெரியப்படுத்தும் கடிதத்தின் (Employment Letter) உண்மையை, சரியாகக் கண்டறி யப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. 2015 இன் இறுதியில் ஒரு குறிப்பிட்ட நிதி நிறுவனம் உண்மையற்ற தொழில்புரியும் கடிதங்களை வழங்கியதாகக் குற்றம்சாட்டி 40இற்கும் மேற்பட்ட அடமானக்கடன் பெற்றுத்தரும் கம்பனிகளுடன் (Mortgage brokerages) வியாபாரம் செய்வதனை நிறுத்திக் கொண்டது. அத்துடன் பல அடமானக்கடன் பெற்றுத்தரும் முகவர்கள் தமது அனுமதிப்பத்திரத்தை (License) இழந்துள்ளார்கள்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...


CUSTOM BUILD HOME

Build Your Personalized Dream Home

Starting From $139 / sq ft

Quality ! Price !! Peace of Mind !!!



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு

அனுபவம் நிறைந்த, நாணயமான, தரமான கட்டிட நிபுணர்கள்

Industrial Buildings from $75 / sq ft

TAMB CANADA (647) 877-8262 (TAMB)

# அவலங்களைப்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

திருமூலநாயனாருக்கு உடம்பு கோயிலாகின்றது. காணாதவருக்குக் காயம் ஒரு மாயம், பொய், காற்றடைத்த பை. திருமூலரே அது இழுக்கு என்று தான் இருந்ததை ஒப்புக்கொள்கின்றார். உத்தமன் - இறைவன். இறைவன் தன்னுள்ளே கோயில் கொண்டான் என்று உணர்ந்து கொண்டபின் உடம்பினை இருந்து ஓம்புகின்றார். தனக்காகவல்ல, இறைவனுக்காக.

ஓம்புதல் - பேணுதல். எவ்விதம் இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயிலைச் சுத்தமாக வைத்திருக்கிறோமோ அவ்விதம் உடலை யும் சுத்தமாகப் பேணுதல் வேண்டும். இறைவனைத் தம்முள்ளே கண்டவர் மது அருந்தமாட்டார்கள், மச்சம் புசிக்க மாட்டார்கள்.

உடற் சுத்தத்துடன் மனச்சுத்தத்தையும் பேணுதல் வேண்டும். இறையுணர்வு பெற்றவர்
அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் போன்ற அழுக்குகளை அணுகவிட மாட்டார்கள். இவ்வழுக்குகளாலேயே உலகத்திற் பகைமைகள் வளருகின்றன, தீமைகள் இடம்பெறுகின்றன. ஆன்மீகத்தர் பூசு நீறுபோல் உள்ளத்தை எப்பொழுதும் புனிதமாகவே வைத்திருப்பர். உள்ளப் புனிதம் அன்பை வளர்க்கும், அமைதியை நிலைநாட்டும்.

திருமூல நாயனர் கண்ட உறுபொருளை அப்பர் பெருமானும் தம்முள்ளே கண்டு பாடுகின்றார்:

தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்.(6)

அதனால் காயமே கோயில் என்றும் பாடிக் களிக்கின்றார்.

இந்த இணையற்ற அனுபவமே தன்னுயிர் தானறப் பெறுதல் என்பது. தன்னுயிர் தானறப் பெறுதலே மனிதப் பிறவியின் தலையாய பயன், பிறவிப் பெருங்கடலை எளிதாக நீந்திக் கடப்பதற்கு உகந்த உபாயம், முத்தியின்பம் பெறுவதற்கு முதன்மையான முறை. அதற்கென்றே இப்பிறவி பெறப்பட்டது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?

## ஆன்மிக வாழ்வு துறவறத்துக்குரியதா?

இனி, ஆன்மிக வாழ்வு துறவறத்துக்குரியது என்று பலர் நினைக்கிறார்கள். அதாவது இல்லறம் துறவறம் என்கின்ற இரண்டில் இல்லறம் உலகியலுக்குரிதென்றும் துறவறம் ஆன்மிகத்துக்கு உரியதென்றும் கருதுகின்றார்கள்.

சைவம் அப்படிச் சொல்லவில்லை. இல்லறத்தில் இருந்து கொண்டே ஒருவர் ஆன்மிக வாழ்வை அனுபவிக்கலாம். உண்மையில் துறவறத்துக்கும் இல்லறமே உதவியாகவுள்ளது.

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை(7)

என்பார் வள்ளுவர் பெருமான்.

இல்லறத்தில் இருந்துகொண்டே இறைவனை உள்ளும் புறமுமாகக் காணலாம் என்பதனைச் சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணம் எமக்கு நன்கு காட்டுகின்றது. அதன் கதாநாயகர் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறே நல்ல உதாரணம்.

எனவே ஆன்மிகம் என்பது எமது உயிரின் நிலையான மேம்பாட்டுக்கே என்று துணிந்து நடப்பவர் எமது மதிப்புக்கும் வணக்கத்துக் கும் உரிய மலபரிபாகத்தவர். ஆன்மிக வாழ்வு பக்குவ வாழ்வு, இருவினையும் ஒப்பான வாழ்வு. அதில் அமைதியும் சமாதானமுமே நிலவும்,ஜீ சீவன் சிவனாகி த் துலங்கும் அநுபூதி வாழ்வு அது.

ஆன்மீகம் துறந்தா ருக்கோ
அவ்வுல குக்கோ வல்ல
ஆன்மீகம் எம்மைப் பற்றி
ஆராய வைத்துத் தீய
பான்மைகள் அனைத்தும் போக்கிப்
பக்குவம் செய்யும் பாதை
மேன்மைகொள் வாழ்வை இங்கே
மேற்கொள்ள வைக்கும் நீதி!(8)

## அவலங்களுக்கு மருந்து

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது (9)

என்று முதலாவது அதிகாரத்திலேயே அறிவுறுத்துகின்றார் வள்ளுவர் பெருமான். அவர் என்றோ சொன்னதை இன்று பரிசோதனைகள் பல நிரூபித்துள்ளன. அமெரிக்காவில் ஒரே வருத்தமுள்ள சிலை-ரத் தெரிவுசெய்து இரு குழுக்களாகப் பிரித்தனர். ஒரு குழுவை இறைவழிபாட்டில் ஈடுபடுத்தினர். பின்னர் இரு குழுக்களினதும் முன்னேற்றங்களை மதிப்பிடுகையில் இறை வழிபாட்டுக் குழுவினர் மற்றயை குழுவினரிலும் வேகமாகக் குணமாகிவருவது கண்டிறிப்பட்டது. இந்தப் பரிசோதனையைப் பகிரங்கமாகக் கனடா வளை தொலைக் காட்சியிற் கூறியவர் டாக்டர் சூரியபாலன் அவர்கள்.

இந்தியாவில் உள்ள இராஜஸ்தானில் பிரம்மகுமாரிகள் அமைப்பு மருத்துவமனை ஒன்றை நடத்தி வருகின்றது. அதன் நிருவாகத் தலைவராக டாக்டர் பிரதாப் அவர்கள் தொண்டாற்றுகின்றனர். அவர் அண்மையில் கனடா துரந்தை (Toronto) நகரில் உரையாற்றுகையில் பல நோய் களைத் தியானம், இராஜயோகம் மற்றும் பிரார்த்தனைகளால் தாம் மாற்றியிருப்பதை, மாற்றிவருவதைக் குறிப்பிட்டார்.

ஆன்மிக வாழ்வு தனிப்பட்ட அல்லது குடும்பமட்ட அளவிலன்றி ஊர் உலகத்து அவலங்களையும் போக்க வல்லது. இன்று உலகத்தில் சண்டை சச்சரவுகளும் வன்முறைகளும் கொலை களவுகளும் அதி-கரித்து வருவதற்குக் காரணம் மக்கள் தங்களுக்குள் இருந்து, தங்களுக்கே தெரியாமல் தங்களை வழிநடத்தும் இறைவனை அறிந்துகொள்ளாமையேயாகும்.

அறிந்து கொண்டு பயனடைய வேண்டும் என்று சொல்வதே இக்கட்டுரையின் நோக்கம். இதுவரை ஆன்மிகம் என்பது எம்மைப்பற்றியது என்பதும் எம்மை நாம் அறிந்து கொண்டு தானற நடக்கவேண்டும் என்பதும் எமக்குள்ளே இருக்கும் இறைவனைக் கண்டுகொண்டு அவனுடன் உறவாடும் தெய்வீக வாழ்வே ஆன்மிக வாழ்வு என்பதும் ஆன்மிக வாழ்வால் தனிப்பட்டவரது நோய்நொடிகளன்றி அகிலகத்து அவலங்களையும் போக்கலாம் என்பதும் எடுத்துரைக்கப்பெற்றன.

இறுதியாக ஒன்று. ஆன்மிக வாழ்வு அனுபவிக்கப்பட வேண்டியது. அதனை யாரிடமிருந்தும் வாங்க முடியாது. அதனால் ஆன்மிகத்தை வியாபாரம் ஆக்குபவர்பற்றி அன்பர்கள் கவனமாக இருத்தல் நல்லது.

வாழ்க ஆன்மிகம்! வளர்க வையகத்து அமைதி!

-----------------


1. திருக்குறள்: 268
2. திருவாசகம்: 216
3. நற்சிந்தனை: முதலாவது பாடல், எங்கள் குருநாதன்.
4. திருநாவுக்கரசர் தேவாரம்: பாவநாசத் திருக்குறுந்தொகை
5. திருமந்திரம்: 725
6. திருநாவுக்கரசர் தேவாரம்: பொது-திருவங்கமாலை
7. திருக்குறள்: 42
8. ஆன்மீகக் கவிதைகள், வி. கந்தவனம், காந்தளகம், சென்னை. 2007.
9. திருக்குறள்: 7


# அடமானம்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒரு கதவை மூட வேறு கதவு திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றே வருகின்றது. பழைய வீச்சு இல்லாமல் இருக்கலாம். அடமானக்கடன் பெறுவதில் இறுக்கங்கள் தொடர்ந்தாலும் ஆதன வியாபாரத்தில் விலை அதிகரிப்பு தொடர்ந்து கொண்டே வருகின்றது.

அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் (European Union) இருந்து பெரிய பிரித்தானியா (Great Britain) விலக வேண்டும் என்ற நிலைப்பாடு, அமெரிக்கத் தேர்தலில் Donald Trump இன் அரசியல் வளர்ச்சி, கனடா மீதான வெளிநாட்டவர்களின் வருகை அதிகரிப்பு மேலதிக காரணங்களாகக் கொள்ளலாம்.

இவ்வாறான புதிய காரணங்களும் ஆதன வியாபாரத்தில் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது நேரடியான நிலைப்பாடாகலாம். மாறும் உலகில் பல



நிகழ்வுகள் நடந்து வருகின்றது. இவை ஆதன வியாபாரத்தில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தலாம்?

# உயிர் எழுத்தில் வாழ்க்கை

அன்பாய்ப் பழகி என்றுமே வாழ்வோம்
ஆசையை உணர்ந்து குறைப்போம்
இனியவை எந்நாளும் உரைப்போம்
ஈன்ற தாய் தந்தையைப் பேணுவோம்
உண்மை நல்லவையே பேசுவோம்
ஊதாரியாக ஒருபோதும் ஆகமாட்டோம்
எல்லோரும் ஓரினமாய் வாழ்வோம்
ஏணிபோல் இயன்றளவு ஏற்றிவிடுவோம்
ஐயம் தெளிந்து அறிவு வளர்ப்போம்
ஒற்றுமையில் உலகமைதி காப்போம்
ஓட்டம்போல் சுறுசுறுப்பாய் உழைப்போம்
ஔவையார்போல் ஆழமாய்க் கற்போம்
அ·.தே மரணம் முடிவென அறிவோம்.





முத்துராஜா


# சர்க்கரை வியாதியை குணமாக்கலாம்

## பாகம் - 07

மருத்துவர் சொல்வார் "நானும் எவ்வளவோ போராடிப் பார்த்து விட்டேன். கடைசியில் இதயத் தாக்குதல் வந்ததால் நோயாளர் இறந்துவிட்டார். கடவுள் அவருக்கிட்ட ஆயுள் அவ்வளவுதான்" என்பார். மற்றைய மருத்துவம் சர்க்கரையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறேன் என்று கடைப் பிடித்த வைத்தியமுறை தான் இந்த இறப்புக்கு காரணம் என்று உணராமல், நாமும் "இதயத்தாக்கு (Heart Attack) வந்து விட்டால் அவ்வளவு தான் ஒன்றும் செய்ய இயலாது" என்று சொல்லி விடுகிறோம்.

தரமில்லாத சர்க்கரைக்கு கணையம் இன்சுலின் தராது. இன்சுலின் தரப்படாத சர்க்கரை உடலை விட்டு வெளியேறியே தீரும். அவையத்தனைத்தும் வீணான சர்க்கரையே. மாற்று மருத்துவம் உடலில் சுற்றும் தரமற்ற சர்க்கரைக்கு தரும், தன்னிச்சையான இன்சுலினால் தரமற்ற சர்க்கரை உடலின் செல்களுக்குள் நுழையும். விளைவு செல்கள் அனைத்தும் அழுகிச் சாகும். உடலின் பல பகுதி களிலும், ஏற்கெனவே இரத்தத்தில் சர்க்க ரையினால் சூழப்பட்ட ஹீமோகுளோபினால் உடலின் செல்களுக்கு சரியாக ஒக்ஸிஜன் கிடைக்காமல் சாகும் செல்களோடு, தரமற்ற சர்க்கரை உள்ளே நுழைவதால் அழுகி இறக்கும் செல்களும் சேர உடலின் பல பாகங்களிலும் பல குறைபாடுகள் நிகழ்கின்றன.

சிலர் சொல்வார்கள் "நான் மாற்று மருந்துகள் மூலம் இரத்தத்தில் சர்க்கரை யின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டே, சித்த மருந்துகளை சாப்பிடுகி றேன்" என்பார்கள். உடலில் கெட்டுப்போன சர்க்கரையை செல்களுக்குள் தள்ளும் வேலையைச் செய்து கொண்டே செல்களை எந்தவிதத்தில் சரி செய்ய இயலும்? மாற்று மருந்துகளை (அவற்றை மருந்துகள் என்று சொல்வது தவறு) எடுப்பதே தவறு என்று நாம் மீண்டும், மீண்டும் நிரூபணங் களோடு சொல்லிவருகிறோம். உடலில் உள்ள செரிக்கப்படும் பொருட்களுக்கு ஏற்ற வகையில் செரிமானத்திற்கு உதவும், பித்த நீர் (Bile), பாங்க்ரியானிக் செரிமான நீர்களை (Pancreatic juices) அசினார் செல்கள் (Acinar cells) சுரந்து டியோடினம் வழியாக நுழைவதை சுட்டிக் காட்டுவதைப் பாருங்கள். உடலில் சர்க்கரை அளவு குறைவானால் அதிகமாக உடலின் கணையத்தில் உள்ள பாங்கிரியாட்டிக் ஐலெட்ஸ் (Pancreatic Aislets) என்ற இடங்களில் உள்ள ஆல்பா செல்கள் (Alpha Cells) குளூகோகான் (Glucagon) என்ற நீரைச் சுரந்து உடலில் உள்ள சேமிப்பு சர்க்கரையை எடுத்து இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை அதிகமாக்கும்.




உடலில் சர்க்கரை அளவு அதிகமானால் குறைக்க (Pancreatic Aislets) என்ற இடங்களில் உள்ள பீட்டா செல்கள் (Beta Cells) இன்சுலினை (Insulin) சுரந்து உடலில் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை குறைக்க, செல்களுக்குள் சர்க்கரை உள்ளே நுழைய அனுமதி கொடுத்து இரத்தத்தில் இருந்து செல்களுக்குள் சர்க்கரையை அனுப்புகின்றது.

இந்த இரண்டு செயல்களையும் கட்டுப் படுத்த டெல்டா செல்களில் (Delta Cells) உள்ள சோமாட்டோஸ்டேட்டின் (Somatostatin) சுரந்து சமிக்கைகளைப் (Signals) புரிகிறது. இப்படி சர்க்கரை அளவு கூடினாலும் குறைந்தாலும், கெட்ட சர்க்கரை இருந்தால் வெளியேற்றவும், நல்ல சர்க்கரையை வீணாக்காமல் சேமித்து வைக்கவும் நம்முடலிலேயே சகல வசதிகளுடன் அமைப்புகள் இருக்க, இவற்றை சரியாக செயல்பட வழி செய்தால் போதாதா? இந்த நாளமில்லாச் சுரப்பிகளின் இடையில் புகுந்து குழப்பங்கள் விளைவிப்பதால் தான் உடல் நலிந்து, மாற்று மருந்துகளால் படாத பாடுபட்டு, உள்ளுறுப்புக்களும் முழுவதும் கெட்டு நோயாளர் படாத பாடுபட்டு முடிவில் அத்தனை பொறிகளும், புலன்களும் கெட்டு இறந்தே போகிறார்.

**Premi. S**
Natural Medicine Practitioner ©
647.278.3100



NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.

உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA



# ஆதியோகி

பண்டைய காலத்தில், இந்தியா தனியொரு நாடாக இருக்கவில்லை. இங்கிருந்த மக்கள் ஒரேயொரு மதத்தையோ, இனத்தையோ அல்லது மொழியையோ மட்டும் கொண்டவர்களாக இருந்திருக்கவில்லை. இருப்பினும் அந்த மாநிலம் முழுவதும் வாழ்ந்த மனிதர்கள் தங்களுக்குள் கொண்டிருந்த பொதுவான ஆன்மீக நற்பண்பின் காரணமாக ஒரு நல்லிணக்கம் நிலவியது. இந்த அடிப்படையான ஆன்மீக உணர்வு எந்த அளவுக்கு இருந்தது என்றால் இங்கே வாழ்ந்த ஒவ்வொருவருக்கும் அவர் பாமரனாயிருந்தாலும் சரி, பார்வேந்தனாக இருந்தாலும் சரி, அவர்கள் வாழ்வின் உச்சபட்ச இலக்கு 'முக்தி' என்பதாகவே இருந்தது. இந்நிலை, இந்த தேசத்தில் நிகழ்ந்துள்ள ஈடிணையற்ற, பிரமிக்கத்தக்க ஆன்மீகப் பணியின் விளைவாகவே உருவானது. இதற்கெல்லாம் முழுமுதல் காரணமாய் அமைந்தவர் ஒருவர் 'மனித குலத்தின் உள்நிலை, வளம்பட செதுக்கப்பட்டதற்கு இன்றியமையாதவர் ஒருவர்' அவர்தான் ஷிவா.

பின்வரும் கதையில் சத்குரு அவர்கள்

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org


ஆதியோகி 'முதலாம் யோகியாம் ஷிவாவை பற்றியும், அவர் சப்தரிஷிகளுக்கு யோக அறிவியலை பரிமாறிய விதத்தையும் கூறுகிறார்'

சத்குரு: யோகக் கலாச்சாரத்தில் ஷிவா என்பவர் கடவுளாக அறியப்படுவதில்லை. மாறாக ஆதியோகியாக, யோகத்தைப் பிறப்பித்தவராக அறியப்படுகிறார். மனித மனத்தினுள் முதன்முதலாக இந்த விதையை விதைத்தவர் அவர்தான். யோக மரபின்படி 15,000 ஆண்டுகளுக்கும் முன்பாக ஷிவா பூரண ஞானமடைந்து, மிகத் தீவிரமான பரவச நிலையில், இமயமலையிலே பேரானந்த தாண்டவத்தில் மூழ்கிப் போனார். அவரின் பரவசம் எப்பொழுதெல்லாம் அவர் அசைந்திடும்படி அனுமதித்ததோ, அப்பொழுதெல்லாம் அவர் கட்டுக்கடங்காத தாண்டவ ரூபமாக வெளிப்பட்டார். அந்தப் பரவசம் மிகுந்து அசைவையும் தாண்டியபோது, அசைவற்ற நிஷ்சல ரூபமாக வெளிப்பட்டார்.

இதைக் கண்டவர்கள், அதுவரை எவருமே உணர்ந்திராத ஏதோ ஒன்றைத் தங்கள் அறிவுக்குப் புலப்படாத ஏதோ ஒன்றை, இவர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார் என்று புரிந்து கொண்டார்கள். ஆர்வம் இப்படியே வளர வளர இது என்னவென்று உணர்ந்திட விரும்பினார்கள் வந்தார்கள், காத்திருந்தார்கள், கிளம்பிச் சென்றார்கள். ஏனென்றால், இந்த மனிதர் தன்னைச் சுற்றிப் பலர் இருப்பதை துளியும் கவனிக்கவில்லை. ஒன்று தீவிரத் தாண்டவம் அல்லது முற்றிலும் அசைவற்ற நிலை, இப்படியே இருக்கிறார். தன்னைச்சுற்றி என்ன நடக்கிறது என்பது பற்றிய அக்கறை துளிகூட இல்லாதவராக வாழ்கிறாரே என்று விரைவிலேயே பலர் அங்கிருந்து கிளம்பிவிட்டனர். ஏழு பேரைத் தவிர!

இவர்கள் ஏழு பேரும் அந்த மனிதனுக்குள் பொதிந்துள்ள பொக்கிஷத்தை எப்படியாவது தாங்களும் கற்றிட வேண்டும் என்று விடாப்பிடியாக தங்கி இருந்தனர். ஆனால் ஷிவா, அவர்களை முழுமையாகப் புறக்கணித்தார். அவர்கள் கெஞ்சினார்கள். 'தயவு செய்து அருளுங்கள்! நீங்கள் உணர்ந்திருப்பதை நாங்களும் உணர விரும்புகிறோம்!,' என்று மன்றாடினார்கள். ஷிவாவோ, 'மூடர்களே! நீங்கள் இப்போது இருக்கும் தன்மையில், கோடி வருடங்கள் ஆனாலும் இதை உணர மாட்டீர்கள், இதற்கு மாபெரும் அளவில் உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இது ஒன்றும் கேளிக்கை கிடையாது' என்று நிராகரித்தார்.

ஆகவே அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள ஆரம்பித்தார்கள். நாட்கள் வாரங்களாயின, வாரங்கள் மாதங்களாகி, வருடங்களாயின. அவர்கள் தயாராகிக் கொண்டிருந்தார்கள். ஷிவாவோ அவர்களைப் பொருட்படுத்தவே இல்லை. இப்படியே 84 வருடங்கள் சென்றுவிட்டன. ஒருநாள், பௌர்ணமியன்று சூரியனின் 'கதிர் திருப்பம்' உத்தராயணத்திலிருந்து தக்ஷிணாயணத்திற்கு மாறிய பின்பு, ஆதியோகி இந்த ஏழு பேரின் மீது தன் அருட்பார்வையை செலுத்தினார். அவர்கள், ஞானத்தை ஏந்திக்கொள்ள தகுதியுடைய கலங்களாக, அருட் களஞ்சியத்தை உள்வாங்க முற்றிலும் பழுத்தவர்களாக, மிளிருவதை கவனித்தார். அவரால், அவர்களை அதற்கு மேலும் புறக்கணிக்க இயலவில்லை. அவர்கள் அவரது கவனத்தை ஈர்த்துவிட்டார்கள்.



## சத்குரு வாசுதேவ்

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

## இனக்கவர்ச்சி என்பது தவறா?

இளமையாக இருக்கும்போது, அடுத்த இனத்தின் மீது ஏற்படும் வசீகரத்தை நீங்கள் தவிர்க்க நினைத்தாலும் முடியாது. அது இயற்கை. தவறா, சரியா என்று அதை ஆராயத் தேவையில்லை.

மேலை நாடுகளில் சுதந்திரமான செக்ஸ் என்று ஒரு முறையைக் கொண்டு வந்தார்கள். குடும்பம், கட்டுப்பாடு என்று சிக்காமல் சந்தோஷமாயிருக்க விரும்பினார்கள். இளமையாக இருந்தபோது, இது ஜாலியான அனுபவமாக இருந்தது. ஆனால் வயதான பின் உண்மையான உறவுகள் இல்லாமல், பலர் மனநிலை பாதிக்கப்பட்டு பரிதாபமாகி விட்டார்கள். பொறுப்பேற்கத் தயாராக இல்லாமல் செக்ஸை மட்டும் அனுபவித்த இவர்களால், ஒரு தலைமுறையே அடையாளமற்ற அநாதைகளாக அலைந்து கொண்டிருந்தது.

உடல் இச்சைகளைத் தாண்டி வாழ்க்கை தொடர வேண்டியுள்ளது என்பதை மறக்காதீர்கள். அதில் அதிகப்படியாக ஆழ்ந்து போனாலும் சிக்கிக் கொள்வீர்கள். அறவே ஒதுக்கப் பார்த்தாலும் சிக்கிக் கொள்வீர்கள்.

உறுதியும் பொறுப்பும் உணர்வும் இல்லாமல் எந்த சந்தோஷத்தையும் தேடாதீர்கள். உங்கள் வாழ்க்கை இலக்கிலிருந்து கவனம் சிதறாத அளவுக்கு அதற்கு இடம் கொடுங்கள். போதும்.




## எழுதுமட்டுவாள் மக்களின் ஒன்றுகூடல்

## கோடை கால ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

காலம்: ஜூலை 24, 2016 ஞாயிறு காலை 10:00 மணிக்கு
இடம்: Colonel Danforth Park - Picnic Area 3, 73 Colonel Danforth Trail, Toronto, ON M1C 1P8 (Kingston Road & Lawson Road)

எழுதுமட்டுவாள் மக்கள் அனைவரையும் அதனைச் சூழவுள்ள ஓட்டுவெளி, விளுவளை, முகமாலை, கிளாலி, கரம்பகம் ஆகிய ஊர் மக்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| வீ. நடராஜா | 647 783 2193 / 416 335 0050 | கு. சிவராஜா | 416 893 2377 |
| சுரேஸ் தவலிங்கம் | 647 549 0604 | ராஜும் கார்த்திக் | 905 970 1815 |
| ராணி கைலன் | 416 299 8794 | திருமாறன் | 647 700 8748 |



# தெரியவில்லையானால் தெரிந்து கொள்ளுங்கள்!

## கனேடிய தகவல் தொடர் 253

1. கனடாவில் ஒருவரின் காணிக்குள் உள்ள மரத்தின் கிளை அயலவரின் காணிக்குள்ளும் படர்ந்திருந்தால் அந்த மரம் சட்டரீதியாக அயலவருக்கும் பங்குள்ள மரமாக கருத்தில் கொள்ளப் படும். அயலவரின் சம்மதமில்லாது தமது காணிக்குள் உள்ள மரத்தினை வெட்டி அகற்றினால், $20,000 வரை தண்டனைப் பணமும் மூன்று மாத சிறைத்தண்டனையும் கிடைக்கலாம்.
[Provincial forest act sec. 10 (2)]

2. எவரும் தங்கள் காணிக்குள் உள்ள பாரிய மரங்களை தங்கள் சொந்த உடமை என்ற நினைப்பில் வெட்டவோ அல்லது அகற்றவோ முடியாது.

1432 Military Trail, Scarborough, ON என்னும் முகவரியில் உள்ள வீட்டு உரிமையாளர் நகரசபையின் அனுமதி யின்றி, தமது காணிக்குள் இருந்த பல மரங்களை வெட்டி அகற்றிவிட்டார். தண்டனைப் பணமாக $56,000இனை கட்டவேண்டுமென ரொறொன்ரோ நகர-சபை நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. (ஆதாரம் - 'Scarborough Mirror' ஏப்ரல் 11, 2013)

3. முதியவர்களை வீடுகளில் வைத்து உடல், உள ரீதியாக அல்லது நிதியியல் ரீதியாக கொடுமைப்படுத்தி அவர்களை கவனிக்க வேண்டிய முறையில் கவனிக் காது உதாசீனம் பண்ணித் துன்பப்படுத்தி னால் அது கனடாவில் 'கிரிமினல்' குற்றமாகக் கருதப்படும். இதனால் சிறைத் தண்டனைக்கும் உள்ளாக வேண்டிவரும். (Elderly abuse law of the Canadian Criminal Code)



4. 64 வயதுக்கு மேற்பட்ட முதியவர் ஒருவர் ஒன்ராரியோவில் குடியிருக்கும் மனையின் உரிமையாளராக இருந்து, அவரின் குடும்ப தேறிய வருமானம் போதிய அளவில் இல்லையேல் நகரசபைக்கு செலுத்தும் சொத்துவரியில் வருடம் $500 வரை சலுகையினை மாகாண அரசிலிருந்து பெறலாம். (Ontario senior home owner's property tax grant)

5. கனடாவில் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்களுடன் வாடிக்கையாளர் ஒருவருக்கு தீர்க்கமுடியாத முரண்பாடுகள், பிரச்சினைகள், அதிருப்திகள் ஏற்பட்டால் அவற்றினை முறைப்பாடு செய்ய 'குறை கேள் அதிகாரி' என்பவரின் அலுவலகம் பல சட்ட உதவியாளர் குழுவோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. இவர்கள் எந்தவொரு முறைப்பாடுகளையும் இரு பக்கமும் விசாரித்து நியாயமாகத் தீர்த்து வைப்பார்கள்.

இதே நியாயமன்றம் நகரசபை, மாகாண அரசு, மத்திய அரச நிறுவனங்களிலும் உள்ளது. (Ombudsman Group)

6. கனடாவில் ஆயுள் காப்புறுதி செய்த ஒருவர் தாம் ஒப்பந்தம் செய்துகொண்ட கம்பனி வங்குரோத்து நிலைமைக்கு (Bankruptcy) செல்லும் என்று அச்சப்படத் தேவையில்லை.

மத்திய, மாகாண அரசின் நிதி அமைச்சு இந்நிறுவனங்களைக் கண்காணிக்கும். அவை தேவையேற்படின் வாடிக்கையாளர் கள் பாதிக்காமல் இருக்க ஒப்பந்தத்தை இன்னொரு நிறுவனத்துக்கு மாற்றி விடும்.

அதுதவிர ஒரு குறிப்பிட்ட தொகைவரை அரச நிறுவனம் ஒன்று வாடிக்கையாளரின் ஒவ்வொரு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்திற் கும் உத்தரவாதம் வழங்குகின்றது. (Assuris Inc.)

7. கனடாவில் வாகனக் காப்புறுதியின் விலைகளைத் தீர்மானிக்கும்போது, வேறு பல தகவல்களோடு காப்புறுதி நிறுவனம் இரு முக்கியமான பத்திரங்களைப் பெற்று அதனை ஆழமாக பரிசீலனை செய்து விலையினை தீர்மானிக்கின்றது.
அவையாவன:

a. C.G.I என்னும் நிறுவனம் செய்து வைத்துள்ள பதிவு 'Auto plus report'. இது வாகனக் காப்புறுதியின் வரலாறு, வாகன விபரங்கள், எதிர்கொண்ட விபத்துகளும் முடிவுகளும், வழங்கிய நட்டஈடுகள் என ஒரு விபரமான பதிவாக இருக்கும்.

b. மாகாணப் போக்குவரத்து அமைச்சு வழங்கும் 'Driving abstract report' வீதி ஒழுங்குச் சட்டங்களை மீறித் தண்டனை ரிக்கற் வாங்கிய பதிவுகள் யாவும் விபரமாக இங்கு இருக்கும்.

8. வருமானம் குறைந்தவர்கள் கனடாவில் குடியிருப்பதற்கு இடமில்லையேல் அரச மானியங்களுடன் வழங்கும் குடியிருப்பு களுக்கு விண்ணப்பித்து, காத்திருந்து பெற்றுக்கொள்ளலாம். அவரின் வருமானத் தில் 30% மட்டுமே கட்டணமாக வாடகைக்கு செலுத்த வேண்டும். (Social housing program for low income people)

9. உடல் நோயின் பாதிப்பு என்பது கனடாவில் ஒருவரின் வாகனமோட்டும் ஆற்றலை மந்தப்படுத்துமாக இருந்தால் அது வீதியில் ஏனையோருக்கு ஆபத்து ஏற்படக்கூடாது என்பதற்காக அவரை பரசீலனை செய்யும் மருத்துவர் போக்கு வரத்து அமைச்சுக்குத் தகவல் கொடுக்க வேண்டும். இது எல்லாக் கனேடிய மருத்துவர்களுக்கும் உரிய நிர்ப்பந்தம் ஆகும். இத்தகைய நிலைமை மருத்துவ அத்தாட்சிகளுடன் நிரூபிக்கப்படும்போது, அவர்களுக்கு வாகனம் செலுத்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படும். (License suspension of medical reason)

10. அயல் வீட்டுகாரர்களின் சத்தங்கள் கனடாவில் ஒரு வரையறைக்குள் இருக்க வேண்டும். கொண்டாட்டங்களில் இருந்து வரும் சத்தங்கள் கூட ஏனையோருக்குத் தொல்லையாக இருக்கக் கூடாது என்பதற் காக ஒரு குறிப்பிட்ட நேரத்தினுள் நிறுத்தப் படல் வேண்டும். மீறினால் முதலில் எச்சரிக்கை! அதை மீறித்தொடர்ந்தால் அந்தந்த நகரசபை சட்டங்களுக்கு ஏற்ப தண்டிக்கப்படுவார்கள். (City by law regarding neighbors noise)

11. மது போதையில் வாகனம் செலுத்திப் பிடிபட்டால் ஒரு மாதத்திற்கு சாரதி அனுமதிப் பத்திரத்தினை அந்த இடத்தில் வைத்து ரத்துச் செய்யும் உரிமை பொலிசாருக்கு உண்டு. ஒரு மாதத்தின் பின்பு அதற்குரிய கட்டணம் செலுத்தி அதனை மீளப் பெற வேண்டும்.

தொடர்ந்து நீதிமன்றத்தில் கிரிமினல் குற்றசாட்டில் வழக்குத் தொடரப்படும். அங்கும் தண்டனை கிடைக்கும். (Impaired Driving law of the Canadian Criminal Code)

12. கனடாவிலிருந்து உலகின் எந்தப்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்...


mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4





சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# தெரியவில்லையானால்...

பகுதிக்குச் சென்றாலும் அவர் தங்கியிருந்த நாடுகளில் ஏதாவது பொருளைத் தொலைத்தால், அதனை ஒரு வரையறையின் கீழ் கனடாவில் உள்ள அவரின் வீட்டுக் காப்புறுதியிலிருந்து இழப்பீட்டு நிவாரணமாகப் பெறலாம். (Claim from home Insurance contents coverage)

13. கனடாவில் வீடுகளில் வளர்ப்பு நாயினை வைத்திருப்பவர்கள் அதற்குக் காப்புறுதி செய்து வைத்திருக்க வேண்டும். (Pet Insurance)
அது இல்லாத நிலையில் அவரது நாய் இன்னொருவரைக் கடித்துக் காயப்படுத்திவிட்டால் நாயின் உரிமையாளருக்கு வீடு இருந்து, அந்த வீட்டுக்குக் காப்புறுதி செய்து வைத்திருந்தால் அதிலிருந்து பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் கிடைக்கும்.

வளர்ப்பு நாய்க்குக் காப்புறுதியும் அல்லது வீட்டுக் காப்புறுதியும் இல்லாதவர் அந்த நட்டத்தினை பொறுப்பு ஏற்பதனை தவிர வேறு வழியில்லை. இரு தடவைக்கு மேல் ஒருவரைக் கடித்துக் காயப்படுத்தினால் நகரின் மிருகக்கட்டுப்பாட்டுச் சபை (Animal Control Department) நாயினை வந்து பறித்துக் கொண்டு போய்விடுவார்கள்.

14. 'வீதி ஒளிச் சைகைகள்' (Traffic Signal Lights) என்பது பொதுவாக குறிப்பிட்ட நேரத்துக்கு ஒருமுறை மாறி மாறி சைகைகளை வழங்கிக் கொண்டிருக்கின்ற மாதிரி தொழில் நுட்பவியலாளர்களினால் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் கனடாவில் சில சந்திகளில் மின்காந்தத் தூண்டல் இணைப்பு நிலத்தின் கீழ் கண்ணுக்கு தெரியாதமாதிரி பதிக்கப் பட்டிருக்கும். வாகனம் அந்த இடத்தில் வந்து நின்ற சில நொடிகளில் சைகையை சிவப்பிலிருந்து பச்சைக்கு மாற்றிக் கொடுக்கும். வாகனம் எதுவும் வரவில்லையானால் அந்தப் பக்க சைகை ஒளி மாறாமல் தொடர்ந்து இருக்கும். (Metel loop will be embedded in the pavement without visible)



15. வாகனமோட்டும் தவறுகளுக்கு பணத்தண்டனை (Fine), மற்றும் அனுமதிப்பத்திர இடைநீக்கம் (License suspension) என்பதே பொதுவாக சாரதிகளுக்கு வழங்கும் தண்டனைகள் ஆகும். ஆனால் கனடாவில் 'ஆபத்தான வாகன ஓட்டம்' (Dangerous Driving), கவனமில்லாத வாகனமோட்டம் (Careless Driving), மதுபோதையில் வாகனம் செலுத்துதல் (Impaired Driving) ஆகியனவற்றுக்கு சிறைத் தண்டனையும் கிடைக்கலாம்.

16. $25,000 வரை வசூலிக்கப்படாத கடன்கள், பாதிப்புக்கள் ஆகியவற்றினை அறவிட சம்பந்தப்பட்டவர்களை தாங்களாகவே துரத்த மாகாண அரசின் சட்டமா அதிபதியின் திணைக்களம் சிறுசிறு நீதிமன்றங்களை கனடாவின் ஒவ்வொரு நகரிலும் உருவாக்கியுள்ளது. (Small claim court)

17. வாடகைக்கு குடியிருக்க இடம் வழங்கியோர், மற்றும் குடியிருப்போர் பிரச்சினைகள், முரண்பாடுகள், சிக்கல்களை நியாயமான முறையில் தீர்த்து வைக்கத்தேவைப்பட்டால் வாடகைக்கு குடியிருப்பவரை வீட்டைவிட்டு அகற்ற என ஒரு நியாயமன்றம் கனடாவின் சகல நகரங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கிறது. (Landlord tenant board)

18. தொழில் செய்யும் இடங்களில் தொழில் நேரத்தில் உடல் காயங்களுக்கு உட்பட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க ஒரு மாகாண அரசின் நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கிறது. (Workplace safty insurance board)

19. வாகன விபத்துகளில் ஒருவர் அந்த இடத்திலிருந்து தப்பித் தலைமறைவானால் அது கனடாவில் ஒரு பாரதூரமான குற்றமாகும். பாதுகாப்புக்காக அந்த இடத்தில் நிற்காது போயிருந்தாலும் கால தாமதமில்லாது முறைப்பாடு செய்யத் தவறின் தண்டனைப்பணம், அனுமதிப்பத்திர இழப்பு என்பனவற்றுடன் சிறைத்தண்டனை வரை கிடைக்கலாம்.

20. கனேடிய பிரஜை ஒருவர் வேறு நாடுகளில் நிரபராதியாக நிற்கும்போது, ஏதாவது வன்முறைகளில் தாக்கப்பட்டு உடல் காயமடைந்தால், அதனை அந்த நாட்டின் பொலீஸ் அறிக்கை, மருத்துவ ஆதாரங்களைக் காட்டி கனடாவிற்கு வந்த பின்பு கனடா மத்திய அரசின் நீதி அமைச்சுக்கு விண்ணப்பித்து சிறு நிவாரணம் பெறலாம். எந்த நாட்டிலிருந்து வன்முறையின் பாதிப்புக்கு உள்ளாகும் நிலைமை ஏற்பட்டதோ அந்த நாட்டில் உள்ள கனேடிய தூதராலயத்திற்கு முதலில் முறைப்பாடு செய்ய வேண்டும். அவர்களும் நிவாரணம் பெறும் வழிகளைக் காட்டுவார்கள். (Victims fund program - federal justice department)

21. வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளும் விபத்துகளில் சரி? பிழை? யினை தீர்மானிக்கும் சட்டம் கனடாவின் மாகாண அரசுகளினால் வரை-படங்களுடன் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. (Accident fault rules & regulation act) ஆனால் ஒரே நேரத்தில் மூன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி நடைபெறும் விபத்துகளில் (Pile up collisions) எல்லோரும் 50% வீதத்திற்குரிய தப்புக்குரியவர் ஆகின்றனர். இந்த அடிப்படையில் காப்புறுதிக் கம்பனிகளில் நட்டஈடுக் கோரலை முன் எடுக்கலாம்.

22. சொந்தமாக வீடுகள் வைத்திருப்பவர்களுக்கு மின்சாரக் கட்டணம் என்பது ஒரு செலவாகும். ஆனால் கனடாவின் சில மாகாணங்கள் அவர்களின் வருமானத்தின் அடிப்படையில் சில சலுகைகளை இதில் வழங்குகின்றது. (Ontario Electricity support program)

23. வீதியில் ஓடிக் கொண்டிருக்கும் சட்ட விரோத வாகனங்களை ஒரே நேரத்தில் துப்புத் துலக்கும் புதிய தொழில்நுட்பக் கமராக்களை கனேடிய பொலிசார் தற்போது கையாள்கின்றனர். திருடப்பட்ட வாகனம், பதிவுகள் புதுப்பிக்கப்படாத வாகனம், தடை செய்யப்பட்ட வாகனம், பழுதான இலக்கத் தகடுகளைப் பொருத்திய வாகனம் போன்றவை யாவும் நவீன கமராக்களால் படம் பிடித்து தகவல்களை உடனுக்குடன் இந்த பொலீஸ் மையத்திற்கு அனுப்பி வைக்கும். குற்றவாளிகள் இலகுவாகப் பிடிபடுவார்கள்.

24. கனடாவில் தற்போது பலரும் 'உடல் உறுப்புகளின் தானம்' (Organ Donation) செய்யப்பதிந்து வைத்திருக்கின்றார்கள். ஆனால் அவர்களின் மரணத்தின் பின்பு அவர்களின் குடும்பத்தவர்கள் உடல் உறுப்புகளை வெட்டி எடுக்க ஆட்சேபனை கடுமையாக தெரிவித்தால் அவர்களை மீறி எந்தச் சந்தர்ப்பத்திலும் உடல் உறுப்பினை கனேடிய வைத்தியசாலைகளில் எடுக்க மாட்டார்கள்.

25. கனடாவில் ஒருவர் தமது வீட்டுக்கு முன்னால் வீதியோரமாக ஏதாவது பாரிய நிழல் தரும் மரத்தை நட விரும்பினால் அந்தந்த நகரசபையின் வன வளத்துறைப் பிரிவுக்கு அழைத்தால், அவர்கள் மண் வளம், சூழல் சுற்றாடல்களைப் பரிசீலனை செய்து உகந்த மரத்தை இலவசமாகவே நட்டு விடுவார்கள். (City urban forestry service)




# இயற்கையின் இரகசியங்கள் (யாவருக்குமான அறிவியல்)


## வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம் - சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

சென்ற தடவையில் சாதாரண ஒளியலையின் அலைநீள எல்லைகளைத் தெரிந்து கொண்டோம். இனித் தொடர்ந்து செல்வோம். தொடர்ச்சியான ஆய்வுகளின் பயனாக 800 நனோமீற்றர் அலைநீளத்தையும் விடக்கூடிய அலைநீளமுள்ள மின்காந்த அலைகளும், 400 நனோமீற்றர் அலை நீளத்தை விடவும் குறைந்த அலை நீளமுள்ள மின்காந்த அலைகளும் இனம் காணப்பட்டன. ஆக, ஒளியென்பது வெறுமனே எங்களின் கண்களுக்குத் தெரிகின்ற சிவப்பு முதல் ஊதா வரையில-ான நிறங்களைக் கொண்ட மின்காந்த அலைகளை மாத்திரமல்ல. இன்னமும் பெருமளவு அலைகளைக் கொண்டுள்ளது என்ற உண்மை தெரிய வந்தது. இவ்வளவு பெருமளவில் உள்ள மின்காந்த அலை-களை தமது வசதி கருதி வகைப்படுத்த வேண்டிய கட்டாயத்துள் அறிவியலாளர்கள் வந்தார்கள். எனவே 400 நனோமீற்றர் முதல் 800 நனோமீற்றர் வரையிலுள்ள அலைநீளங் கொண்ட ஒளியினை 'கட்புலன்' ஒளியலைகள் என்றார்கள். மற்றயவற்றை கட்புலனற்ற ஒளியலைகள் எனப் பொதுவிலே கூறலானார்கள்.

கட்புலனான வெளிச்சத்தைத் தருகிற ஒளி அலைகளின் அலைவீச்சினைப் போலவே, கட்புலனாகாத ஒளியலைகளும் குறிப்பிட்ட அலைவீச்சுகளினுள் இருப்பவை ஒத்த இயல்புகளைக் காட்டின. அப்படியாக ஒத்த இயல்புகளுடைய அலைவீச்சுக்களில் உள்ள ஒளிஅலைகளுக்கும் சிறப்பான பெயர்களையும் வைத்துக் கொண்டார்கள். 800 முதல் 10,000 நனோமீற்றர் வரையிலான அலைநீளம் கொண்ட அலைகளை, அவை சென்னிறத்திற்கு அடுத்து இருப்பதால் சென்னிறக்கீழ் அலைகள் என்றார்கள். அதற்கும் உயர்வாக, 100 மைக்குரோ மீற்றருக்கும் 10 சென்ரி மீற்றருக்கும் இடையிலான அலைநீளம் கொண்டவற்றை மைக்குரோ அலைகள் எனக் கூறினார்கள். அதற்கும் உயர்வான அலைநீளம் கொண்டவை வானொலி அலைகள் (10 சென்ரிமீற்றரில் இருந்து 10 மீற்றர் வரையிலானவை) எனப்படுகின்றன.

அடுத்து, குறைந்த அலைநீளம் கொண்ட கட்புலனாகாத அலைகளின் வகைகளைப் பார்ப்போம். ஊதாவை அடுத்து, ஊதாவின் அலைநீளத்திலும் குறைவான அலை நீளமுடைய ஒளியலைகளை புறவூதா அலைகள் என்கிறார்கள். இவற்றின் அலை நீளம் 400 நனோமீற்றரில் இருந்து 10 நனோமீற்றர் வரையில் இருக்கும். இதனையடுத்து, 10 நனோமீற்றரில் இருந்து குறைந்து கொண்டே போகையில் முதலில் எக்ஸ் கதிர்களுக்கான அலைகளும், அதையடுத்து காமா கதிர்களின் அலைகளும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சரி, இதுவரையில் ஒளியினைப் பற்றி அறிந்து கொண்ட இரகசியங்களைத் தொகுத்துப் பார்ப்போம். ஒளி (வெளிச்சம்) ஒரு மின்காந்த அலை. இந்த மின்காந்த அலையின் வேகம், வெற்றிடத்தில் செக்கனுக்கு 3 இலட்சம் கிலோமீற்றர்கள். மின்காந்த அலைகளின் அலைநீளம் என்கிற சிறப்பான இயல்பின்படி, 10மீற்றர் அலைநீளத்தில் இருந்து அலைநீளம் குறைந்து கொண்டு போகையில் இயல்புகளின் வகையில் மின்காந்த அலைகளை வகைப்படுத்தலாம். இந்த வகைப்படுத்தலில், மின்காந்த அலையின் அலைநீள வரிசையில் நடுவில் உள்ள சிறு அலைநீள வீச்சுடைய தொகுதியையே எங்களின் கண்களினால் பார்த்து அறிய முடிகிறது. பொதுவாக, மின்காந்த அலைகளின்



அலைநீள வரிசையை 1000 கோடி துண்டுகளாக்கினால் அவ்வரிசையில் நடுவில் வருகிற ஒரு சின்னஞ் சிறிய துண்டுதான் நாம் காணும் கட்புல ஒளியாகும்.

இன்னொரு விடயத்தினையும் கவனிக்கலாம். அது அதிர்வெண். அலைநீளமும் அதிர்வெண்ணும் அலையில் ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள். ஒன்றில் இருந்து மற்றதைப் பிரிக்க முடியாது. இரண்டும் சேர்ந்துதான் அலையின் வேகத்தைத் தருகின்றன. ஆனால் என்ன, இரண்டும் எதிரெதிரானவை. ஒன்று அதிகரிக்கும் போது மற்றயது குறையும். எனவே ஒளியலைகளின் அலை நீளம் குறைந்து கொண்டு போகையில் அதிர்வெண் அதிகரித்துக் கொண்டு செல்லும். இதன்படி, வானொலி அலைக-ளில் இருந்து பார்ப்போமாயின், அதிர்வெண் பெறுமானம் அதிகரித்துக் கொண்டு செல்கையில், வானொலி அலைகள், மைக்குரோ அலைகள், சென்னிறக்கீழ் அலைகள், சாதாரண கட்புல ஒளியலைகள், புறவூதா அலைகள், எக்ஸ் கதிர் அலைகள், காமாக் கதிர் அலைகள் என்ற வரிசை பெறப்படும்.

அலைநீள ஆராய்ச்சியில். அலைநீள எண்ணின் பெறுமானத்தை மறைமுடிவிலிக்கும் நேர்முடிவிலிக்கும் இடையில் உள்ள எந்தப் பெறுமானத்தையும் எடுத்து அதற்கு ஒத்ததான அதிர்வெண்ணின் பெறுமானத்தைக் கண்டு அவற்றினைப் பெருக்கி C யின் பெறுமானத்தை மாற்றாமல் இருக்கக் கூடியதாக ஆக்கலாம். அதாவது பல அலைநீள – அதிர்வெண் சோடி எண்களை C யின் பெறுமானம் ஒன்றென இருக்கப் பெறலாம்.

நாங்கள் எந்தெந்த விதங்களில் வெளிச்சத்தினைப் பாவிக்கிறோம் என்பதனையும் பார்ப்போம். வெளிச்ச அலையின் அதிர்வெண் - அலைநீள வேறுபாடுகளில் அவற்றிக்கு வெவ்வேறு பெயர்களைக் கண்டு கொண்டோம். அதில் வானொலி அலைகளைப் பற்றித் தெரிந்து கொள்வோம். வானொலி அலைகளை ரேடியோ அலைகள் என்பர். ரேடியோ அலைகள்தான் வானொலி நிலையங்களில் இருந்து செய்திகளையும் பாடல்களையும் இதர வானொலி விவகாரங்களையும் எங்களுக்கு எடுத்து வருகின்றன. அவை காற்றலைகளில் தவழ்ந்து வருவதில்லை. மின்காந்த அலைகளாகத்தான் வருகின்றன. காற்று இல்லாது இருப்பினும் அவை வரக்கூடியன. வெவ்வேறு அலைவரிசையில் உள்ள வானொலி சேவைகளை நாம் கேட்கிறோம் அல்லவா. அது எவ்விதமெனில், ரேடியோ அலைவரிசைத் தொகுதியில் உள்ள மின்காந்த அலைகளின் அதிர்வெண்களை (அலைநீளங்களை) மாற்றும் போது அவை பெறப்படுகின்றன. அதனாற்தான் ஒரு வானொலிச் சேவையுடன் இன்னொன்று கலப்பதில்லை. சில சமயங்களில் வானொலிச் சேவை வழங்கும் நிலையத்தின் கருவிகளின் செம்மையின்மை காரணமாக இன்னொரு வானொ-லிச் சேவை குறுக்கிடுவதையும் நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். அதற்குக்

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

காரணம், உறுதியான அலைவரிசை இங்கு இல்லாமையே. ஆக, எங்களுக்கு வானொ-லிச் சேவையை வழங்குவதற்கு உதவியான அலைகளும், நாங்கள் பார்க்கிற வெளிச்சமும் அண்ணன் தம்பிகள் தான்.

இதேபோலவேதான் நுண்ணலைகள் எனப்படும் மைக்குரோ அலைகளும் இன்னொரு வகையான ஒளியலைகள்தான். நாங்கள் பாவிக்கும் மைக்ரோ சூடாக்கிகளில் உணவுப் பண்டங்களை சூடாக்குவது இந்த நுண்ணலைகள்தான். அதாவது ஒளியலைதான் தனது அலைநீளத்தை உயர்ந்ததாக ஆக்கித் தன்னை நுண்ணலையாக மாற்றிக் கொண்டு, மைக்குரோச் சூடாக்கிகளில் பொருட்களைச் சூடாக்குகின்ற வேலையைச் செய்கிறது. இவை போலவே மற்றைய அலைகளும் வெவ்வேறு விதங்களில் தத்தமது தொழில்களைச் செய்கின்றன. ஆக, மாக்ஸ்வெலின் ஒளியினது மின்காந்தவலை என்ற வெளிப்படுத்தல், இயற்பியலின் பல பகுதிகளுக்கான பொதுமைப்படுத்தலாகக் காணப்படுகின்றது, இயற்பியல் சிக்கல்களை தெளிவுபடுத்தும் சிறந்த வழியாகவும் கருதப்படத் தொடங்கியது.

இப்போது மின்காந்த அலைகளில் பலவகையான அலைகள் உள்ளன என்பது எங்களுக்குத் தெரிகின்றது. இந்த மின்காந்த அலைகளின் வகைப் பிரிப்பில் அலைகள் கொண்டுள்ள

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 32ஆம் பக்கம்...

மனமகிழ் திருமணசேவை

சாதி, மத, மொழி பேதமின்றி ஏற்ற துணையை தேர்ந்தெடுப்பதற்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள். இலங்கை உட்பட ஐரோப்பிய நாடுகள் கனடா, அமெரிக்கா, அவுஸ்ரேலிய நாடுகளில் இருந்து உங்களுக்கு ஏற்ற துணையை தெரிவு செய்து உங்கள் இல்லற வாழ்க்கையை இறைவன் துணையோடு அமைத்துத்தர காத்திருக்கிறோம்.



NEILSON & FINCH க்கு அருகாமையில்

தொடர்புகளுக்கு: நரேஸ் அய்யர்:

416.666.1855 / 647.504.3336

email : thirumanam8@gmail.com

# முதியோர்களும் மூளைஒழுங்கீனமும்

## Dementia

அல்சைமர் (Alzheimer), டிமென்சியா (Dementia) ஆகிய சொற்கள் தற்போது அடிக்கடி எல்லோரது வாய்களிலும் உச்சரிக்கப்படும் சொற்கள். பலருக்கு இச்சொற்கள் குழப்பத்தினை ஏற்படுத்துவ தினையும் காணமுடிகிறது. ஆனால் இவை இரண்டும் ஒன்று அல்ல. வேறு வேறானவை. பலர் இதனை வேறுபடுத்திக் கூறமுடியாமல் உள்ளனர். டிமென்சியா என்பது நோய் அல்ல. அது ஒரு மூளை ஒழுங்கீனங்களின் கூட்டுச்சொல். இதன் போது ஞாபகமறதி, சிந்தனை இழப்பு, மொழிப்பிரச்சினை, பிரச்சினைகளை விடுவித்தலில் கஷ்டம் ஏற்படும். இதனால் தினம் தினம் கஷ்டமுறுவர். பல நோய்கள் டிமென்சியாவை உருவாக்கலாம். இதில் ஒன்றுதான் அல்சைமர் நோயாகும். அல்சைமர் ஆரம்பிக்க பார்க்கின்சன், ஹன்ரிங்ரன் நோய்கள், தலையில் காயம் ஏற்படல், திரும்பத்திரும்ப எழும் மனச் சோர்வு என்பன காரணமாகலாம். எதிர் காலத்தில் மிக அதிகரித்து வரும் ஒழுங்கீனம் இந்த டிமென்சியா எனப்படும் மூளை ஒழுங்கீனமாகும்.

டிமென்சியா என்பது ஒவ்வொருவரையும் வேறு வேறாகத் தாக்குகின்றது. 30,40,50 வயதுகளில் கூட இவ் ஒழுங்கீனம் ஏற்படலாம். எனினும், 65 வயதுக்குக் கூடியவர்களையே இது பாதிக்கின்றது. உண்மையில் இந்தமாதிரி ஒழுங்கீனம் பல வருடங்களுக்கு முன்பேயே மூளையில் இருந்திருக்கலாம். ஆனால் அந்த அடை யாளங்கள் வெளிப்படையாக வெளியே தெரியும் போதுதான் இந்த ஒழுங்கீனம் தெரியவருகிறது. இதற்கு உண்மையான சீராக்க மருந்து கிடைக்கவில்லை. ஆரம்பத்தில் இதனைக் கண்டுபிடித்து சிகிச்சையளிப்பதே ஒரே வழியாகும். தற்போது 747,000 கனேடியர்கள் டிமென்சியா, அல்சைமர் என்பவற்றுக்கு உட்பட்டுள்ளனர். 2031 இல் இது 1.4 மில்லியனுக்கு சென்று விடக் கூடும். தற்போது 33 பில்லியன் டொலர்கள் வருடாந்தச் செலவாகும். ஆனால் 2040இல் 293 பில்லியன் டொலர்கள் செலவு வரும். இதனால் இந்த ஒழுங்கீனத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. அரசியலி லும் இதுபற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள் ளது. கடந்த தேர்தல் பிரசாரத்தில் NDP கட்சி இதற்காக 40 மில்லியன் டொலர் ஒதுக்கப்போவதாக கூறியது. இதில் மின் அலைப்பரீட்சை (Screening), நோய் அறிதல், உதவிகள், ஆராய்ச்சிகள் என்பன அடங்கும்.

10 பேரில் ஒருவர் ஒன்ராரியோ மாகாணத்தில் டிமென்சியா ஒழுங்கீனத் திற்கு உட்பட்டுள்ளார். இது 65 வயதுக்கு மேற்பட்டவர்களது கணிப்பீடு. 65 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையில் இது 14.9 வீதமாகும். 2031இல், ஏதாவது மாற்றம் நிகழாது விட்டால் 1.4 மில்லியன் மக்கள் இப்பிரச்சினைக்கு உள்ளாவர். ஒன்ராரியோ டிமென்சியா ஆலோசனைக்குழு (Ontario Dementia Advisory Group) (ODAG) எதிர்காலச் சுனாமியாகவும், ஒரு திடீர் குண்டுவெடிப்புப்போல நாம் பாதிப்புறு வோம் எனக் கூறுகிறது. அல்சைமர் குழுவினைச் சேர்ந்த Mimi Lowi-young என்பவர் டிமென்சியாவின் சில தகவல் களைக் கூறியுள்ளார். இதன்படி ஆராய்ச்சி யில் பண முதலீடு செய்தல், அவதானிப்புக் குழுக்களை ஏற்படுத்தல், எல்லா சுகாதார திணைக்களங்களையும் ஒன்றிணைத்தல், பாதுகாப்பாளர் திட்டங்களை ஏற்படுத்துதல் என்பனவே அவையாகும்.

இவ்வாறான டிமென்சியா ஒழுங்கீனத்தி னால் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஆபத்து அதிகம். ஒவ்வொரு 5 வருடங்களுக்கும் ஆபத்து 2 மடங்காகிறது. அல்சைமர் நோய்க்கு உள்ளானவர்களில் பெண்களே அதிகம் என்பது ஆய்வாகும்.

டிமென்சியாவுக்கு உட்பட்டவர்கள் பின் வரும் சில எச்சரிக்கை அடையாளங் களைக் கொண்டிருப்பர்.

தினம் தினம் ஞாபகசக்தி குறைவடையும். அதாவது குறுகியகால ஞாபகமறதி (Short term memory Loss). இதன் ஆரம்ப அறிகுறி சிலருக்கு நீண்டகால ஞாபகம் எல்லாமே வரும். ஆனால் நேற்று நடந்ததைக் கூறமுடியாதவர்களே இப் பிரச்சினைக்குரியவர்களாவர்.

இரண்டாவது அறிகுறி தடுமாற்றம் (Confusion) ஆகும். குறுகியகால ஞாபக மறதியினால் தடுமாற்றமும் ஏற்படலாம். எது நடந்தது? என்ன செய்யலாம்? நான் தப்பாக உள்ளேனா என்றெல்லாம் அடுக்கடுக்காகக் கேள்விகள் எழும். நிலைதடுமாறும்.

மூன்றாவது அறிகுறி தொடர்பாடல் (Communication) பிரச்சினையாகும். என்ன சொல் பாவிக்க வேண்டும் என்று தெரியாமையால் தடுமாற்றம் ஏற்படும். பதில் சொல்ல நேரம் செல்லும், விரக்தி ஏற்படும், உரையாடுவது முடியாமல் போகும்.

நான்காவது அறிகுறி எவரது வசைச் சொற்களையும் புரிந்து கொள்ளமாட்டார் கள். (inability to recognize sarcasm). அத்துடன் இவ்வாறான ஒழுங்கீனமுள்ளவர் கள் தம்மை அறியாது மற்றவர்களையும் புரிந்து கொள்ளாது செயல்படுவார்கள்.

ஐந்தாவது ஒழுங்கீன அறிகுறி இவர்களது மனநிலை நடத்தை (Mood changes) என்பற்றில் ஏற்படும் மாற்றங்களாகும். உளச் சோர்வு உள்ளவர்களாகவும் ஆளுமை மாற்றமுள்ளவர்களாகவும் இவர்களது கணிப்பீடு முற்றுமுழுதாக மாற்றமுற்றும் காணப்படலாம். திடீரென கோபம் ஏற்பட்டு மற்றவர்களுக்கு பல தொந்தரவு செய்வார்கள். இவர்களுக்கு எது ஆபத்தானது என்றும் தெரிவதில்லை.


ஆறாவது ஒழுங்கீன அறிகுறி தினசரி நடவடிக்கைகளை செய்ய முடியாது (Loss of functions). உதாரணமாகத் தங்களது வங்கிக் கணக்குகளை சோதனையிட





**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 25ஆம் பக்கம்

# வேலைத்தளத்தில் மன அழுத்தம் - தீர்வுகள்

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்**

## *workplace stress - solution*

இன்றைய கால கட்டத்தில் பெரும் பாலானோர் மனஅழுத்தத்தால் (Stress) பெரிதும் பாதிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாயிருப்பது வேலைத்தளத்தின் நிலைமைகள் தான். இவ்வகையான மன அழுத்தத்தால் பாதிப்புக்குள்ளாவதை எவ்வாறு சமாளிப்பது என்பதைத் தெரியாமல் வாழ்க்கையைத் தொலைப் பவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. இவ்வாறு வேலைத்தள மன அழுத்தம் (Workplace stress) ஏன் வருகிறது என்பதற்குப் பொதுவாக 10 காரணங்கள் உள்ளன.

1. நிறைய வேலை செய்ய வேண்டும். ஆனால் குறைவான சம்பளம் மட்டுமே கிடைக்கும் என்ற நிலையில் இருப்பவர்கள் முதல்வகை. வேலைச்சுமை மற்றும் குடும்பத்தைக் கவனிக்க முடியவில்லை என்ற ஆதங்கத்தால் மன அழுத்தம் ஏற்படும்.

2. மூன்று, நான்கு பேர் செய்ய வேண்டிய வேலையை ஒருவரே செய்யும்போது ஏற்படும் சுமையால் மன அழுத்தம் ஏற்படும்.

3. நான்தான் அலுவலகத்தில் மிகவும் திறமையானவன் என நினைப்பவர்கள் மற்றவர்களின் வேலையையும் தானே எடுத்துச் செய்வார்கள். அப்போது மற்றவர்கள் செய்யும் வேலைகள் அனைத் தும் குறைவாகத் தோன்றும். இதுவே அவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும்.

4. ஒருசிலர் மற்றவர்களைக் காட்டினும் திறன் மிக்கவர்களாக இருப்பர். நன்றாக வேலை செய்யக்கூடியவர். இவர் செய்தால் பிழைகள் இருக்காது என்பதால் இவர்மீது அதிக பணிச்சுமை மேலிடத்தி லிருந்து கொடுக்கப்படும்போது மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

5. நவீன உலகத்தில் அனைவருமே எட்டுக்கால் பாய்ச்சலில் ஓடவேண்டிய நிலை உள்ளது. பல நிறுவனங்களும் வேலையில் நவீன தொழில்நுட்ப மாற்றங் களை அறிமுகப்படுத்துகின்றன. இந்த தொழில்நுட்ப மாற்றத்திற்கு ஏற்ப வேலை செய்யும் திறன் குறைவாக உள்ளவர்கள் பொறுப்புகளிலிருந்து ஒதுக்கப்படுகின்றனர். இந்தப் பிரச்சினையால் பலர் உளவியல் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.

6. ஒருசில நிறுவனங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் பரவலாக்கப்படாமல் இருக்கும். பல வருடங்கள் உழைத்தும் சிறு விடயங்களுக்கு கூட உயர் அதிகாரியை நாட வேண்டியிருக்கும். தங்களால் ஒரு முடிவும் எடுக்க முடியாத நிலையால் மன விரக்திக்கு ஆளாகின்றனர்.

7. அலுவலத்தில் நல்ல மரியாதை அதிக சம்பளம் கிடைத்தும் சிலர் வேலைப்பழு காரணமாக இரவில் வீட்டிற்குத் தாமதமாக வருவது. வீட்டில் குடும்பத்தினரைக் கண்டு கொள்ளாமல் இருப்பது, இதனால் வீட்டில் மனைவி, குழந்தைகள் போன்றோருடன் சரியான பிணைப்பு இன்றி சண்டை சச்சரிவுகள் ஏற்பட்டு மன அழுத்தம் அதிகமாகும்.

8. சில அலுவலகங்களில் ஒருவருக்கு என்ன வேலை என்பதைத் தெளிவாகச் சொல்லாமல் பணியாளராகச் சேர்த்து விடுவார்கள். அவர்களிடமிருந்து எல்லா வேலைகளையும் வாங்குவார்கள். இதனால் எந்தத் துறையிலும் சிறப்பாக செயல்பட முடியாமல் தான் எந்த வேலையில் சிறப்பாக இருப்பவர் என்பதும் தெரியாமல் மன அழுத்தத்திற்கு உள்ளாவார்கள்.



9. அலுவலக அரசியல், வேலையின் தன்மை, நிர்வாக சூழல் என்பனவற்றை யெல்லாம் தாண்டி சிலர் உயர் பதவிக்கு வந்திருப்பார். சிலர் நீண்ட நாட்களாக கடினமாக உழைத்தும் சரியான அங்கீகாரமில்லாது கீழ்மட்டத்திலிருக்கும் போது, சலிப்பு, தாழ்வு மனப்பான்மை எதிர்காலம் குறித்து அச்சம் என்பனவற் றால் மனநிலை பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

10. இன்னும் சிலர் தாங்களாவே மன அழுத்தத்தை உருவாக்குவார்கள். ஊழியர் களின் தனிப்பட்ட வாழ்க்கைபற்றி கிசுகிசு பேசுவது, எப்போதும் உயர் அதிகாரி களைத் திட்டிக்கொண்டே இருப்பது, தனக்குமட்டுமே கடினமான வேலை கொடுக்கின்றனர் என்று நினைப்பது, தன்னை யாரும் மதிப்பது இல்லையென்று புலம்புவது என்பனவற்றால் தானாகவே தன்னை மன உழைச்சலுக்கு உள்ளாக்குவது.



### வேலையில் ஏற்படும் மன உழைச்சலை கையாள்வது எப்படி?

இத்தகைய மன இறுக்கத்தால் பாதிக்கப் படுபவர்கள் பெரும்பாலும் 30 முதல் 50 வயதுக்கு இடைப்பட்டவர்கள்.

1. தான் செய்யும் வேலையைப்பற்றி தெளிவில்லாது இருப்பதுதான் மன அழுத்தத்திற்கு முக்கிய காரணமாகும். நாளாந்தம் கடின உழைப்பிற்குக் கிடைப்பது ஒரு குறிப்பிட்ட சம்பளம் மட்டுமே.

2. ஓய்வும் உறக்கமும்தான் மன அழுத்தத்தைப் போக்குவதற்கான சிறந்த நிவாரணி. தியேட்டருக்கு சென்று படம் பார்ப்பது, வெளியில் சென்று சாப்பிடுவது, நண்பர்களுடன் கதைப்பது போன்றவை மட்டுமே மன அழுத்தத்தை போக்கும் காரணிகள் அல்ல. தினமும் எட்டுமணி நேரமாவது தூங்கவேண்டும்.

3. தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். இதனை கடமைக்காகச் செய்வதைவிடுத்து விரும்பிச் செய்ய வேண்டும். வெளியில் உடற்பயிற்சி கூடங்களுக்கு (Gym) செல்ல வேண்டிய அவசியம் இல்லை. யோகா போன்ற பயிற்சிகளை வீட்டிலேயே செய்து கொள்ளலாம்.

4. வேலை முடிந்து வீடு வந்ததும் குடும்பத்தினருடனோ நண்பர்களுடனோ அன்பாக அளவளாவுவதுடன் நேரம் கிடைக்கும் போது தொலைக்காட்சியில் நகைச்சுவை நிகழ்ச்சிகள், சினிமாப் படங்களை பார்த்து மகிழலாம்.


5. அலுவலகத்திற்கும், குடும்பத்திற்கும் சமஅளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அலுவலக மன இறுக்கத்தை (Tention) வீட்டிலும், வீட்டில் ஏற்படும் மன இறுக்கத்தை அலுவலகத்திலும் காட்டு வதைத் தவிர்க்க வேண்டும்.

6. மகிழ்ச்சியான விடயங்களை அனைவரு டனும் பகிர்ந்து கொள்ள வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் மனதில் எழுவதைத் தவிர்க்க வேண்டும்.

7. வருடம் இரு முறையாவது குடும்பத்தி னருடன் சுற்றுலா (Tour) போய் வருவது மனதிற்கு மகிழ்ச்சியை கொடுக்கும்.

8. தினமும் காலையிலோ, மாலையிலோ மனதை ஒருமுகப்படுத்தும் தியானப்பயிற்சி (Meditation) 10 நிமிடமாவது செய்துவர மனம் அமைதிபெறும்.


ஆரோக்கிய வாழ்வு
N. செல்வராஜி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# படைப்பாளியான பாட்டாளி - ஆவணப்படம்

நூற்றாண்டு கொண்டாடும் தமிழ்த் திரை உலகில் அழுத்தமான முத்திரை பதித்த கவிஞர்கள் இருவர். ஒருவர் கவியரசு கண்ணதாசன் இன்னொருவர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். முன்னவர் ஆர்மோனியப் பெட்டிக்கு அழகுத் தமிழை அறிமுகப்படுத்தி வைத்தவர் என்றால், பின்னவர் ஆர்மோனியப் பெட்டிக்குள் மக்கள் தமிழைக் கொண்டு சென்றவர். 1951இல் 'படித்த பெண்' படம் மூலம் தமிழ் திரைப்பட பாடலாசிரியராக அறிமுகமான கல்யாண சுந்தரம் 29 ஆண்டுகள்தான் இந்த உலகில் வாழ்ந்தார். இந்த 29 ஆண்டுகளில் அவர் நிகழ்த்தியுள்ள சாதனைகள் நிகரற்றவை. இந்த மக்கள் கவிஞனின் வாழ்வையும் படைப்பு சாதனைகளையும் நம் கண் முன் மீண்டும் ஒரு முறை நிகழ்த்திக் காட்டுகிறது, 'பாட்டாளி படைப்பாளியான வரலாறு' என்னும் இந்த ஆவணப்படம்.

'ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே.../ கரை ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே... / தூண்டில்காரன் வரும் நேரமாச்சு – ரொம்ப / துள்ளிக்குதிக்காதே கெண்டைக் குஞ்சே...' என்ற பட்டுக்கோட்டையின் பாடலுடன் தொடங்குகிறது இந்த ஆவணப்படம். இதை எடுத்துள்ள சாரோன் செந்தில்குமார், தமிழ் இலக்கியத்தில் Ph.D. முடித்தவர், பேச்சாளர். வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு அருகிலுள்ள குண்டலப்பள்ளியில் பிறந்தவர். பதினெட்டு ஆண்டுகளாக இந்திய அரசு தொலைக்காட்சி அலைவரிசையான தூர்தர்சனில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகப் பணியாற்றியவர். சில ஆண்டுகள் சென்னை லயோலா கல்லூரியில் ஊடகக் கலைகள் துறையில் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். ஆவணப்பட உலகில் தீவிரம் காட்டுவதற்காகவே அப்பணியில் இருந்து விலகினார்.

"என் பணிக்காலத்தில் மனித ஆளுமைகள் பலரையும் பேட்டி எடுத்திருக்கிறேன். ஒவ்வொருவருக்குப் பின்னாலும் ஓர் உலகம் இருப்பதை அறிந்துகொண்டேன். வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர்கள், எவ்வளவு போராட்டங்களை சந்தித்துள்ளனர் என்று தெரியவந்தது. அந்த அனுபவத்தில் இருந்து இதுவரை தமிழுலகம் அறிந்தும் அறியாமல் போன பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் போன்ற மாபெரும் கலைஞர்களைப் பற்றி ஆவணமாக பதிவு செய்யவேண்டும் என்று தோன்றியது. அதுதான் முதல் விதை" என்று கூறும் சாரோனின் எட்டு ஆண்டு உழைப்பு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய இந்த ஆவணப்படம். 2:30 நிமிடங்கள் கொண்ட இந்த ஆவணப்படத்தில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான ஐ. மாயாண்டி பாரதி, நடிகர் எஸ்.எஸ்.ஆர்., இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன், பாடகர் டி.எம்.எஸ், தமிழ் திரைப்பட ஆய்வாளர் பிலிம்நியூஸ் ஆனந்தன் உள்பட பல பிரபலங்கள் பட்டுக்கோட்டையாரின் நினைவுகளைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.



- சிவதாணு -

இந்தப் படத்திற்கான அடித்தளமாக இருந்துள்ளார் பெங்களூரில் வாழ்ந்த ஓவியர் கே.என். ராமச்சந்திரன். சென்னையில் சில காலம் பட்டுக்கோட்டையாரின் அறைத் தோழராக இருந்தவர். இந்தக் கலைஞன் தான் ஆவணப் படம் முழுவதும் பட்டுக்கோட்டையாரின் வாழ்க்கையை தன் வண்ணக் கோடுகளாலும் கனிவான குரலாலும் நிரப்புகிறார்.

இந்தப் படத்தின் இயக்குநர் சாரோனின் கலையார்வத்திற்கு ஒரு பூர்வீகம் இருக்கிறது. "எங்க அப்பா புஷ்பராஜ் நல்லாப் பாடுவார். கிறிஸ்துவ கீர்த்தனைகளை பகலிலும் திரைப் பாடல்களை இரவிலும் பாடுவார். அவருடைய தொடர்ச்சியாக என்னைப் பார்க்கிறேன். அப்பாவின் குரலில் கேட்ட பட்டுக்கோட்டையின் பாடல்கள்தான் என்னை ஆவணப்படம் எடுக்கும் அளவுக்கு அழைத்து வந்திருக்கிறது" என்று கூறும் சாரோன், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் வரலாற்றை காட்சிபூர்வமாக ஆவணப்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்து, அவரது வேர்களைத் தேடி பயணித்திருக்கிறார். அந்தப் பயணம் ஒன்றும் அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. ஒரு பழைய புகைப்படத்தைப் பெறுவதற்குக்கூட நாட்கணக்கில் காத்திருக்க வேண்டியிருந்திருக்கிறது. சில நிமிட அனுபவப் பகிர்வுக்காக பிரபலங்களின் வீடுகளுக்குப் பலமுறை அலைய வேண்டியிருந்திருக்கிறது. ஆனாலும் சாரோன் சளைக்கவில்லை.

பட்டுக்கோட்டையாரைப் பற்றிய சிறு குறிப்பே சாரோனை முதலில் அவரைத் தேட வைத்திருக்கிறது. 29 வயது வரை மட்டுமே வாழ்ந்த அந்த அரிய கவிஞரின் வாழ்க்கை எத்தனை சுவாரசியம் நிறைந்ததாக, வலிமையானதாக இருந்திருக்கும் என்று நினைத்த சாரோன், முதலில் ஓவியர் கே.என். ராமச்சந்திரனை சந்தித்தார்.

பட்டுக்கோட்டையார், இருபது வயதுக்குள் 17 விவசாயத் தொழில்கள் செய்திருக்கிறார். இச்செய்தியை கட்டுரை ஒன்றில் தோழர் ஜீவா குறிப்பிட்டிருப்பதாக நினைவு கூர்கிறார் சாரோன். "வாழ்க்கை அனுபவங்களால் மக்கள் கவிஞராக உருவான பட்டுக்கோட்டையாரிடம் நேரில் பழகாதவர்களிடம் தான் ஆவணங்கள் இருந்தன. ஆனால், அவற்றைத் தருவதற்கு அவர்களிடம் மனத்தடை இருந்தது. ஆவணப்படம் எடுத்து பல லட்சம் சம்பாதிக்கப் போவதாக நினைத்தார்கள். எனவே, நான் கவிஞரிடம் நேரடியாகப் பழகியவர்களின் நினைவுகளை மட்டுமே பதிவு செய்தேன்" என்கிறார்.

ஒவ்வொருவர் வீட்டுக்கும் குறைந்தபட்சம் பத்து முறையாவது அலைந்து நினைவுகளை காட்சியாகப் பதிவு செய்த சாரோன், "தமிழ்நாட்டில் ஆவணம் என்றால் என்ன என்பதைப் பற்றிய புரிதல் பலருக்கும் இல்லை" என்கிறார். "வாழும் காலத்தின், வரலாற்றின் உன்னதம் நமக்குப் புரியவில்லை" என்றும் வருத்தப்படும் இவருக்கு பட்டுக்கோட்டையார் பற்றிய இந்த ஆவணப்படத்திற்கு முதல் புள்ளியாக புகைப்படங்களே இருந்திருக்கின்றன.

பட்டுக்கோட்டையார் வாழ்ந்த தெருக்கள் பெயர் மாறியிருந்தன. அவருடன் பழகியவர்கள் முதுமை அடைந்திருந்தார்கள். எப்படியோ தேடித் தேடி படம்பிடித்த காட்சிகள் 127 மணி நேரத்துக்கு வந்திருந்தது. அதனை அழகிய ஆவணப்படமாக வெட்டிக் கோர்த்தவர் எடிட்டர் பி. லெனின். சாரோன் செந்தில்குமாரின் உழைப்புக்குப் பலனில்லாமல் இல்லை. 'பாட்டாளி படைப்பாளியான வரலாறு' என்ற இந்த ஆவணப்படத்துக்கு 5 விருதுகள் கிடைத்துள்ளன. சிங்கப்பூர், மலேசியாவில் இது திரையிடப்பட்டுள்ளது.

"எத்தனையோ சிரமங்கள், பொருளாதார இழப்புகள் ஆனாலும், இறுதியில் கிடைத்தது மக்கள் கவிஞர் பற்றிய வாழ்க்கை ஆவணம். தமிழ்ச் சமூகத்தில் இந்தப் படத்திற்குப் போதிய கவனம் இல்லையே என்ற கவலை எனக்குத் தீரவில்லை. மீண்டும் இதே படத்தை நான் நினைத்தாலும் எடுக்க முடியாது. இப்படத்தில் பேசிய 17 மனிதர்கள் உயிருடன் இல்லை. ஒரு மனிதரின் வாழ்க்கையில் பல மனிதர்களின் அனுபவங்கள் சேகரமாகிக் கிடக்கின்றன. ஆவணப்படுத்தல் என்பதை என் வாழ்வின் பெரும் கடமையாக நினைக்கிறேன்" என்கிறார் சாரோன்.

ஆந்திர எல்லையோரம், பள்ளிக்கூட வாசனையே இல்லாத, காடுகளுக்கு நடுவே அமைந்துள்ள குண்டலப்பள்ளி ஊரில் இருந்து வந்த சாரோன் செந்தில்குமார், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை இன்று ஆவணப்படம் மூலம் உலகமெங்கும் தமிழர்கள் மத்தியில் கொண்டு சென்றுள்ளார்.

ஆவணப்படம் என்பது எப்போதோ செய்யப்படுவதல்ல. இன்றே செய்யப்பட வேண்டியது என்று உறுதியான குரலில் கூறும் சாரோன். அடுத்து நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் வாழ்க்கையை ஆவணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். கலையை ஆயுதமாக்கிய கலகக் கலைஞன் பற்றிய படமாக அது இருக்கும்.

வாழ்த்துகள் சாரோன்.




**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# "இளையராஜா, ஏ.ஆர். ரகுமான் இசையில் பாடவேண்டும்"

## நேர்காணல் வைக்கம் விஜயலட்சுமி

'நான் பிறந்து கொஞ்ச நாளிலேயே எனக்குப் பார்வைத் திறன் இல்லை என்பது அப்பா அம்மாவுக்குத் தெரிந்துவிட்டது. இருந்தாலும் எந்தக் கவலையையும் ஏற்றிக் கொள்ளாமல் குறையே தெரியாமல் என் கண்களாய் இருந்து வளர்த்தனர். என்னுடைய 5 வயசு வரை சென்னையில் தான் இருந்தோம். அதன்பிறகுதான் கேரளா வுக்குச் சென்றோம். எனக்குள் என்ன திறமை இருக்கிறது என்று அப்பா என்னை கவனித்துக்கொண்டே இருந்திருக்கிறார். அப்படித்தான் வானொலியில் எம்.எஸ்.சுப்பு லட்சுமி அம்மா, ஜேசுதாஸ் பாடல்களைக் கேட்டுவிட்டு ராக தாளத்துடன் நான் பாடிப் பார்ப்பதை கவனித்திருக்கிறார்கள். அப்புறம் நிறைய ஆடியோ கேசட் வாங்கி வந்து அதனை கேட்கச் செய்துள்ளனர். சங்கீதம் மீது ஆர்வம் வந்து நான் பாடகியானது இப்படித்தான்.' சொல்லிவிட்டு எங்கோ பார்த்து சிரிக்கிறார் வைக்கம் விஜயலட்சுமி!

கடவுள் இவர் பார்வையைப் பறித்த பிழைக்கு இவரிடம் குரலாக வந்து மன்னிப்புக் கேட்பது போலவே இருக்கிறது இவரது குரல்வளம். 'செவியில் விழுந்து இதயம் கலந்து உயிரில் கலக்கும்' குரலுக்குச் சொந்தக்காரர். இப்போது தமிழ், மலையாளம் என மாறி மாறி இரண்டு திரையுலகின் பாட்டுக்குயிலாக பவனி வருபவர். பாடல் மட்டுமின்றி அபூர்வ இசைக் கருவியாக கருதப்படும் ஒற்றைக் கம்பியிலான காயத்ரி வீணை, கஷ" போன்ற இசைக் கருவிகளை வாசிப்பதிலும் திறன்பெற்றவராக இருக்கிறார். இவரது வீணைக் கச்சேரிகள் கேரளாவில் பிரபலம். இத்தனை வரங்களையும் இவருக்கு வழங்கிய இறைவன் பார்க்கும் சக்தியை கொடுக்காதது ஒன்றே குறை. எனினும், இசை உலகின் கண்களையெல்லாம் தன் பக்கம் ஈர்த்து கலைமகளாகக் காட்சித் தருகிறார்.

விஜயலட்சுமியின் முதல் சினிமா அடையா-ளம் 'செல்லுலாய்ட்' மலையாளப் படத்தின் 'காட்டே காட்டே...' பாடல்தான். தமிழில் 'குக்கூ'தான் விஜயலட்சுமிக்கு முதல் படம். 'என்னமோ ஏதோ' படத்தில் 'புதிய உலகை புதிய உலகை..', 'ரோமியோ ஜூலியட்' படத்தில் 'இதற்குதானே ஆசைப்பட்டாய்', 'பாகுபலி' யில் 'யாரு இவன் யாரு இவன்..'



**சந்திப்பு: சிவதாணு**

பாடல்களைக் கடந்து 'தெறி', 'மாஸ்', 'ரோமியோ ஜூலியட்', வெளிவரவிருக்கும் சில படங்கள் என விஜயலட்சுமியின் பாட்டுப் பயணம் தொடர்கிறது. சென்னை வந்திருந்த விஜயலட்சுமியைச் சந்தித்தோம்.

**சினிமா பாடகியானது எப்படி?**

ஆறு வயதாக இருந்தபோதிலிருந்தே மேடை நிகழ்ச்சிகளில் பாடி வருகிறேன். கேரளாவில் நிறைய மேடை நிகழ்ச்சிகளில் பாடியிருக்கிறேன். அப்போது பாடகர் ஜேசுதாஸ் முன்னிலையில் ஒருமுறை இரண்டு மணி நேரம் பாடியிருக்கிறேன். அதைப் பார்த்து 'வருங்காலத்தில் நீ பெரிய பாடகியா வருவாய்' என ஜேசுதாஸ் அப்போது பாராட்டியிருக்கிறார். ஜேசுதாஸ் குரல் பலித்துவிட்டது. மலையாள சேனல் ஒன்றில் என்னுடைய ஒரு நிகழ்ச்சியை பார்த்த இசையமைப்பாளர் ஜெயச்சந்திரன், 'உனது குரலில் எம்.எஸ். சுப்புலட்சுமி அம்மாவின் ஒலி அழகு இருக்கிறது' என பாராட்டியதுடன் 'செல்லுலாய்ட்' படத்தில் பாட வைத்தார். தமிழில் 'குக்கூ' படத்தில் சந்தோஷ்நாராயணன் அறிமுகப்படுத்தினார்.

**காயத்ரி வீணை வாசிக்க ஆரம்பித்தது எப்போது?**

அப்போது எனக்கு 15 வயது இருக்கும். அப்பாவிடம் என் உறவினர் ஒருவர் பிளாஸ்டிக்கால் ஆன விளையாட்டு வீணையை செய்து கொடுத்துள்ளார். இதில் சில மாற்றங்களைச் செய்து அதில் வாசித்துப் பழக வைத்தார் அப்பா. உலகிலேயே ஒற்றைக் கம்பியுள்ள வீணை இது மட்டும்தான். யாரிடமும் கற்றுக்கொள்ளாமல் நானாகவே பயிற்சி எடுத்து வாசிக்கக் கற்றுக்கொண்டேன். 'என்னமோ ஏதோ' படத்தில் நான் பாடிய 'புதிய உலகை..' பாட்டில் காயத்ரி வீணையையும் வாசித்துள்ளேன். இப்போது கஷ" இசைக் கருவியையும் வாசித்து வருகிறேன். 'ஜிங்கனமணி ஜிங்கனமணி' என்ற பாடலில் இந்த இசையை கேட்கலாம். 'வீரியம்' என்ற மலையாளப் படத்தின் பின்னணி இசையில் இதனைப் பயன்படுத்தியுள்ளேன்.

**மறக்க முடியாத பாராட்டு?**

சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஜேசுதாஸ் என்னுடைய ஆறு வயதில் என்னை ஆசீர்வதித்த நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து பாராட்டினார். கேரள இசைக் கல்லூரியில் எம்.ஏ. இசை பயின்றுகொண்டு வந்தேன். திரைப்படத்தில் பிஸியான பிறகு அதனைத் தொடர முடியாமல் இருக்கிறது. இருந்தாலும் சங்கீதத்தில் எனக்கு சந்தேகம் வந்தால் போனிலேயே என் சந்தேகத்திற்கு ஜேசுதாஸ் விளக்கம் அளிப்பார். இதையே பெரிய பாராட்டாக நினைக்கிறேன். நான் வாசிக்கும் வீணைக்கு காயத்ரி வீணை என்று பெயர் வைத்ததே குன்னகுடி வைத்தியநாதன்தான். இதையும் பெரிய பாராட்டாக நினைக்கிறேன்.

**இசைத் தவிர வேறெதிலெல்லாம் ஆர்வம் உண்டு?**


பாட்டும் விளையாட்டும்தான் எனக்கு பிடித்தமான விடயங்கள். சின்னப் பசங்களு டன் சேர்ந்து கூட்டாஞ்சோறு சமைத்து விளையாடுவது நிறையப் பிடிக்கும்.

**தமிழ், மலையாளம் தவிர மற்ற மொழிகளிலும் பாட வாய்ப்பு வந்தால் பாடுவீர்களா?**

இசைக்கு மொழி ஏது?.. வாய்ப்பு வந்தால் நான் ரெடி.

**பிடித்த கனவு?**

அதுவும் கலர்ஃபுல் கனவு. இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் இசையில் பாடவேண்டும் என்பதுதான் என் கனவு. அது நனவாகும் நாளுக்காகக் காத்திருக்கிறேன். ராஜா சார், ரஹ்மான் சார் ஹவ் ஆர் யூ?



Parkway Mall Mobilicity **5 Days SALE !!!**

$50 OFF COUPON

IMPROVED Network Coverage

# $25/mo

UNLIMITED Local Calling & UNLIMITED Text Messaging

# $35/mo

Free Voice Mail

UNLIMITED Data, Internet, UNLIMITED Download

UNLIMITED Local Calling & UNLIMITED Text Messaging

All plans including Caller ID, Call waiting and more...



| IPhone 5s 16GB | Samsung Galaxy S6 32GB | Samsung Galaxy Mega Duo 5.8" | Samsung Galaxy Grand Prime | Samsung Galaxy Ace 2x | Blu Dash M2 | ZTE Salem 3G |
|---|---|---|---|---|---|---|
| ~~$549.99~~ | ~~$729.99~~ | ~~$499.99~~ | ~~$399.99~~ | ~~$249.99~~ | ~~$199.99~~ | ~~$129.99~~ |
| $299.99 | $449.99 | $249.99 | $99.99 | $79.99 | $79.99 | $0 |

No Contract !!
No Credit Check !!

All phones working to Mobilicity now !!!
Even Iphone 4, Bring in your own phone !!!

ONLY at

Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough
M1R4B8, 416-999-9229

mobilicity
Now that's smart.™

நீங்கள் கல்வி, தொழிலில் தகுதியும், அனுபவமும் உடையவர்களா? அப்படியானால் நீங்களும் கனடா வரலாம். உங்களின் தகுதிக்கு அமையக் கூடிய வேலை வாய்ப்பை சரியான நிறுவனங்களில் இருந்து சகல சட்ட விதி முறைகளுக்கும் அமைய ஒப்பந்தங்களுடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: **647.478.9510**

# FOOD DELIVERY

DELIVERY AREA
**SCARBOROUGH TO DOWN TOWN**
Flexiable time. தொடர்புகளுக்கு:
**647.686.3283/**
**647.712.3055**

# வீட்டு சமையல்

## MCCOWAN & STEELES

சுத்தம் சுகாதாரமான வீட்டு சமையல், பலகாரங்கள் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **647.620.5208**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# PIZZA- PIZZA

அனுபவமுள்ள /அனுபவமற்ற Delivery Drivers & Cashier அனுபவமுள்ள, Cook போன்ற வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
Full time or Part Time.
**416.505.1772**
**647.706.2046**

# LAND SALE

இல 35/2 கந்தசாமி ஒழுங்கை அடைக்காக் தோட்டம் கந்தசாமி கோவிலின் அருகாமையில் வட்டுக்கோட்டை தெல்லிப்பளை வீதியில் அமைந்துள்ளது. வீட்டுடன் கூடிய 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
மேலதிக தொடர்புகளுக்கு :
**416.412.3481/ 416.294.5763**

# LAND FOR SALE

2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. 3 km from Jaffna town (Vannarpannai).
(4 Rooms with attached washroom)
விலை 1 கோடியே 10 லட்சம்.
**0044.744.829.7718 (Sathees)**
**416.720.0548 (Sakunthala)**

# JOB JOB JOB

## COOK & CASHIER WANTED

Scarborough இல் உள்ள Restaurant / Convenience store க்கு வேலை செய்வதற்கு ஆட்கள் உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு: **647.204.1520**

# JOB JOB JOB

## TABLE SAW OPERATOR WANTED
### STEELES & GOREWAY

Brampton Based company Looking for experience Table Saw operators.
**Contact: 905.629.8264**

# NOW HIRING PART & FULL TIME

**Scarborough** இல் அமைந்துள்ள பிரபலமான இலங்கை, இந்திய உணவகத்திற்கு பணியாட்கள் தேவை.

- இலங்கை, இந்திய சமையல் வல்லுனர்
- பலகாரங்கள் செய்யக்கூடியவர்கள்
- Customer Service
- Dishwashing

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
தொடர்புகளுக்கு : **647.292.4699**

# ROOM FOR RENT

## MIDLAND AVE. & EGLINTON RD.

2 Room for rent in main floor. 1 Room for rent in bsmt. 3 அறைகளும் தனித்தனியாகவும் வழங்கப்படும். Parking, Laundry, Internet. Single / Students (Male) preferred. Avail. immediately. Close to plaza, School, TTC, Kennedy Subway.
தொடர்புகளுக்கு: **647.869.1633**

# LOT PERSON / AUTO DETAILER WANTED

SCARBOROUGH வில் அமைந்துள்ள Used Car Dealer Ship ஒன்றிற்கு வாகனங்களை Cleaning செய்ய, Display Lot ஐ பராமரிப்பதற்கு ஆட்கள் தேவை. Must have Ontario valid Driver Licence. Full / Part time position available.
தொடர்புகளுக்கு: **416.419.2300**

# HOME RENOVATION HELPER WANTED

## ANOJH HOME RENOVATION

Home renovation வேலைக்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. Painting & drywall வேலைக்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு : **647.267.4826**

**லண்டன் செல்வதற்கான அரிய வாய்ப்பு**

நீங்கள் O/L, A/L படித்துவிட்டு வெளிநாடு செல்லக் காத்திருப்பவரா?
அப்படியாயின் இது உங்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு
அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் லண்டனிற்க்கான student
விசாக்கள் செய்து தரப்படும். அடிப்படை தகைமைகள்- O/L or A/L
விசாக்களுக்கு தேவையான வங்கிக் கணக்குகளும் செய்து தரப்படும்..
தொடர்புகளுக்கு - **Mr:-Sathes 0044.744.829.7718**
**0044.744.828.9717**

**AZ DRIVERS WANTED**

**ASAP.50 SINGLE & .55 TEAM**

- *Dedicated Run*
- *Newer trucks - Volvo*
- *GTA city drivers $20.00 / HR*
- *Paid every weekly*
- *.50 Single / .55 team*

*Minimum 2-3 Driving Experience*
*Owner operator wanted / paid weekly*

**Contact: 416-737-5728** **Email:info@nylogistics.ca**

**WORK OPPORTUNITY**

**Rajee beauty saloon**
346 Main St. Markham. Ontario L3P 1Z1
**Hair stylist and beautician**
Work opportunity for men & ladies
தொடர்புகளுக்கு - Praba - **647.867.5696**

**HELP WANTED**

**Ideal square** இல் வேலை செய்வதற்கு
**Stair Installer (தச்சுவேலை)**
**(GENERAL HELP WANTED)** அனுபவம் உள்ளவர்கள்
தேவை. Full time or Part time. With Benefit.
தொடர்புகளுக்கு: **416.830.3932**

# முதியோர்களும்...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

நிலையங்கள் வதிவிடசிகிச்சை அளிக்கின்றன. வீட்டுச்சூழ்நிலைகளை அங்கு ஏற்படுத்தி விசேட பயிற்சியாளர்கள் உதவுகின்றனர். Dementiability enterprises inc you how in enhance the likes என்ற நிறுவனம் மிகச் சிறப்பாக இதற்கு உதவுகிறது. இவர்களிடம் பல்வேறு தொழில் நிபுணர்கள் உளர்.



டிமென்சியா ஒழுங்கீனம் உள்ளவர்களுக்குப் பரீட்சைகள் கூட உள்ளன. இதனை Mini Mental state examination (MMSE) என்பர். இதனை folstein test எனவும் கூறலாம். 30 புள்ளிகள் வழங்கக்கூடிய அளவில் வினாக்கள் உள. 5-10 நிமிட பரீட்சையே இடம் பெறும். 1975 இல் Folstein என்ற அறிஞரே அறிமுகப்படுத்தினார். இதில் கணிதம், மொழி, மீள்நினைவு என்பவற்றிற்குப்புள்ளிகள் வழங்கப்படும். 30க்கு 24 எடுத்தால் சாதாரணம். 9க்கு குறைந்தால் கடும் நிலை 10-18 எடுத்தால் சாதாரணம் 19-23 எடுத்தால் முன்னேறிய நிலை எனப்படும். அமெரிக்காவில் இம்முறையில் பல பரீட்சைகள் உள. இதனைவிட ஞாபக சோதனைகளும் உள. இதனை Self Administered geocognitive examination (SAGE) எனலாம். இதில் 15 வினாக்கள் உள. கணினி மூலம் கூட இப்பரீட்சைகள் உள. இது இங்கிலாந்தில் உள்ள முறையாகும். பேச்சு சம்பந்தமான பரீட்சைகளும் உள.

மூளையை வலுப்படுத்துவதே டிமென்சியாவுக்கான முதல் தீர்வு என்பதால் அதுபற்றிய அறிவு முக்கியமானதாகும். எனவே சிறந்த உடற்பயிற்சி செய்து உடலுக்கும் மூளைக்கும் நல்லமுறையில் இரத்தம் செல்ல வழிவகுக்க வேண்டும். இதற்காகவே உடல் நடவடிக்கை தேவையாகும். அடுத்து புகைப்பதனை நிறுத்துவது முக்கியமானது. புகைப்பவர்களுக்கு நீண்ட காலத்தில் அறிவுசார் திறன் குறைகிறது. வாகனத்தில் செல்லும்போது சீட் பெல்ட் அணிதல், மற்றும் ஹெல்மெட் அணிவதனால் காயமுறுவதினைத் தவிர்க்கலாம். நல்ல நித்திரை கொள்ளல் அவசியம். சமூக நடவடிக்கைகளில் ஈடுபடல், மகிழ்வுறல், பாடுதல் நல்லது. நண்பர்களுடன் தொடர்பு கொள்வது அவசியம். தொடர்ந்து நூல்கள் வாசித்தல், உயர் இரத்த அழுத்தத்தைக் குறைத்தல், எடையைக் குறைத்தல் அவசியம். நீரிழிவினையும் தடுக்க வேண்டும். ஆரோக்கிய உணவு, பழவகைகளை உண்ண வேண்டும். மன அழுத்தத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

இன்று உலகில் 47.5 மில்லியன் மக்கள் இவ்வகையான டிமென்சியா ஒழுங்கீனமுள்ளவர்களாவர். அதாவது கனடாவின் மொத்த சனத்தொகையை விட இது அதிகம். 2030 இல் இத்தொகை 75.6 மில்லியனாகவும் 2050 இல் 135.5 மில்லியன் தொகையாக மாறும். அமெரிக்க டொலரின் 604 பில்லியன் இதற்குச் செலவாகும். இன்றுள்ள மனிதகுல பிரச்சினை இதுவாகும்.

# இயற்கையின்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

சக்தியும் முக்கிய இடத்தினைப் பிடிக்கின்றது சக்தி மிகவும் குறைந்த மின்காந்த அலைகள்தான் வானொலி அலைகள். அதனை அடுத்து இருக்கும் மைக்ரோ அலைகள் எனப்படும் நுண்ணலைகள் வானொலியலை களை விடவும் சக்தியின் அளவிற் கூடியன. சென்னிறக்கீழ் அலைகளோ, நுண் அலைகள் கொண்டுள்ள சக்தியையும் விடக் கூடிய சக்தி கொண்டவையாகக் காணப்படுகின்றன. சென்னிறக்கீழ் அலைகளையும் விடச் சக்தியின் அளவிற் கூடியவை 'கட்புலன்' அலைகளாகும். சாதாரண கட்புலன் ஒளியலைகள் கொண்டுள்ள சக்தியைவிடக் கூடிய அளவில் புறவூதாக் கதிர்களுக்கான அலைகளும், அவற்றை விடச் சக்தி கூடியனவாக எக்ஸ் கதிர்களும் உள்ளன. எக்ஸ் கதிர்களின் சக்தியையும் விட இன்னமும் அதிக சக்தியைக் கொண்டவை தான் காமாக் கதிர்கள்.

வெளிச்சம் பற்றிய இரகசிய சுவாரசியங்கள் இன்னமும் இருக்கின்றன. அடுத்த தடவையும் இன்னமும் கொஞ்சம் பாரப்போம்.

## மார்க்கம் தமிழ் முதியோர் சங்கம் - கனடா



24.06.2016 நடைபெற்ற "மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தின்" 14வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட நிருவாகக்குழுவின் புகைப்படம்

நிற்பவர்கள் இடமிருந்து வலம்

திருவாளர்கள். கருணாகரன், பத்மநாதன், பொன்னம்பலம், நாகராஜா,
திருமதி. திரேசா அந்தோனிமுத்து, திருமதி. ருக்மணி பாலசுப்பிரமணியம்,
திருமதி. மகேஸ்வரி அரசரத்தினம் (நிருவாகக்குழு அங்கத்தினர்கள்)

இருப்பவர்கள் இடமிருந்து வலம்

திரு. பற்குணன் – உப செயலாளர், திரு. சுந்தரலிங்கம் – செயலாளர்
திரு. பத்மநாதன் – போஷகர், திரு. சிவசுப்பிரமணியம் – தலைவர்
திரு. சண்முகன் – பொருளாளர், திரு. பரமநாதன் – இணைப்பாளர்

சமூகமளிக்க முடியாதோர்:


திருமதி. லீலா சிவானந்தன் – உப தலைவர்
திருமதி. நாஹேஸ்வரி கைலாசபிள்ளை – நிருவாக்ககுழு அங்கத்தவர்
திரு. கணேசலிங்கம் - நிருவாக்ககுழு அங்கத்தவர்

# புத்திசாலி முயல்

ஒரு காட்டில் முயல் ஒன்று வாழ்ந்து வந்தது. அடிக்கடி முயல்கள் பிற மிருகங் களால் வேட்டையாடப்படுவதால் இந்த புத்திசாலியான முயல் மிகக் கவனமாகவும், அவதானமாகவும் இருந்தது. காட்டில் நடக்கும் எல்லா விடயங்களும் இந்த முயலுக்கு தெரிந்திருந்தது. மற்ற மிருகங் கள் சாப்பாட்டில் மட்டும் ஆர்வம் காட்டும் போது இந்த முயல் காட்டில் நடப்பதைப் பற்றி அறிந்து கொண்டும் இருந்தது. எனவே அது பறவை ஒன்றை கண்டபோது பறவையிடம், 'காட்டில் இன்று என்னத்தைக் கண்டாய்'? எனக் கேட்டது.

பறவையும் தான் காட்டின் மறுபக்கத்தில் மனிதர்கள் பெரும் கூடுகளுடனும், பொறி களுடனும் திரிவதைக் கண்டேன் என்றது. இது முயலுக்கு ஆச்சரியமளித்தது. ஏனெனில் மனிதர்கள் அந்தக் காட்டிற்கு வருவதில்லை. முயலுக்கு மனிதர்களை பற்றி பெரிதாக தெரியாது. என்ன நடக்கிறது என முயல் போய் பார்க்க விரும்பியது.

அடுத்த நாள் முயல் காட்டின் மறுபக்கத் திற்கு சென்று ஒரேயடியாக சாப்பாடும் தேடி, மனிதர்களையும் பார்க்க தீர்மானித் தது. எனவே அது காட்டின் மறுபக்கத்திற்கு சென்றது. காட்டின் மறுபக்கத்திற்கு முன்னர் ஓர், இருமுறை தான் சென்றிருந்தது. காட்டின் அந்தப் பக்கத்தில் மிகவும் வஞ்சகமான மிருகங்கள் இருப்பதால்



முயல் அங்கு செல்வதில்லை. எனவே இவ்வாறு முயல் செல்லும்போது மிகக் கவனமாக எல்லாப் பக்கத்தையும் பார்த்துக் கொண்டு அவதானமாக சென்றது.

அப்படி இருக்கையில் ஒரு பக்கத்தால் ஒரு நரி வருவதைக் கண்டது. அந்த நரி தன்னை ஒரு மாதிரி பார்ப்பதால் அது தன்னை சாப்பிட நினைக்கின்றது என முயலுக்குப் புரிந்தது. எனவே அது திடீரென காட்டினுள் ஓட ஆரம்பித்தது. ஓட ஓட அது திரும்பிய போதெல்லாம் நரியும் தன் பின்னால் ஓடி வருவதைக் கண்டது. மரங்களுக்குள் ஒளிந்து ஓடாமல் முயலுக்கு தெரிகின்ற மாதிரி நரி பின்னால் ஓடி வருவதால் அது புத்திசாலி நரி அல்ல என முயலுக்குப் புரிந்தது.

எனவே முயல் ஓடுவதை விட புத்தியை பாவித்தால் தான் தப்பமுடியும் என நினைத்து, ஓடுவதை நிறுத்தி நரியிடம் 'நரி! நீங்கள் என்னை சாப்பிட நினைக்கிறீர்கள் என எனக்குத் தெரியும். என்னால் தப்ப முடியாது என்றும் எனக்குத் தெரிந்ததால் நானும் உங்கள் நலனை எண்ணி ஓடுவதை நிறுத்தி விட்டேன். ஆனால்'... நரியும் "ஆனால் என்ன?" என ஆவலுடன் கேட்டது.


முயலும் "நான் உங்கள் நலனை கருதி ஓடவில்லை. எனவே நீங்கள் என்னுடைய நலனை நினைத்து என்னுடைய ஆசை ஒன்றை நிறைவேற்றுவீர்களா?" என்று கேட்டது.

நரியும் "என்ன ஆசை?" என கேட்க முயலும், 'நான் ஒருமுறையும் நரி ஊளை யிடுவதை கேட்டதே இல்லை. ஊளை யிட்டுக் காட்டுவீங்களா?" என்றது.

முட்டாள் நரியும் முயலால் தப்பமுடியாது என எண்ணி ஊளையிட்டது. முயல் ஓடியதால் அவர்கள் இருவரும் தற்போது மனிதர் இருந்த இடத்திற்கு அருகே வந்திருந்தனர். எனவே நரி ஊளையிடு வதை கேட்ட மனிதர்கள் வந்து நரியை பிடித்து தங்கள் மிருகக்காட்சி சாலைக்கு கொண்டு சென்றனர்.

முயலும் தப்பியதோடு, மனிதர்களையும் பார்த்தாலும், நரியின் ஊளையிடுவதை கேட்டதாலும் மிகவும் சந்தோசம் அடைந்தது.

**நீதி - புத்திமான் பலவான்**



ஞா. ஆரணி
அகவை 17

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



# "எழுதித்...

## 27ஆம் பக்கத்தொடர்ச்சி

ஊரிலை எவ்வளவு பெரிய ஆசாரக் குடும்பத்தைச் சேர்ந்தவன் நான்" என்றார்.

அமுதன் திடீரென அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்த பீங்கானை வேண்டினார். நாங்கள் நினைச்சோம் ஏதோ கறி போடப் போறார் என்று. அமுதன் "அண்ணே, வெளியே போங்கோ" எனக் கோபமாகச் சொன்னார். நாங்கள் "வேண்டாம், அந்தாள் வெறியிலை ஏதோ சொல்லுது. அவரை விடுங்கோ" என்று சொல்லச் சொல்ல அமுதன் தன் முடிவில் உறுதியாய் இருந்தார்.

மலையகத் தமிழர்களைக் கேவலமாகச் சொல்லும் ஒரு சொல்லைச் சொல்லிக் கொண்டு வயது கூடியவர் வெளியேறினார் (85).

***

இன்னொருவர், "அவங்களும் வந்திட்டாங்களோ! பாரிஸ் கெட்டுப்போச்சு. கண்டவன் நிண்டவன் ஏறினவன் இறங்கினவன் இழுத்தவன்..." எனவும் சாதிப்பெயர்களும் சொல்லி, "வந்து குவியுறாங்கள். பாரிசிலை இனி இருக்கேலாது, கனடா, ஒஸ்ரேலியா தான்ரா போகவேணும்" எனச் சொல்வது என் காதில் கேட்டது (57).

***

"நான் உங்கட சாதியெல்லாம் அறிஞ்சு கொண்டு உங்களோட ஒண்டா இருந்து, சாப்பிட்டு புளங்கின்னான் தானே!" (144).

***

ரஷ்யாவில் ஆசைதீர அள்ளிக்குளித்து கீழ்மாடியை வெள்ளமாக்கி அம்மணமாகப் பிடிபடும் தறுவாயில் "இந்திரா காந்தி... நேரு... இந்திரா காந்தி" என்னும் மந்திரத்தை ஒருவர் உச்சரிக்க, இன்னொருவர் (நூலாசிரியர்) "எங்கடை வி. பொன்னம்பலமும் அடிக்கடி ரஷ்யா வாறவர். அவற்றை பேரையும்சேர்த்துச் சொல்லனடா... கண்டபடி கதையாதை. சி. ஐ. ஏ. எண்டு சைபீரியாவுக்கு அனுப்பிப் போடுவாங்கள்" என்று அறிவுறுத்துகிறார் (21).

***

(அருள்நாதர்) சாடையாய் வெட்டியவுடன் இறைச்சியைப் பார்த்துத் திடுக்கிட்டார். "இரத்தம் ஒழுகுது. சனியன்கள் சரியாய்ப் பொரிய விடவில்லைபோல கிடக்கு. இதைக் கொண்டுவந்து வைத்தவளைக் கூப்பிடு" எனச் சத்தம் போட்டார்.

பாலன், "கொம்யூனிச நாடு. கனக்கக் கதையாதையுங்கோ" எனச் சொல்ல அருள்நாதர் "கொம்யூனிச நாடெண்டால் சரியாய்ப் பொரிக்க மாட்டாங்களோ? என்றார் (66-67).

***

"இண்டைக்கு அமெரிக்கா பெரிய சிக்கலில் இருக்கின்றது. அதுதான் உலகம் முழுக்க பிரச்சினைகளை உருவாக்குகின்றது. இலங்கையிலை ஜெயவர்த்தனாவைக் கையிலை போட்டுக்கொண்டு சோசலிச அணிக்கு பிரச்சனையைக் கொடுக்கப் பார்க்கிறது".

ஒருவர் இடைமறித்து "அமெரிக்காவையும் அதன் நேச நாடுகளையும் நாங்கள் வெல்லமுடியுமா?" என்று கேட்டார்.

அவர் சொண்டுக்குள் சிரித்துக்கொண்டு "உங்களுக்கு பலது விளங்காது. அமெரிக்காவும் மற்ற பணக்கார முதலாளித்துவ நாடுகள் சிலவும் ஒன்று சேர்ந்து நேட்டோ என்று ஒரு அணியைக் கட்டியிருக்கினம். எங்கடை ஆக்கள் வார்சோ என்ற அணியை முற்போக்கு நாடுகளுடன் சேர்ந்து கட்டியிருக்கினம்... முதலாளித்துவம் சரிந்துகொண்டு போகுது... இஞ்சாலை பிலிப்பைன்ஸ் இந்தா முடியப்போகுது. கம்யூனிச ஆட்சி இண்டைக்கோ நாளைக்கோ எண்டு இருக்கு... சோசலிச தமிழீழத்தை அடைந்து விடலாம் (136).

1906 முதல் 13 வரை இத்தாலியில் வாழ்ந்த மாக்சிம் கார்க்கி அங்கு தனக்கு நேர்ந்த பட்டறிவுகளை "இத்தாலியக் கதைகள்" என்ற தலைப்பில் வெளியிட்டார். "இத்தாலியின் தரைவண்மை, இத்தாலிய மக்களின் வழமைகள், வாழும் பாங்கு முழுவதும் இரசியாவிலிருந்து அறவே வேறுபடுவதால், சாதாரண இரசிய வாசகர்க்கு இவை கதைகள் போலவே தென்படும். ஆதலால்தான் இவற்றை நான் கதைகள் என்று குறிப்பிடுகிறேன்" என்கிறார் கார்க்கி.

அதுபோலவே 1981 முதல் 87 வரை பிரான்சில் வாழ்ந்த செல்வம் அருளானந்தம் பாரிசு மாநகரத்தில் தனக்கு ஏற்பட்ட பட்டறிவுகளை சின்னஞ்சிறு கதைகளாக வெளிப்படுத்தியுள்ளார். தமது சொந்தக் கருத்து நிலைப்பாட்டை முன்வைத்து எழுதுவோரிடம் தவிர்க்கவியலாவாறு காணப்படும் "எனது நிலைப்பாடே உத்தமமானது" என்னும் பிடிவாதம் செல்வத்திடம் காணப்படவில்லை. அகவயவாதிகளிடம் காணப்படும் அத்தகைய பிடிவாதம் ஒரு புறவயவாதியான செல்வத்திடம் குடிபுக முடியாது. இனங்கள், மொழிகள், மதங்கள், கட்சிகள், இயக்கங்கள், நிலைப்பாடுகள் அனைத்தையும் ஒரே மக்களின் வெவ்வேறு முகங்களாகவே அவர் இனங்காண்கிறார்.

தமிழர் பரம்பரையில் உதித்தது குறித்து (ஓர் எள்ளலுடன்) பெருமைப்படும் அதேவேளை, பட்டினப்பாலையை (பெருமையுடன்) மேற்கோள்காட்டி பாரிசில் வெறியாடும் நண்பர்களைச் சீண்டுகிறார். இலங்கை, இந்திய, உலக அரசியல் தலைவர்களை வம்புக்கிழுத்தாலும் கூட, அவர்களை எங்குமே அவர் எள்ளி நகையாடவில்லை. வாசகர்களுக்கு எவர்மீதும் வெறுப்பை உண்டாக்கும் வண்ணம் ஓர் ஆக்கம் அமையக் கூடாது என்று ஜெயகாந்தன், பி. ஏ. கிருஷ்ணன் போன்றவர்கள் வலியுறுத்தியதை அறிந்தவர் அவர்.

தனது நண்பர்கள் ஒரு சிங்களப் பொடியனைப் பிடித்து அடிக்கத் தயாராகும்பொழுது, "எடேய், அவனை (சிங்களப் பெடியனை) விடுங்கோடா" (112) என்றும், மலையக மக்களைத் தாழ்த்திப்பேசும் பெரியவர் "வெறியிலை ஏதோ சொல்லுது. அவரை விடுங்கோ" (85) என்றும் கேட்டுக்கொள்ளும் நூலாசிரியர் சாதிபேதம் பாராட்டுவோரை வெறும் பைத்தியக்காரர்கள் என்று வாய்க்குள் சினந்துவிட்டு அகன்றுவிடுகிறார் (57).

செல்வத்தின் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கை சரிவரப் புரிந்துகொள்ளும் ஜெயமோகன் "சரளமான மென்மையான சித்தரிப்பு துயரத்தின் கனத்தால் கவிதையாக ஆகும் இடம் இது" என்று தனது முன்னுரையை நிறைவு செய்வதில் வியப்புக்கிடமில்லை. ஏனெனில், "1992 இல் வெளியான இவரது 'கட்டடக்காடு' என்ற கவிதைத் தொகுதியே புலம்பெயர்ந்தோரது வாழ்வியல் சுமந்த முதல் கவிதைத் தொகுதி" (திலிப்குமார், முன்னுரை).

Dubliners பற்றி ஜேம்ஸ் ஜொய்ஸ் எழுதியதை முன்மாதிரியாகக் கொண்டு தானும் "லண்டன்காரர்" பற்றி எழுதியதாகத் தெரிவிக்கிறார் சேனன். மாக்சிம் கார்க்கி தமது இத்தாலிய அனுபவங்களை எழுதியது போல, தான் பாரிசில் வாழ்ந்த கதை சொல்லுகிறார் செல்வம் அருளானந்தம். தமிழ் எழுத்துலகிற்கு நாடுகடந்த கதைசொல்லிகள் ஈந்த கொடைகளுள் அவரது "எழுதித் தீராப் பக்கங்கள்" தனியிடம் பெறுகிறது.



T Math tutorial326

Answers to tutorial325

1)Two sides are defined by $\overrightarrow{AB} = (-6, -3, -2)$ and $\overrightarrow{AC}$=(-3 ,2 ,-6 )

$\overrightarrow{AB} \times \overrightarrow{AC} = (14, -42 — 21)$

=7(2 ,-6 ,-3)=7$\sqrt{(4+36+9)}$ =49

Area of triangle =49/2 =24.5

2)A10-N force acts in the direction of a vector(1,1)A unit vector along $\vec{F}$ IS (1/$\sqrt{2}$ +1/$\sqrt{2}$).so F=10(1/$\sqrt{2}$ +1/$\sqrt{2}$) =5$\sqrt{2}$+5$\sqrt{2}$), the displacement vector d=$\overrightarrow{PQ}$=(,7,5).w=$\vec{F} \times \vec{d}$=35$\sqrt{2}$+25$\sqrt{2}$=60$\sqrt{2}$

3)Rewriting the equation

$\frac{x-(0)}{-1}=\frac{y-(-2)}{1}=\frac{z-0}{1}$

So the eqn .is $\vec{r} = (0, -2, 0) + t(-1,1,1)$

4)The scaler eqn .of the plane having x intercept -1,y intercept 2 andz intercept 3 is

$\frac{x}{-1}+\frac{y}{2}+\frac{z}{3}$ =1 ,or 6x-3y-2z +6 =0

The distance from A(1 ,-2 ,-2) to this plane is d=$\frac{6+6+6+4}{\sqrt{(36+9+4)}}$=22/7

5 (a))1+8$x^{-1}$+15$x^{-2}$

=(1+5$x^{-1}$)(1+3$x^{-1}$)

(b) $x^{1/2}$-$x^{5/2}$

=$x^{1/2}$(1-$x^{4/2}$) =$x^{1/2}$(1-$x^2$)

Questions tutorial326

1)At the end of 14 minutes 1/16 of a sample of polonium remains.Determine the half life of polonium

2)How many committees of size 5 can be selected from 11 people -5 men and-6 women if Ron and Enzo refuse to serve on the same committee ?

3)Let l be the line of intersection of two planesx+y+z-1=0 and 2x-3y -z +2 =0. Find the scaler equation of theplanethat contains the line l and passes through the origin?

4)Arandom walk on the xy planestarts at the point (0,0)and moves at each step one unit right and one unit up .How many random walks end at the point(5,3)?

By MrS.F Xavier(Teacher)
TEL 6473409490/4167322228 .

# பிரகதி சித்தா மூலிகைச் சிகிச்சை நிலையம்
## 10,000 Years Old Traditional System Of Tamil Medicine



இது ஒரு பதினெண் சித்தர்களின் பாரம்பரிய அனுபவ சித்த வைத்திய சாலை.சித்தர் பெருமக்களின் அதி சூட்சுமமான ஏட்டு சுவடியின் மூலம் பெறப்பட்ட பாரம்பரிய அனுபவம் மிக்க சிறந்த வைத்திய முறையில் தயாரிக்கப் பட்ட மருந்துகள் . எந்த பக்கவிளைவுகளும் இல்லாதது.

மூட்டுவலி, மூட்டுத்தேய்மானம், இடுப்புவலி, நாரிப்பிடிப்பு, நாட்பட்ட முதுகுத்தண்டுவலி, கழுத்துவலி, எலும்புத்தேய்வு, தோல்வியாதி, சொரியாசிஸ் (Psoriasis) போக்கிக்கொள்ள, 96 விதமான கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான நிரந்தரமான தீர்வு காண, காது சம்பந்தப்பட்ட நோய்களுக்கான தீர்வு காண, சக்கரைப் புண், மாறாத படுக்கைப் புண், தீப்புண் குணமாக, ஒற்றைத்தலைவலி, நீரிழிவு,



ஆஸ்த்துமா, மூலநோய், மலச் சிக்கல், முடி உதிர்தல், வழுக்கை விழுவதைத்தடுக்க, தூக்கமின்மை, இரத்தழுத்தம், ஆண்மைக்குறைவு, குழந்தையின்மை, பலவீனமான ஒல்லியான உடம்பை நல்ல ஆரோக்கியமாக ஆக்கிக் கொள்ள, முரசுகரைதல், உடல் எடை குறைத்தல், குடற்புண், நரம்பு வாதம் (varicose vein) அனைத்து நோய்களுக்கும் நிவாரணம் பெறவும்

**PREMI.S,** பாரம்பரிய சித்த வைத்தியர் (ராஜவைத்தியம்)
Hereditary Siddha Practitioner (Royal Treatment)
Siddha System of Medicine (IND), DHMS (IND),Natural Medicine Practitioner® (CAN)





அனைத்துக்கும் நிவாரணம் பெற அழையுங்கள்
Phone: +1 (647) 278 - 3100, Email: pragatishc@gmail.com, Web: www.pragatisiddha.com

# EDUCATION

## Review Questions16-14

### ➢ PHYSICS 12

(i) A 780-g rock is whirled in a horizontal circle at the end of a 1.0m –long string. If the breaking strength of the string is 100 N, determine the minimum angle the string can make with the horizontal and the speed of the rock.

### ➢ CHEMISTRY 12 & IB

(i) Organic synthesis

A. Benzene → toluene →benzoic acid

B. 1-propanol →acetone

C. Acetaldehyde →ethylethanoate

(ii) Determine the de Broglie wavelength of an electron that accelerates from rest through a potential difference 60V

### ➢ BIOLOGY Gr 12

Genetically modified herbicide-resistant crop plants

The genes will be transferred (gene flow) by cross pollination by relative species. Therefore crop plants genetically modified to be herbicide resistant will be transferred by pollen to wild relatives whose hybrid offspring will then become more aggressive or invasive. Therefore, the relative wild species which unwanted for cultivation become resistant to herbicides. These plants will not be destroyed by herbicides, and become aggressive.

### ➢ CALCULUS & VECTORS

Differentiate the following,

(i) $\sqrt{\frac{1+x^3}{1-x^3}}$ ans: $\frac{3x^2}{(1+x^3)^{\frac{1}{2}}(1-x^3)^{\frac{1}{2}}}$

(ii) $\sqrt{1+x^2}. sin^3\sqrt{x}$

ans:

$$\sqrt{1+x^2}\,3\sin^2\sqrt{x}.\cos\sqrt{x}\,\frac{1}{2\sqrt{x}} + \sin^3\sqrt{x}.\frac{1}{\sqrt{1+x^2}}.2x$$

## Answer Key : 16-13

### ➢ PHYSICS 11

(i) Whiplash is a neck injury when the neck is forcibly bend forward and then backward or / backward and then forward. It occurs as a result of sudden deceleration or acceleration in an automobile accident.

(ii) When an object falling down wards under the influence of gravitational force its drag force increases with the increase of velocity of the falling object. When the drag force becomes equals to the gravitational force, the net force acting on the object zero. Then the object falls with a constant velocity is called terminal velocity.

(i) Air resistance, shape, density, surface area, condition of atmosphere- density of the air

### ➢ PHYSICS 12

(i)

$$a = \frac{V_f - V_i}{\Delta t}$$

$$a = \frac{40m/s \quad - 0m/s}{\Delta 0.08}$$

$$a = 500m/s^2 ; \quad F_{ave} = ma;$$

$$F_{ave} = (0.160 \text{ X } 500)\text{ N}$$

(ii) $I = P_f - P_i = mV_f - mV_i$

(0.16x 52) – (0.16x9 –(40)

= 8.32 + 6.4

= 14.72 kg.m/s

(Ans= 15kg.m/s)

(iii) $F_{(ave)} = J/\Delta t$ =15/0.0013 = 11323N

Ans=1.1x $10^5$ N)

### ➢ FUNCTIONS 11

(A) $k < 3$

(B) (i) $f(x) = 5x + 7$ (ii) $f(x) = -\frac{3}{2}x + 3$

Answer key
16-14 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# அமைதிக்கான...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

விட்டார். ஆதலால் உங்களிடம் கூறுவதற்கு என்னிடம் எதுவுமில்லை' எனக் கூறினார்.

அரசன் மிகவும் கோபமடைந்தான். 'அக்கணமே நான் உன்னைப் போகும்படி கூறினேன். சில நிமிடங்கள் முன்னரே நீ போயிருந்தால், சரியான நேரத்தில் நீ அங்கே போய்ச் சேர்ந்திருப்பாய். அத்துடன் மரணமடையாமல் என்றென்றும் உயிர் வாழ்வதற்கான வழிையக் கண்டு கொண்டிருப்பாய்' என்றார். 'ஆனால் நீ காலம் தாழ்த்தியபடியால் மரணமடையாமல் என்றென்னும் உயிர் வாழ்வது எப்படியென்று உன்னிடம் கூறுவதற்கு முன்னரே அவர் மரணித்து விட்டார் எனக்கூறினார்.

தூதுவருக்கு தண்டனை வழங்கவேண்டும் என அரசன் அறிவித்தான். மறுநாள் சபை கூடியது. எல்லோரும் அங்கே இருந்தார்கள். பெரிய விவாதம் நடைபெற்றது. 'இப்பொழுதே அவருக்கு மரணதண்டனை வழங்கப்பட வேண்டும்' என சிலர் கூறினர். 'சிலரோ இல்லை இது இவரின் தவறல்ல' எனக் கூறினர்.

அவ்வழியால் வந்த புத்திமான் ஒருவர் அவ்வாக்குவாதம் எதனால் நடைபெறுகின்றதென அறிய விரும்பி அவ்விடத்திற்கு வந்தார். மக்கள் அவரிடம் அரசன் பற்றியும், ஞானி பற்றியும் கூறினர்.

அந்தப் புத்திமான் 'தண்டனையைப் பற்றி நீங்கள் சண்டையிடுகிறீர்கள். ஆனால் எவருமே அந்த ஞானிக்கு உண்மையிலேயே சதாகாலமும் உயிர் வாழ்வது எப்படி எனத் தெரிந்திருக்கவில்லை, என்பதை உணரவில்லை' எனக் கூறினார். 'அவர் சதாகாலமும் எவ்வாறு உயிர்வாழ்வதென்பதை அறிந்திருந்தால், அவர் எதற்காக மரணமடைந்தார்?' எனக் கேட்டார்.

அதேபோலவே அமைதியைத் தேடவேண்டும் என எண்ணும் மக்கள் மிகவும் தெட்டத் தெளிவானதொன்றை புறக்கணிக்கிறார்கள் என திரு. பிரேம் ராவத் கூறுகிறார். 'நீங்கள் பூரணமானவர். ஆனால் நீங்கள் அதை அறிந்திருக்கவில்லை' என அவர் கூறுகிறார். நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் உயிருடன் இருப்பதை மறந்து விட்டீர்கள். நாம் தேடும் அமைதி எங்கே உள்ளது? அது நம்முள்ளேதான் உள்ளது. நம்முள்ளே உள்ள அமைதியை மீளக் கண்டு கொள்வது மக்களுக்கு சிக்கலாக உள்ளது. அதற்கான காரணம் மிகவும் எளிமையானது என திரு. பிரேம் ராவத் கூறுகிறார்.

'உங்களின் கண்களால் உங்களுக்கு சகலரையும் பார்க்க முடியும். ஆனால் இந்தக் கண்களைக் கொண்டு உங்களால் ஒருவரைப் பார்க்க முடியாது' என அவர் கூறுகிறார். அது யார் என உங்களுக்குத் தெரியுமா? அது நீங்கள் தான். உங்களைப் பார்ப்பதற்கு உங்களுக்கு முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று தேவை.

அதேபோலத்தான் எமது சொந்த உள்ளத்தில் உள்ள அமைதியைக் கண்டு கொள்வதற்கு எமக்கு ஒரு வழி வேண்டும். அதைச் செய்வதற்கானதொரு வழியை அவர் வழங்குகிறார். எம்மைக் காட்டும் ஒரு கண்ணாடியை வழங்கு கிறார். நீங்கள் உங்கள் பிரதி விம்பத்தைக் காண வேண்டும். எதற்காக? எதற்காகவென் றால் நீங்கள் உங்கள் தெளிவான கண்க ளால், அந்தப் பிரதி விம்பத்தைக் காணும் போது நீங்கள் கண்டுகொள்வீர்கள். நீங்கள் உணர்வீர்கள். நீங்கள் புரிந்துகொள்வீர்கள். நான் கூறுவதை நீங்கள் புரிந்துகொள்ளும் போது அமைதி என்றால் என்ன என்பதையும் நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அமைதி என்றால் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ளும்போது அது உங்களில் இருந்து தொலைவில் இல்லை என்பதையும் புரிந்து கொள்வீர்கள்.

நீங்கள் இந்த உலகிலே உண்மையான ஆனந்தத்தை, உண்மையான அழகை அனுபவிப்பதற்காகவே இருக்கிறீர்கள். நீங்கள் நம்ப முடியாத அளவு ஆசீர்வதிக் கப்பட்டவர். உங்களின் ஆசீர்வாதத்தை நீங்கள் காண்பதில்லை. உங்கள் கண் களைத் திறந்து பூரணத்துவத்தைப் பாருங்கள். உங்களின் உள்ளத்தைத் திறந்து இப்பூமியிலேயே மோட்சத்தை உணருங்கள். உங்களின் உள்ளத்தால் பார்த்து உங்களுக்கு என்ன தரப்பட்டிருக்கிறது என்பதைப் பாருங்கள். அப்போது நீங்கள் அமைதிக்கான சரியான வழியில் செல்வீர்கள்.

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
GR 9- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6

YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்





மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


# அமைதிக்கான பாதை

பிரேம் ராவத் அவர்கள் வாழ்வில் அமைதியை யும் ஆனந்தத்தையும், காலம் தாழ்த்தியோ அல்லது வேறு எங்குமோ அல்லாமல் இக் கணமே இங்கேயே, நாள்தோறும் கண்டு கொள்வதற்கான சாத்தியம் பற்றி உலகெங் கும் சென்று உரையாற்றி வருகிறார்.

'நாம் அமைதியை விரும்புகிறோம்' 'நீங்கள் தேடும் அந்த அமைதி உங்கள் உள்ளேதான் உள்ளது' என நான் கூறினால் எப்படி இருக்கும்? என அவர் கேட்கிறார். வெளியில் அல்ல - உங்கள் உள்ளேதான் உள்ளது.

அநேகமான மக்கள் தம்முள்ளே அமைதி யைத் தேடுவதற்குப் பதிலாக வேறு எங்கேயோ - அது மலை உச்சியாகக்கூட இருக்கலாம் அங்கே தேடுகிறார்கள். தெட்டத் தெளிவானதை நாம் புறக்கணித்துவிடுகிறோம். இக்கூற்றை விளக்குவதற்காக அவர் கதையொன்றைக் கூறுவதுண்டு.

'ஒரு காலத்தில் அரசன் ஒருவன் இருந்தான்'. அவனுக்கு ஒரு நாள் பயணம் செய்து சென்ற டையக்கூடிய தூரத்தில் உள்ள கிராம மொன்றில், மரணமடையாமல் என்றென்றும் உயிர் வாழ்வதற்கான வழிமுறையொன்றை அறிந்திருந்த ஞானி ஒருவர் இருக்கின்றார் என்றதொரு முக்கிய செய்தி கிடைத்தது.

இதைக் கேள்விப்பட்ட அரசன் மிகவும் ஆனந்தமடைந்தான். அரசன் தனது தூதுவரை அழைத்து 'அந்தக்கிராமத்திற்குச் சென்று என் றென்றும் உயிர்வாழ்வதற்கான அந்த இரகசி யத்தை அவரிடம் அறிந்துவந்து என்னிடம் கூறு. ஏனெனில் நான் சாகாவரம் பெற்று வாழ விரும்புகின்றேன்' என்று கூறினான். அதற்குத் தூதுவர் 'சரி எனது உடமைகளை எடுத்துக் கொண்டு நான் செல்கிறேன்' எனக் கூறினார்.

'தாமதிக்காதே' என அரசன் கேட்டுக் கொண்டான்.

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:
1.877. 707 3221 Toll free
416 431 5000 தமிழ்
416 264 7000 ஹிந்தி
www.wopg.org www.tprf.org

தூதுவர் புறப்பட்டுச் சென்றார். அரசன் தூதுவ ரின் வருகைக்காகப் பொறுமையின்றிக் காத்தி ருந்தான். அவனால் நித்திரை செய்யக்கூட முடியவில்லை. ஓ! அவன் எப்போது வரு வான், வருவான்? எனக் காத்திருந்தான். இறுதியில், இரு நாட்கள் கழித்து தூதுவர் திரும்பி வந்தார். அவர் அரசனிடம் 'மன்னியுங் கள் நான் அங்கு சென்றபோது அந்த ஞானி இறந்து

தொடர்ச்சி 36ஆம் பக்கம்


TRIP TO THOUSAND ISLANDS & QUEBEC!

July சனிக்கிழமை 23ம்திகதி மற்றும் ஞாயிற்றுக்கிழமை 24ம் திகதி

3 மணித்தியால குறுாஸ் (Cruise) பயணம் உள்ளடங்களான 2 நாள் சுற்றுப்பயணம்

பயணச்செலவு உணவு தங்குமிடவசதி அடங்களாக சொகுசு பஸ் சேவை

சுற்றுலாசெல்லும் இடங்கள்



Thousand Islands Cruise (3 Hours & Lunch Included) | Saint Joseph's Church | Montreal Murugan | Val Morin Temple

Pick up and drop off at:

FCS Frontline Community Service (Sun City Plaza)
2761 Markham Road Unit B-11
Scarborough, ON M1X 0A4

கட்டணம் : $195


தொடர்பு: விஜய குலா

(416) 840 4425







ஜீவ இரக்கம்!
நண்டின் காலை ஒடிக்காதே
நாயைக்கல்லால் அடிக்காதே
வண்டைப் பிடித்து வருத்தாதே
வாயில்லா பிராணியை வருத்தாதே

இந்தப் பாடல் பாலர் வகுப்பில் படித்தது. முருகேசர் பேரப்பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும்போது இதனை அடிக்கடி சொல்லுவார். அத்துடன் விளக்கமும் சொல்லுவார். உலகு இது பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த கவிஞர் வே. சிவக்கொழுந்து யாழ்பாணன் என்ற பெயரில் 'மாலைக்கு மாலை' என்ற புத்தகத்தில் எழுதிய பாடல் வரிகள்.

உலகர் இன்றைய நிலையை நினைத்து சிரித்தார்... யு 5 இலக்க நண்டுக்கால் அதுவும் நண்டுக்காலையே சினிமா நடிகைகளின் காலுக்கு ஒப்பிட்டு கடைகளில்......நண்டுக்கால் இருக்கோ என்கின்றனர்.




நாயைக்கல்லால் அடித்தது ஒரு காலம். நாயை 4 மணிநேரம் பராமரிக்காவிட்டாலே 4 மாதம் சிறைக்குள் தள்ளக்கூடிய சட்டம் இருக்கிறது.



இன்று சினிமா தொடங்குமுன்.. இந்தப்படத்தில் மிருகங்கள் எதுவும் வதைக்கப்படவில்லை என ஓர் அறிவித்தலை விடுக்கின்றனர். ஆனால் பல நடிக நடிகைகள் வதைக்கப்படுகின்றனர். மழைக்காட்சிக்கு அடிக்கும் தண்ணீர் குளிராக இருக்கிறதாம். மெல்லிய (சிறிய) துணியுடன் புல்லில், வைக்கோலில் உருண்டு புரளும் காட்சிகளில் தாம் துன்பப்படுவதாகவும் நடிகைகள் தொலைக்காட்சிகளில் பேட்டி அளித்துள்ளனர். கிட்டத்தட்ட அதுவும் வதை தான்.

பின் லாடன் அமெரிக்கப்படையினரால் கொல்லப்பட்டு வருடங்கள் பல கடந்து விட்டன. அவரது 23 பிள்ளைகளில் ஒருவரான மகன் ஹமாசா பின் லாடன் தந்தையைக் கொன்றவர்களை பழிக்குப் பழி வாங்குவேன் என சபதமெடுத்துள்ளான். அதற்கான வீடியோ ஒன்றையும் வெளியிட்டுள்ளான்.



பழிக்கு பழி - ரத்தத்திற்கு ரத்தம்.
இந்த வரிகளை நாம் அடிக்கடி கேட்டதுதான். பழி வாங்கும் எண்ணம், உணர்ச்சி அழிவுப்பாதைக்கே கொண்டுபோய் விட்டுவிடும். பாரதம், ராமாயணம் படித்து மட்டும் மனித இனம் திருந்தி விடுவதில்லை. உலக நாடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இன்று நடைபெறும் யுத்தங்களும், கைதுகளும், சித்திரவதை, கொலைகள் போன்றவையும் பழிக்குப்பழி ரத்தத்திற்கு ரத்தம் அடிப்படையே.



அந்தவரிசையில் பின் லாடனின் மகன் விட்ட அறிக்கை பழி வாங்குவேன்......முடிவு ?....விடிவு...,?

உலக நாடுகளில் அடிமைத்தனம் ஓங்கியிருந்தது ஒரு காலம். (இப்பொழுது ஏதோ முடிந்துவிட்டதல்ல)



கறுப்பு வெள்ளை பேதம் வேண்டாம் என முழங்கி தனது கொள்கையில் வெற்றியும் கண்டவர் ஆபிரகாம் லிங்கன். அமெரிக்காவின் 16 வது ஜனாதிபதியான இவர் 15 ஏப்பிரல் 1865 இல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இனவெறியும் மத வெறியும் உலகில் இன்றும் அடங்கியபாடில்லை. தினமும் தரைப்படை கடல்படை ஆகாயப்படை ஏதோ ஒரு மூலையில் இரவுபகலாகத் தாக்குதல்களை நடத்தி உயிரழிப்பு, நில அபகரிப்பு நடத்திக்கொண்டுதான் இருக்கின்றன.

அமெரிக்காவில் லுசியானா மாகாணத்தில் 2 கறுப்பு இனத்தவர் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் விளைவு ஆர்ப்பாட்டம் கலவரம். பொலிசார் மீது கறுப்பு இனத்தவர் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தியதில் 5 பொலிசார் சுட்டுக்கொல்லப்பட்டனர். கலவரம் அடங்கியபாடில்லை.



இப்பிடியும் உலகத்திலை நடக்குமோ? எனப் பெருமூச்சு விட்டா செக்கண்ட் புளோர செல்லம்மா. முருகேசரை சீனியோர்ஸ் ஹோமில் பார்த்துவிட்டு வந்தநேரம் முதல் உலகர் குழாம் ஏதோ மரணவீட்டுக்குச் சென்று வந்தவர்கள் போல இருந்தனர். முருகேசர் வந்த காலத்தில் எப்பாட்மென்றில் தனி அறை. அவரது தனி அறையில் சந்தனம், ஜவ்வாது மணக்கும். உலகரே பயந்து பயந்து தான் அவரது அறைக்குள் செல்வார். மகள், மகன் இங்கு படிக்கும் காலத்தில் எடுத்த படங்கள்.

இன்று அவர் இருக்கும் அறையில் ஒரே மணம். அவரைக் கவனிப்பதாகப் பணம் பெறுபவர்கள் பணத்தைக் கண்காணிக்கிறார்கள். இவர்களைத் திரும்பியும் பார்ப்பதில்லை. அவர்கள் விரும்பும் உணவும் கிடைப்பதில்லை. நிறைவேறாத ஆசையுடனும்... எதிர்பார்த்த அன்பு கிடைக்காமலும் அடங்கிப்போகின்றனர். முருகேசர் கதைப்பதற்கும் அழுவதற்கும் சக்தியில்லாமல் உலகரையும் ராசம்மாவையும் பார்த்தார்.

செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் கண்களைத் துடைத்ததை உலகர் கவனித்தார்.
அறையின் ஒரு மூலையில் 'கடமையை செய் பலனை எதிர்பாராதே!' என்ற வரிகள் கிழிந்தநிலையில் தொங்கிக்கொண்டிருந்தது.


'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' பாலர் வகுப்பில் மற்ற மாணவர்களுடன் முருகேசர் எழுப்பிய குரல் உலகர் காதில் ஒலித்தது.

"நித்தம் நித்தம் மாறுகின்ற தெத்தனையோ.. நெஞ்சில் நினைப்பதிலே நடப்பதுதான் எத்தனையோ"

ஞாபகம் இருக்கிறதா யூலை 15...31



16. "காற்றினிலே வரும் கீதம்" இசைத்திலகம் டி.கே.பட்டம்மாள் நினைவுதினம். (பிறப்பு 1919 - மறைவு 2009)



16. ஆடிப்பிறப்பு "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே..." - நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

18. கவிஞர் வாலி நினைவுதினம். (1931 - 2013

19. சுவாமி விபுலானந்தர் நினைவு தினம் (1947)



21 அன்னை சாரதா தேவி நினைவு தினம்
(சுவாமி ராமகிருஸ்ணரின் மனைவி) (பிறப்பு 1853 - மறைவு 1920)
"உனக்கு மன அமைதி வேண்டுமாயின் யாருடைய குறையையும் காணாதே. உன் குறைகளையே பார்."



21. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நினைவு தினம்.
(பிறப்பு 1927 - மறைவு 2001)

23. வரசித்தி விநாயகர் தேர்த்திருவிழா.




25. கொழும்பு வெலிக்கடை சிறையில் குட்டிமணி தங்கதுரை உட்பட 5 தமிழ் கைதிகள் சிங்களக் காடையர்களால் சிறைச்சாலையில் கொல்லப்பட்டனர்.
பல தமிழர்கள் இதேகாலத்தில் கொல்லப்பட்டனர். உடமைகள் எரியூட்டப்பட்டன. பலர் உயிரோடு கொழுத்தப்பட்டனர். 1983 இனக்கலவரம். கறுப்பு யூலை.



27. டாக்டர் அப்துல் கலாம் நினைவுதினம். இந்தியாவின் 11வது குடியரசுத்தலைவர் அறிவியலாளர். (1931 2015)

29. ஐசாக் இன்பராஜா ஈழத்து நகைச்சுவை நாடகக்கலைஞர். (1952 2014)

30. வாக்கிய பஞ்சாங்கக் கணிதர் இரகுநாதையர் (1969) நினைவுதினம்.



# இரண்டாம் வரம்

நீரஜா காரின் பின்னிருக்கையில் கலங்கிய நிலையில் அமர்ந்திருந்தாள். "மீண்டும் என் வாழ்க்கையில் விதி தன் விளையாட்டை காட்டப்போகிறதா?. நான் பட்ட துன்பங் களுக்கு முடிவு வந்து விட்டது என்று சந்தோஷப்பட்டேனே. என் சந்தோஷத்தின் ஆயுள் இவ்வளவு தானா?". அவள் கண் களில் கண்ணீர் எட்டிப்பார்க்கத் துடித்தது.

இவள் நிலையை அறியாது காரை செலுத்திக் கொண்டு இருந்த ரிஷி முன் கண்ணாடி வழியாக நீரஜாவைப் பார்த்து கண்ணடித்தான். நீரஜா கண்ணீரை அடைக்கியவாறே மெலிதாக புன்னகைக்க முயன்றாள்.

"பெரிதாக ஒன்றும் நடக்கவில்லை தான். ரிஷி மகள் தனு, நீரஜாவையும் முந்திக் கொண்டு வாகனத்தின் முன் பயணிகள் இருக்கையில் தன் அப்பாவிற்கு அருகே அமர்ந்து கொண்டது தான் நீரஜாவின் கண்ணீருக்கு காரணமாக அமைந்து விட்டது". ஒரு சாதாரண நிகழ்வு மீண்டும் அவள் வாழ்வில் எத்தனையோ வருடங் களின் பின்னர் உட்புக காத்திருந்த ஆனந்த வாழ்வுக்கு முற்றுபுள்ளி வைத்து விட்டு மீண்டும் தன் துன்ப புடத்தில் உழல உந்துதல் தர அவள் தத்தளித்தாள்.

"நீரஜா கனவு கண்டது போதுமம்மா, பிள்ளைகள் முன்னே போய்விட்டார்கள். வாங்க கண்ணம்மா" என்று மிகவும் அன்பாக ரிஷியின் குரல் அவளை



திணறடிக்க மெதுவாக தன் கண்ணீரை மறைத்தபடி இறங்கினாள்.
நீரஜாவின் மேல் ரிஷி உண்மையான அன்பை கொண்டிருந்தான். நீரஜாவும் ரிஷியும் ஏற்கனவே மணமாகி தம், தம் துணையை இழந்தவர்கள். ரிஷி தன் மனைவியை கொடுமையான நோய்க்கு காவு கொடுத்திருந்தான்.


அவனுக்குத் திருமணமாகி தனு செல்வ மகளாக பிறந்தவுடன் காலன் கொண்டு செல்ல காத்திருந்த நோயில் அவன் மனைவி படுக்கையில் விழுந்தாள். எத்தனையோ செலவு செய்து தன் மனைவி யை காப்பாற்ற முயன்றாலும் அவள் போகும் நேரம் வந்து சேர்ந்ததினால் தனுவின் தாய், ரிஷியின் மனைவி அமைதி யாக கண்களை மூடிக் கொண்டாள்.

நீரஜாவின் நிலை இன்னம் கொடுமையானது. பெற்றோர் பார்த்து கொடுத்த வரன். ஏற்கனவே காதல் முறிவின் சோகத்தில் இருந்த நீரஜாவின் கணவனால் நீரஜாவை தன் மனைவியாக மனதில் ஏற்றுக்கொள்ள முடியாது அவள் கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்ற நிலையாகவே அவள் நிலை ஆகிவிட்டது. போதாக்குறைக்கு நீரஜா கருத்தரித்தவுடன் இவளுக்கு என் குழந்தையா என்று ஒருபடி மேல் சென்று அவளை துன்புறுத்தவும் தொடங்கி விட்டான்.

கணவனின் துணையின்றி அவன் சுடு சொல் ஒன்றையே நாளும் கேட்ட நிலையில் தான் பெற்ற மகனுக்காகவே எப்படியும் வாழ்ந்து முடிக்க அவள் இறுதிவரை போராடினாள். இவளின் நிலை கண்டு பரிதாபப்பட்ட இறைவன் ஒரு நாள், விபத்தில் அவள் கணவனை காவு கொள்ள நீரஜாவினால் குற்ற உணர்ச்சியுடன் நிம்மதி பெருமூச்சு ஒன்றையே விட முடிந்தது. இவள் விதவை என்ற பெயரையும் தாங்கி நின்றாள்.

இந்நிலையிலேயே நீரஜா, ரிஷியின் பிள்ளைகள் ஒரே பாடசாலையில் கல்வி கற்று வந்தமையினால் அவள் தோழி மூலம் அறிமுகமானார்கள். தமது பிள்ளையுடன் படிக்கும் சக மாணவ, மாணவியின் பெற்றார் என்ற முறையில் மரியாதையுடன் வணக்கம் மட்டும் சொல்லி வந்தவர்கள் நீரஜாவின் தோழி மூலம் அவர் கள் இருவரும் தங்கள் துணைகளை இழந்த தனிப் பெற்றார் என்று அறிந்த பொழுது அவர்கள் இடத்தில் ஒருவர் மேல் ஒருவர் பச்சாதாபம் கொண்டார்கள்.

தொடரும்...



மீரா குகன்
ஜேர்மனி






# நான் வாசித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே. அனுப்புங்கள்

***Vlambaram@sympatio.ca***

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

இத்தாலி நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள அழகிய பெரிய தீவு சிசிலி. சரியாக மத்தியத் தரைக் கடலின் நடுவில் உள்ள அந்த தீவில் சுற்றுலா விடுதி ஒன்றை தமக்குச் சொந்தமாக வைத்திருந்தார் ரெக் கிரீன் என்ற அமெரிக்கர்.

அக்டோபர் மாதம் 1994 ஆம் ஆண்டு. ரெக் தனது மனைவி மேகி மற்றும் குழந்தைகளுடன் (நிக்கோலஸ் 7 வயது, எலினார் 4 வயது), சிசிலியில் உள்ள தனது இல்லத்திற்கு விடுமுறையை கழிக்க, காரில் சென்றுக் கொண்டிருந்தார். பயணத்தின் போது, ரெக்கின் குழந்தைகள் காரின் பின்னிருக்கையில் அமர்ந்து நன்றாக உறங்கிக் கொண்டிருந்தனர்.

ரெக்கின் காரை பின் தொடர்ந்தவாரே இன்னொரு கார் மிக வேகமாக வந்தது. அடுத்த காரில் வந்த மனிதர்கள் இரண்டு முறை ரெக்கின் காரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். ஆம், பின் தொடர்ந்த காரில் வந்தவர்கள் ஒரு கொள்ளைக் கூட்டத்தினர். ஒரு நகைக் கடையில் கொள்ளை அடித்துச் சென்ற மற்றொரு கூட்டத்தை தேடி வந்த அவர்கள், தவறாக ரெக்கின் காரை வழிமறித்து அந்த தாக்குதலை நடத்தினர். ரெக் தனது இலக்கு இல்லை என தெரிந்தவுடன் அந்த கொள்ளைக் கூட்டத்தினர் வேகமாக அங்கிருந்து மறைந்துவிடுகின்றனர்.

நொடிப்பொழுதில் நடந்து முடிந்த இந்த சம்பவத்தை சற்றும் எதிர்பாராத ரெக் மற்றும் மேகி தம்பதியினர், சற்று சுதாரித்தப்பின், பின்னிருக்கையை திரும்பி பரபரப்புடன் பார்க்க இரண்டு குழந்தைகளும் உறங்கிக் கொண்டிருந்தனர்.

சற்று நிமிட பயணத்திற்குப் பின், ஒரு சாலை விபத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு ஆம்புலன்ஸ் குழு, ரெக்கின் காரை நிறுத்தி உதவி கோரவே, ஆம்புலன்ஸின் வெளிச்சத்தில் ரெக் அப்போது தான், தனது காரின் உள்ளே கவனிக்கிறார். தனது மகன் நிக்கோலஸின் கைகள் மிக மெதுவாக அசைய, அவனது வாயில் நுரை கக்கியிருந்தது. அந்த இரு தோட்டாக்களில் ஒன்று நிக்கோலஸின் பின் மண்டையில் பலமாக தாக்கியிருந்தது.

நிக்கோலஸின் நிலைமை மிக மோசமாக இருக்கவே உடனடியாக அறுவை சிகிச்சை செய்யப் படவேண்டும் எனவும், சிசிலியில் உள்ள பெரிய மருத்துவமனைக்கு அவனைக் கொண்டுச் செல்ல வேண்டுமென அங்குள்ளவர்கள் அறிவுறுத்தினர். நிக்கோலஸ் அங்குள்ள தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டான்.

ஆனால் அங்குள்ள மருத்துவர்களோ, நிக்கோலஸின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாகவும், தங்களது நம்பிக்கை சிதைந்து விட்டதாகவும் ரெக்கிடம் தெரிவித்தனர். இரண்டு நாட்கள் மேலும் கடந்தது. மருத்துவர்கள் ரெக் தம்பதியினரிடம், நிக்கோலஸ் கிட்டத்தட்ட இறந்துவிட்டதாகவும், மூளையின் செயல் இழந்து விட்டதாகவும் தெரிவித்தனர்.

நிக்கோலஸ் இல்லாத வாழ்க்கையை நினைத்துக் கூட பார்க்கமுடியாமல் மாபெரும் துயரத்துடன் நின்றுக் கொண்டிருந்த ரெக்கிடம், மேகி தயக்கத்துடன் "நம் மகன் நிக்கோலஸ் இறப்பது உறுதியாகி விட்டது, அவனது உறுப்புகளையும் திசுக்களையும் நாம் ஏன் தானம் செய்யக்கூடாது?" என கேட்கிறார்.

அந்த நிலையில், ரெக்கிடம் இரண்டு வழிகள் இருந்தன. காலம் முழுதும் அப்படி ஒரு சம்பவம் நடந்துவிட்டதே என எண்ணி உலகின் மீது வெறுப்பை அள்ளி வீசுவது அல்லது நிக்கோலஸின் உறுப்புகளை தானம் செய்வது மூலம் சில முன்பின் தெரியாத மக்களுக்கு பேருதவியாய் இருப்பது.

நிதானமாய் யோசித்த ரெக்கின் மனதில் சிறு மாற்றம் ஏற்பட்டது. "மேகி சொல்வது சரிதான், இனி நிக்கோலஸின் உடல் அவனுக்கு தேவைப் படாது, குறைந்தபட்சம் வேறு எவருக்கேனும் தேவைப்படட்டுமே" என எண்ணி அதற்கு ஒத்துக்கொள்கிறார். அந்த மாபெரும் துயர நேரத்திலும், ரெக் எடுத்த அந்த உன்னதமான முடிவு, ஐந்து முன்பின் தெரியாத மனித உயிர்களை காப்பாற்றியது.

தங்கள் நாட்டில் சுற்றுலா வந்த ஒரு வேறொரு நாட்டின் குடும்பத்திற்கு ஏற்பட்ட அந்த துயர சம்பவத்திற்கு இத்தாலி மக்கள் மிகவும் வருந்தினர். ஆனால் அந்த நிலையிலும், தங்களின் ஐந்து குடிமகன்களின் உயிரைக் காப்பாற்றிய அந்த அமெரிக்க குடும்பத்தின் தியாக குணம், இத்தாலி நாட்டு மக்களை அதிர்ச்சியிலும், ஆச்சரியத்திலும் உறைய வைத்தது.

ரெக் குடும்பத்தின் இந்த தியாக உணர்வு, இத்தாலி, பிரிட்டென் மற்றும் அமெரிக்காவின் நாழிதள்களில் முக்கிய செய்தியாக பல நாட்கள் வெளிவந்தன.

நிக்கோலஸின் ஒவ்வொரு உறுப்பும் எங்கு யாருக்கு பயன்பட்டன என்று ஒவ்வொரு கட்டமாய் ஊடகங்கள் மக்களுக்கு "நிக்கோலஸின் பரிசு" என்ற தலைப்பில் காண்பித்தன.

இத்தாலியில் அந்த சம்பவத்திற்கு பின், உறுப்பு தானம் நான்கு மடங்காக உயர்ந்தது. நிக்கோலஸின் பெயர் இத்தாலியில் பல பள்ளிகளுக்கு, சாலைகளுக்கு, பூங்காக்களுக்கு சூட்டப்பட்டது.

ரெக்கிற்கு இப்போது 80 வயதை தாண்டி விட்டது. அவர் குடும்பம், இன்று கூட நிக்கோலஸிற்கு நடந்த அந்த துயர சம்பவத்தை நினைத்து கண்ணீர் விடுகின்றனர். ஆனாலும் பல நாடுகளுக்கு சுற்றி உறுப்புகள் தானத்தைப் பற்றி பல அரங்குகளில் எடுத்துரைக்கிறார் ரெக்.

தினமும் பிரிட்டெனில் மூன்று மனிதர்கள், அமெரிக்காவில் 18 மனிதர்கள் என உலகம் முழுதும் ஆயிரக்கணக்கான மனிதர்கள், ஓராண்டில் உறுப்புகளுக்காக காத்திருக்கும் பட்டியலிலிருந்து இறக்கின்றனர். உறுப்புகள் தானம் சராசரியாக மூன்று அல்லது நான்கு உறுப்புகளை தருவதின் மூலம் மூன்று அல்லது நான்கு குடும்பத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றுகிறது என்று தீர்க்கமாக கூறுகிறார் ரெக்.

மிகவும் நேசிக்கும் ஒருவரின் உறுப்புகளை தானம் செய்ய மக்கள் ஒத்துழைக்காதது தான், தனக்குள்ள ஒரே வருத்தம் என்று குறிப்பிடும் ரெக், "எங்களுக்கு ஏற்பட்ட துயரம் போல் நடந்து தான் அது போல் ஒரு முடிவு எடுக்கும் மனநிலைக்கு யாரும் தள்ளப்படக் கூடாது" எனவும் "மக்கள் தாமாகவே முன் வந்து தானம் செய்வது பல மக்களின் உயிரைக் காப்பாற்றும்" என்கிறார்.

நிக்கோலஸ் இறந்தும், பல வருடங்களிற்கு பல மனிதர்களின் மனதில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் வாய்ப்பை ரெக் குடும்பம் ஏற்படுத்தியது.

ரெக் குடும்பத்தினர் செய்த அந்த தியா-கத்தினை போல் பல எண்ணற்ற குடும்பங்களும், தனி மனிதர்களும் நம் நாட்டிலும், மற்ற பல நாடுகளிலும் இன்று வரை மருத்துவ துறையில் தியாகம் செய்து கொண்டு தானிருக்கின்றனர்.

எத்தனையோ மருத்துவர்கள் மிக நன்றாக சம்பாதித்த பின்னும், அதையெல்லாம் விட்டுவிட்டு ஏதோ கிராமத்திலோ, ஏழை மக்கள் வாழும் பகுதிகளுக்கோ சென்று, இலவசமாக மருத்துவம் செய்வதை இன்றும் நாம் பார்த்தும், கேள்விப்பட்டும் தான் வருகிறோம். இதற்கு பல உதாரணப்புருஏர்கள் இன்றும் உள்ளனர்கள்.

இவையெல்லாம் எதற்கு? மனிதர்களின் உயிர்களை வாழவைக்க தங்களால் முடிந்தவற்றை செய்ய வேண்டும் என்ற ஒரு உயர்ந்த எண்ணம் தானே?

ஆனால், நம் சமூகத்தில் பல பெற்றோர்கள், பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் தங்கள் குழந்தைகளை மருத்துவ படிப்பிற்கு அனுப்புவதை அன்றாடம் பார்க்கிறோம்.

சக மனிதனின் உயிரை காப்பாற்றும் மருத்துவ துறை உயர்ந்த சேவை செய்வதற்கான துறை என்ற எண்ணம் நம் அனைவர் மனதிலும் தோன்ற வேண்டுமே தவிர, அந்த உயிரை வைத்து விளையாடி பணம் சம்பாதிக்க நினைக்கும் வியாபார களமாக மாற்றும் எண்ணம் வரக்கூடாது.

தனி மனிதனின் தூய்மையான சிந்தனை, சுயநலமின்மை, சமூக அக்கறை இவைகள் தான் இந்த நேரத்தின் தேவையாக உள்ளது.

மாற்றம் நம் அனைவரிடத்திலும் வர வேண்டும்.

மாற்றம் வரும் என்ற நம்பிக்கையில்,

- விமல் தியாகராஜன் *& B+ TEAM.*


## MATH & PHYSICS TUTION

**By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.**

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.



Contact: 647 340 9490/ 416 732 2228

## யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND®
Niru BRAND
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
Niru BRAND
FALUDA
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS 7 DAYS A WEEK**

**MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS**

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

**TIRE SPECIALS**
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

**FREE OIL CHANGE WITH RUST PROOFING**
$99 Car
$120 SUV

**BRAKE JOB**
STARTING FROM $159

**WATER PUMP TIMING BELT & LABOR**
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

**TRANSMISSION FLUSH**
*Starting From...*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

**ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS**
CHECK
BMW
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5

(Midland & Lawrence, rear of the building)

**CALL SUBAS DIRECT → 416-206-9489**

**Tel: 416-628-4399**

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963


IP GOLD HOUSE
22K Gold , Antique & Stone Jewellery
திருமணகால மலிவுவிற்பனை
உங்களது பழைய நகைகளை எங்களிடம் கொடுத்து மிகவும் சிறந்த விலையில் புதிய நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
IP
SPECIAL SALE
EXCLUSIVE JEWELLERY ARRIVED!
Bring this ad to get Free Nose stud!
மூக்குத்தி இலவசம்!
40 New Delhi DR. Unit 56, Markham, ON. L3S 0B5
905-554-5890




















**Free Real Estate Class -** Call: **416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

***www.vlambaram.com***

***www.tamilvanakkam.com***

